திருக்குறள் வியாச மஞ்சரி

அறத்துப்பால்

கணபதி கம்பெனியார்,
பிரம்பூர், சென்னை.

காபிரைட்]

[விலை அணா 12.

நூன்முகம்

நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர் இன்றியமையாதவர். கல்வி, கேள்வி, விடாமுயற்சி, பெருந்தன்மை முதலியவை சிறுவர்களுக்குச் சீரிய வணிகளாம். அவ்வனைத்துக்கும் கல்வி அடிப்படை. ஒருவன் தன்மனக் கருத்தைக் கல்வியறிவானன்றிப், பிறர்க்கு விளக்க முடியாது. அவ்வறிவு பேசல் எழுதல் என்று இருவகையாகும். இரண்டிலும் திருந்துவதற்கு இந்தப் புத்தகம் இருந்து தீரவேண்டும். இதில் விளக்கப் பட்டுள்ளவை திருக்குறளிற் சுருங்கியிருப்பவைகளே. நம் தமிழ் நாட்டில் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்ற அழகுக்குத் திருக்குறளினும் வேறு நூல் இல்லை. உத்தமவொழுக்கங்களை வரையறுப்பதில் திருக்குறள் ஒப்புயர்வற்றது.

இந்தப் புத்தகம் திருக்குறளின் அதிகார விஷயங்களை வியாசமாகவும், புராண கதைகளை உதாரணமாகவும் கொண்டு, முடிந்திருக்கின்றது. இஃது அறத்துப்பாலாகும். இவ்வெம் முயற்சி உபாத்தியாயர்களின் உதார குணத்தினால்தான் ஓங்கிச் செழிக்க வேண்டும்.

இங்ஙனம்,

கணபதி கம்பெனியார்.

விஷய சூசிகை

		பக்கம்
அடக்கமுடைமை, விசுவாமித்திரர்.	....	47
அருளுடைமை, சித்தார்த்தர்.	....	96
அவாவறுத்தல், பரதயோகி.	....	146
அழுக்காறாமை, விந்தியமலை.	....	63
அறன் வலியுறுத்தல், கர்ணன்.	....	13
அன்புடைமை, ததீசி முனிவர்.	....	29
இல்வாழ்க்கை, ஸக்துப்ரஸ்தர்.	....	16
இனியவை கூறல், இராவணன்.	....	35
இன்னா செய்யாமை, பரிக்ஷித்து.	....	127
ஈகை, பூரு.	....	88
ஊழ், இராமன்.	....	149
ஒப்புரவறிதல், இளையான்குடி மாற நாயனார்.	....	84
ஒழுக்கமுடைமை, வால்மீகி முனிவர்.	....	52
கடவுள் வாழ்த்து, துருவன்.	....	1
கள்ளாமை, வசுக்கள்.	....	67
கூடாவொழுக்கம், திருமால்.	....	109
கொல்லாமை, தசரதர்.	....	130
செய்ந்நன்றியறிதல், சீதை.	....	40
தவம், விசுவாமித்திரர்.	....	104
தீவினையச்சம், காள முனிவர்.	....	80
துறவு, பட்டினத்தடிகள்	....	138

நடுவு நிலைமை, யுதிஷ்டிரர்.	....	43
நிலையாமை, இரணியன்.	....	134
நீத்தார் பெருமை, சகரர்.	....	9
பயனில சொல்லாமை, சிசுபாலன்.	....	77
பிறனில் விழையாமை, இராவணன்.	....	55
புகழ், சிபி சக்ரவர்த்தி.	....	92
புதல்வரைப் பெறுதல், பகீரதன்.	....	25
புலால் மறுத்தல், வசிஷ்டர்.	....	100
புறங்கூறாமை, தக்ஷன்.	....	71
பொறை யுடைமை, யுதிஷ்டிரர்.	....	59
மெய்யுணர்தல், சரபங்கர்.	....	142
வாய்மை, கவுசிகன்.	....	117
வாழ்க்கைத் துணைநலம், நளாயனி.	....	21
வான்சிறப்பு, உஷஸ்தி.	....	5
விருந்தோம்பல், சுவேதன்.	....	32
வெஃகாமை, தக்ஷகன்.	....	113
வெகுளாமை, நிமியும் வசிஷ்டரும்.	....	124

திருக்குறள்

வியாச மஞ்சரி

அறத்துப்பால்

—(o)—

பாயிரம்

உருக்கிள ருயர்கதி ருதாச னன்மதித்
திருக்கிளர் நயனமாய்ச் சிறந்த நாயகன்
மருக்கிளர் மறைகமழ் வனஜத் தாண்மலர்
திருக்குறள் வியாசமஞ் சரியைச் சேர்க்குமால்.

திறத்துப் பார்வளர் தெய்வத் திருக்குறள்
அறத்துப் பாலுக் கணிகொள் வியாசமும்
புறத்திற் காதையும் புகலக் கயானனன்
அறத்துப் பால்வந் தருள்சரண் காக்குமால்.

—(o)—

முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து, தருவன்

கடவுளை வாழ்த்தும் வாழ்த்து கடவுள் வாழ்த்து. கடவுள் தொழிலாகுபெயர். மனம் மொழி மெய்களைக் கடந்தவ ரென்பது பொருள். சிலர் பிறப்பு இறப்புக்களைக் கடந்தவ ரென்றும் கூறுவர். கடவுள் ஒப்புயர் வற்றவர். நிலம் நீர் முதலான ஐம்பெரும் பூதங்களையும், சூரியன் சந்திரன் முதலான நவக்கிரகங்களையும், மனிதர் விலங்கு முதலான உயிர்ப்

பன்மைகளையும், படைத்தும் வளர்த்தும் துடைத்தும் வருதலாகிய பெருந் தொழில்களை அவர் விளையாட்டாகச் செய்து வருகிறார். அவர் நாள்தோறும் நமக்குச் செய்யும் நன்மைகளை நவிலத் தரமன்று. அவர் அவற்றின் பொருட்டுச் சிறிதாவது பயன் கருதுவதில்லை. தன் கைக் குழந்தையைக் காதல் கொண்டு வளர்க்கும் அன்னையைப்போலத், தாம் உண்ணுமல் நம்மை உண்பித்தும், தாம் உறங்காமல் நம்மை உறங்குவித்தும், பக்ஷமாய்ப் பரிபாலிக்கிறார். நாம் அப்படிப்பட்ட கருணாநிதியை மறவாமல் அவர் கட்டளைக்கு அடங்கியும், அவர் கீர்த்தனங்களைப் புகழ்ந்தும், பிற வுயிர்களுக்கு உதவியும் வரவேண்டும். பிற உயிர்களுக்குச் செய்யும் உதவி யாவும் கடவுளுக்குச் செய்ததே யாகும்.

காலையிலும் மாலையிலும் கடவுள் வணக்கம் இன்றியமையாதது. பெரியவர் காலையில் 'நல்லவற்றைச் செய்யவும், நல்லவர்களோடு பழகவும், நல்ல விஷயங்களைச் சிந்திக்கவும், அருள் புரியவேண்டும்' என்றும், மாலையில் 'இன்று தங்களைக்கொண்டு செய்வித்த நற்காரியங்களுக்கு நன்றி யுள்ளவர்களாகிறோம்' என்றும், நவின்று வணங்குவார்கள். நாம் முன்னர்ச் செய்த இருவினைகளுக்கும் ஈடாக இறைவன் நமக்கு இன்ப துன்பங்களை அளித்துவருகிறார். நாம் நாள்தோறும் கடவுளை வணங்குவதனால் அவர் கருணைக்கு உரிமை யாகிறோம். படித்தறிந்த பெரியவர்களுக்குக் கடவுள் பக்தி பெருமையை உண்டு பண்ணும். கற்ற அறிவிற்குப் பயன் கடவுள் பக்தியே யாகும். பிறப்பறுதலையும், வீடடைதலையும், கடவுள் பக்தி கூட்டுவிக்கின்றது. இன்னும், உலக சம்பந்தமான மன வருத்தம் மெய் வருத்தம் முதலான பலவகைத் துன்பங்களும் கடவுளைச் சரண மடைந்த மாத்திரத்தில் தொலைந்து போகின்றன.

முற்காலத்தில் சுவாயம்பு மநுவின் புத்திரனான உத்தானபாத மகா ராஜாவுக்குச் சுருசி சுநீதி யென்று இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அவர்களில் சுருசியின் வயிற்றில் உத்தமனும், சுநீதியின் வயிற்றில் துருவனும் பிறந்தனர். ஒரு நாள் உத்தானபாத மன்னவர் உத்தமனை மடியில் வைத்துக் கொண்டு முத்தமிட்டுக் கொஞ்சினர். சுருசி அருகில் நின்று சந்தோஷித்து ஆநந்த மடைந்திருந்தாள். அப்பொழுது தற்செயலாக வந்த அறியாச் சிறுவனான துருவன் அதனைக் கண்டு, தானும் உத்தமனைப்போலத் தந்தையின் மடியில் உட்காரச் சமீபத்திற் சென்றான். ஆனல், அரசர் அன்பைக் கொள்ளை கொண்டிருந்த சுருசி துருவனை அங்ஙனம் செய்ய விடவில்லை. அவள் பொறாமை மிகுந்து எதிரில் நின்று தடுத்துத், “ துடுக்குச் சிறுவனே! பேராசை கொள்ளாதே; நீ சுநீதியின் வயிற்றில் வந்து பிறந்ததனாலேயே அரசர் மடியில் அமரத் தகுதி யற்றுப் போயினை; நீ அதனை அடைவதற்கு என் வயிற்றில் வந்து பிறந்திருக்கவேண்டும்” என்று சொல்லி, அப்புறம் தள்ளிவிட்டாள்.

துருவன் தேம்பி யழுது கொண்டு, தாயார் சுநீதியிடம் சென்று, சுருசியின் செய்தியைக் கூறினன். சுநீதி பலவாறு சமாதானம் சொல்லியும் துருவன் ஆறுத லடையவில்லை. அவன் பிடிவாதத்தோடு, ‘ அம்மா! நான் தவம் செய்தாவது அரசர் மடியில் அமர்ந்திருக்க வேண்டும்; அதுவரையில் பொறாமை மிகுந்த சிறிய தாயினா லுண்டான மனக் கவலை என்னை விட்டு நீங்காது’ என்று சொல்லி, அப்பொழுதே புறப்பட்டு ஆரணியம் சென்றான்.

துருவன் ஐந்து வயதும் நிரம்பாத அறியாச் சிறுவனாதலால், அவனை ஏதேனும் உபாயத்தினல் எளிதில் திருப்பலா

மென்று, இந்திரன் நடுக்காட்டில் பலவிதமான மாயைகளைப் படைத்துத், துருவனைப் பயப்படுத்தினன். அவற்றிற் கெல்லாம் துருவன் சிறிதும் அஞ்சவில்லை. அவன் விடாப்பிடியாக அப்படியே வனம் சென்று, எதிரிற் கண்ட அகஸ்தியர் முதலான சப்த ரிஷிகளையும் வணங்கி, அவர்களுக்குத் தன்னெண்ணத்தைத் தெரியப்படுத்தினன். அவர்கள் "அன்புள்ள சிறுவனே! தவம் செய்வ தென்பது எளிய காரிய மன்று; அஃது அரிதினும் அரிது; வனத்தின் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதற்குக் கூட உனக்கு வயது நிரம்பவில்லை; நீ இப்பொழுது பட்டணத்துக்குத் திரும்பிப் போய்ச் சேர்; வயது வந்த பிற்பாடு, அவசிய மென்று தோன்றினல், மறுபடியும் புறப்பட்டு வா" என்று நயத்திலும் பயத்திலும் சொல்லித், தடை செய்தார்கள். துருவன் "பூஜ்யர்களே! நான் பகவானைக் கண்டு தரிசனம் பண்ணுமல் பட்டணம் திரும்பமாட்டேன்; அதுவரையில் என் மனத்தில் அமிழ்ந்திக் கிடக்கின்ற பெருங் கவலையும் என்னை விட்டு நீங்கமாட்டாது; இது நிச்சயம்" என்று கூறினன். அம்முனிவர்கள் துருவன் பிடிவாதத்துக்கு வியந்து, அவனுக்கு அஷ்டாக்ஷர மகா மந்திரத்தை உபதேசம் செய்து, அதனை அநுஷ்டிக்கும் விதத்தையும் அறைந்து சென்றார்கள்.

அப்புறம் துருவன் பனிமலைச் சாரலிலுள்ள ஒரு பரிசுத்த வனத்தில் அமர்ந்து, அம் மகா மந்திரத்தை விடாமல் தியானித்துக் கொண்டு, நெடுங் காலம் வரையில் தவம் செய்து வந்தான். பிற்பாடு, ஸ்ரீ மகாவிஷ்ணு அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, அவன் விருப்பம் நிறைவேறும்படி வரம் கொடுத்தது மன்றி, எவற்றிலும் உயர்ந்த சிம்சுமாரம் என்னும் சிறந்த பதத்தையும் சொந்தமாக்கிச் சென்றார். துருவன் மனக்

கவலை நீங்கித், தந்தையின் மடியையும் அரசாட்சியையும் அடைந்து, ஆயிரம் வருஷம் வரையில் இந்தப் பரந்த வுலகத்தைப் பரிபாலித்து வந்து, அப்புறம் சிம்சுமார பதத்தையும் பெற்றுச் சிறந்து விளங்கினன். அந்தப் பதத்தைத் தான் இப்பொழுது துருவ பதம் என்று சொல்கிறார்கள். ஆதலால், கடவுளை அடைந்தா லல்லாமல், எப்படிப்பட்டவர்க்கும் மனக் கவலை நீங்கமாட்டாது. மன விருப்பமும் நிறைவேறாது.

—பாகவதம்.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்,
மனக்கவலை மாற்ற லரிது.

—(౧)—

2—வான்சிறப்பு, உஷஸ்தி

வான் சிறப்பென்பது மழையின் சிறப்பைத் தெரிவித்தலாம். வான்-இட வாகு பெயர். உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நன்றாய் நடப்பதற்கு மழை அவசியமானது. மழை உலகத்துக்கு ஒப்புயர்வற்ற அமுதம் போன்றது. உணவு முதலியவற்றை நமது வசமாக்கி விட்ட கடவுள்,மழையையும் அப்படியாக்காமல், தாமே வைத்திருந்து உபயோகத்துக்குத் தக்கபடி மேக வடிவமாக்கி, அவ்வப்பொழுது பெய்வித்து வருகிறார்.

மழையின் பெருமை மதிப்பில் அடங்காது. அஃது உலகத்தைச் செழிப்பிக்கின்றது.உணவைஉண்டுபண்ணுகின்றது. உயிர்களை வளர்க்கின்றது. மழை வளத்தினால்தொழில் வளம் பெருகும். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் மழை நடத்திவருகின்றது. இன்னும் மழை, உணவை உண்டாக்கித் தருவதோடு தானும் உணவாகிப்

பயன்படுதலால், அதன் சிறப்பு இரட்டிக்கின்றது. தவம், தானம், தெய்வபூஜை முதலிய நற்கருமங்கள் யாவும் மழையை முதன்மையாய்க் கொண்டு நடை பெறுகின்றன.

மழை பொழியாமல் பொய்க்குமானல், பசிப்பிணி உயிர்களை வதைத்து வாயில் போட்டுக்கொள்ளும். மழைத்துளியைப் பெற்றல்லாமல், ஓரறிவு உயிராகிய புல்லும் உலகத்தில் ஓங்கி வளராது. ஆனல், நல்லொழுக்கமும் நீதியுமுள்ள விடத்தில் மழை, வளம் சுரந்து பெருகும். அவ்விரண்டும் குன்றிய விடங்களில் மழை அடியோடு பொழியாமலாவது, அன்றி, அதிகமாய்ப் பொழிந்தாவது, உபத்திரவத்தை உண்டுபண்ணும். குவலயத்தில் மழை இல்லாவிட்டால், கொடுக்கொழிலும்கூக்குரலுமேமிகும். முக்காலமும்உணர்ந்த முனிவர்களையுங்கூட வயிற்றுப் பசி விடாமல் வாட்டுகின்றபடியினல், க்ஷாம காலங்களில் அவர்கள் பெருமையும் பாழ் படுகின்றது.

முன்னொரு சமயம் உலகத்தில் வருஷக் கணக்காக மழை பொழியாமல் இருந்தது. அதனல்,மரங்கள் யாவும்உலர்ந்தன. புற்கள் வேரும் தீய்ந்தன. நிலத்துக் குள்ளிருந்த கிழங்கின் முளைகளும் கரிந்தன. ஆறு, குளம், மடு முதலான நீர்நிலைகளும் தண்ணீரில்லாமல் வரண்டன. கானல் நீரும் அதனுலுண்டான வியர்வை நீரு மன்றி, வேறு நீர் கிடைக்கவில்லை. முடிவாய்ச் சொல்வோமானல், உயிர்களின் உடம்பி லுள்ள உதிர நீரும் உலர்ந்து போயிற்று. எளியவர்களை வலியவர் அடித்துத் தின்னத் தொடங்கினர்கள். நாட்டில் நான்கு பக்கங்களிலும் 'பஞ்சம் பஞ்சம்! பசி பசி! கொலை கொலை!' என்ற கூக்குரல் அதிகமாயிற்று.

அப்படிப்பட்ட மிகவும் கொடிய வற்கட காலத்தில் காஸ்மீர தேசத்தைச் சார்ந்த ஒரு வனத்தில் உஷஸ்தி யென்று ஓரந்தணர் இருந்தார். அவர் சாம வேதத்தைப் பொருளுடன் ஓதி யுணர்ந்தவர். ஒழுக்கத்தில் உயர்ந்தவர். யாகங்களை நடத்துவிக்கின்ற எல்லாச் செயல்களையும் நன் றாய்த் தெரிந்தவர். பெரும்பாலும் அவர் இல்லாமல் அந்தப் பக்கங்களில் வேள்வி நடப்ப தில்லை. பஞ்சத்தின் கொடுமையினால் அந்தணரும் அரசரும் வேள்வி செய்ய வெண்ணுவதற்கும் தைரியம் இழந்து தவித்தார்கள். உஷஸ்தி என்ன செய்வார்! 'நின்று தின்றால் குன்றும் குறையு மல்லவா!' அவரிடம் இருந்த பொருள்கள் செலவழிந்து போயின. சிலநாள் வரையில் வனத்தில் அருமையாய்க் கிடைத்த கரிந்துபோன கிழங்குகளைக் கொண்டு காலம் கழிக்கலானார். அப்புறம், அதுவும் அரிய தாயிற்று. உலர்ந்த சருகுகளை உட்கொண்டு பின்னும் சிலநாள் போக்கினார். பிற்பாடு, அவற்றிற்கும் பஞ்சம் வந்தது. அவரைப் போன்ற அந்தணர், இருந்த விடமும் தெரியாமல் எத்தனையோ நாட் களுக்குமுன் இறந்துபோய் விட்டார்கள்.

உஷஸ்திக்கு ஒன்றும் தோன்ற வில்லை. அவர் மனைவி யோடு மூன்று நாட்களுக்கும் மேலாகப் பட்டினியும் கிடந்து வருந்தினார். அவயவங்கள் வேலை செய்யச் சக்தி யற்று அடங்கத் தொடங்கின. முடிவில், எப்படியாவது சிறிது உணவு சம்பாதிக்க வேண்டும் என்று, அந்த உயர்ந்த அந்த ணர் மனைவியோடு அடுத்த பட்டணம் போனார். அங்கும் பல வீடுகள் மனிதர் நடமாட்டம் இல்லாமல், பாழ்ப்பட்டுக் கிடந் தன. அவர் குடியிருந்த சில வீடுகளை அடைந்து, "தரும வான்களே! உயிர் போய்விடுகின்றது; ஏதாவது கொஞ்சம்

உணவு தாருங்கள்' என்று யாசித்தார். அவர்கள் "ஐயா! நாங்கள் என்ன செய்யட்டும்! குழந்தைகளும் வாடிப் போயின; எங்கள் வயிறு உணவு கண்டு எத்தனையோ நாட்களாயின; மனிதரையே மனிதர் தின்னுகின்ற இந்த வற்கட காலத்தில் நாங்கள் எங்கிருந்து உணவு உதவுவோம்? தாங்கள் வேறு வீடு பார்த்துச் செல்லுங்கள்" என்று சொல்லி விட்டார்கள். உஷஸ்தி அந்தப் பட்டணம் முழுவதும் திரிந்து யாசித்தும்கூட ஒருவராவது உண்டி யுதவ வில்லை. அவர் வாடிய முகத்தோடு மனைவியை அழைத்துக்கொண்டு விதி யில்லாமல் வனத்துக்குத் திரும்பினார்.

அப்பொழுது அந்தப் பட்டணத்தின் ஒரு கோடியில் இருந்த மகாமாத்திரன் என்ற யானைப்பாகன் ஒருவன் அவர் பரிதாப நிலைமைக்கு வருந்தி, "ஐயா பெரியவரே! க்ஷாமத்தின் கொடுமையினால் தருமங்கள் தொலைந்தன; ஒழுக்கமும் தவமும் ஒடுங்கின; என்ன செய்யலாம்? இது காலத்தின் கோலம்; என்னிடத்தில் கொஞ்சம் பயற்றுச் சுண்டல் இருக்கின்றது; அரசர் யானைக்காக அதனைத் தினமும் அளித்துவருகிறார்; யானை தின்ற மிகுதியை நானும் என் மனைவியும் தின்று, சிறிது பசி யாறுவோம்; இப்பொழுது எங்கள் பசியைக் காட்டிலும் உங்கள் பசி அதிகமா யிருப்பதனால் சிறிது கொடுக்கிறேன்; பெற்றுக் கொள்ளுங்கள்; இப்படிப்பட்ட வற்கட காலங்களில் வித்தியாசம் வருக்க லாகாது" என்று சொல்லித், தன்னிடம் இருந்த பயற்றுச் சுண்டலைக் கொடுத்தான். உஷஸ்திக்குக் கிடைக்கும் வழி வேறு இல்லாதபடியினால் அவன் கொடையைப் புகழ்ந்து பெற்றுக் கொண்டு, மனைவியும் தாமும் தின்று, ஆறுத லடைந்தார். ஆதலால், மழை இல்லாவிட்டால், இல்லறம் துறவறமாகிய இரண் டறங்களும் இனிது நடக்கமாட்டா. —மகாபாரதம்.

தானம் தவமிரண்டும் தங்கா; வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

—(o)—

3—நீத்தார் பெருமை, சகரர் அழிவு

நீத்தார் பெருமை யென்பது முற்றத் துறந்த முனிவரது பெருமையைக் கூறுதலாம். பிறப்புத் துன்பத்தையும், வீட் டின்பத்தையும் உள்ளபடி யுணர்ந்து, துன்பம் நீங்கி இன்பம் அடைதற் பொருட்டு, அகப் புறப் பற்றுக்களை அடியோடு துறந்தவர்க்கு முனிவர் என்று பெயர். அகப் பற்றுவது, நான் என்னும் அகங்காரம். புறப் பற்றுவது, எனதென்னும் அபிமானம். உலகத்தின் விதிகளையும் விலக்குக்களையும் ஒழுங்கு செய்வதற்கு அப்படிப்பட்ட பெரியவர் அவசியமானவர்கள்.. செய்தற் கரிய எல்லாக் காரியங்களையும் அவர்கள் மிகவும் எளிதில் செய்து முடிப்பார்கள்.

அவ்வகைத் துறவிகள் ஆன்மாக்களின் பொருட்டுப் பாடு படுதலையே தங்களுக்குப் பூஷணமாகப் பூண்டு விளங்குவார்கள். அவர்கள் உழைப்பு, மன வுழைப்பு, வாக் குழைப்பு உட லுழைப்பென்று மூன்று வகைப்படும். வெயி லென்றும், மழை யென்றும், குளி ரென்றும் பாராமல், உடலை வருத்தித் தவம் செய்து, அந்தத் தவப் பயனைப் பிறர்க்குப் பயன் படச் செய்வது மன வுழைப்பின் வகை. நல்லொழுக்கங்கள் இவை யிவை யென்று, பலரும் கேட்கப் பிரசங்கித்தும், அவற்றை அனைவரும் உணர்ந்து கொள்ளும்படி சரித்திரங்களாகச் செய்யுள் செய்து உதவியும், மனித சமூகத்தை நல்ல வழியில் திருப்புவது வாக் குழைப்பின் வகை. பிணி துன்பம் முதலிய வற்றால் வருந்தும் உயிர்களுக்குத் தம் உடலும் பொரு

னும் உபயோகமாகும் விதத்தை உணர்ந்து உதவி செய்வது உடலுழைப்பின் வகை.

நல்லொழுக்கத்தை வளர்ப்பதற்குத் தன்னிடத்திலுள்ள தீயவொழுக்கங்களைக் களைந்தெறியவேண்டும். ஒருவன் தன் தோட்டத்தி லுள்ள பூஞ் செடிகளையும், பழ மரங்களையும், செழிப்பாக்க விரும்பினால், அவற்றை நாசம்செய்கின்ற பூச்சிப் புழுக்களை விலக்கியும், புல் பூண்டுகளைப் பிடுங்கியும், எருவிட்டுக் கொத்தியும், தண்ணீர் பாய்ச்ச வேண்டு மன்றோ? உலகத்தின் சீர் திருத்த சம்பந்தமாகத் தங்கள் உடல் பொருள் ஆவிகளை ஒருங்கே ஒப்புவித் திருக்கின்ற பெரியவர்கள், தங்கள் உழைப்பிற்கு இடையூறு செய்கின்றவர்களை எளிதில் விடமாட்டார்கள். கணமும் பொறுக்காமல் கடுந் தண்டனை விதிப்பார்கள். அதற்குத்தான் சாபம் என்று பெயர். அந்தச் சாபத்தை அவர்கள் தவிரப் பிறரால் அகற்ற முடியாது.

முன்னர்ச் சூரிய குலத்து அரசரான சகர சக்ரவர்த்திக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருத்தியின் பெயர் கேசினி. மற்றொருத்தியின் பெயர் சுமதி. கேசினியின் வயிற்றில் அஸமஞ்சன் என்றவனும், சுமதியின் வயிற்றில் சகரர் என்ற அறுபதினாயிரம் பிள்ளைகளும் பிறந்தார்கள். அஸமஞ்சன் சிறு பிராயத்தில் தன்னுடன் விளையாட வருகின்ற சிறுவர்களை யெல்லாம் சரயு வாற்றில் எறிந்து, அவர்கள் முழுகியும் எழுந்தும் கஷ்டப்படுவதைக் கண்டு, களித்துக்கொண் டிருந்தான். பிள்ளைகளை இழந்தவர் புலம்பிக்கொண்டு, அந்தச் செய்தியை அரசரிடம் வந்து அறிவிக்கத் தொடங்கினார்கள். சகர மன்னவர் தம் மூத்த மகனது தீச்செயலை உணர்ந்து, அவனை அரண்மனையிற் சேர்க்காமல், வெளியில் துறத்திவிட்டார்.

சகரர்கள் சௌரியம், சாமர்த்தியம், சாதுரியம் முதலிய வற்றில் நிகரற்று விளங்கியிருந்தார்கள். அவர்கள் சிறு பிராயத்திலேயே அரசர்க்கு அவசியமான ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்த படியினால், பகையரசர்கள் சகரர் பெயரைக் கேட்டதும் கிடுகிடு வென்று நடுங்கிப் போவார்கள். சக்ரவர்த்தி புத்திரர்களுடைய பராக்கிரமத்தைக் கண்டு, அவர்கள் உதவியினால் அசுவமேதம் என்னும் அரிய வேள்வியைச் செய்யத் தொடங்கினார்.

வேள்விக் குதிரை விதிப்படி பூமியை வலம்வரச் சென்றது. ஆயுத பாணிகளான அநேகம் போர்வீரர்கள் குதிரையைக் காத்துக்கொண்டு போனார்கள். உலகத்தில் ஓரரசராவது அந்தப் பரிமாவைப் பிடித்துக் கட்டிப் போர்செய்ய வரவில்லை. சகரர்களின் பராக்கிரமத்துக்குப் பயந்து, காணிக்கை கொடுத்து வணங்கிவிட்டார்கள். தேவர்க் கரசனான இந்திரனுக்கு அந்த வேள்வி தன் அரசாட்சிக்குத் தீங்கைத் தருமென்று தெரிந்தது. அதனால், அவன் ஒருவர்க்கும் தெரியாமல், அந்தக் குதிரையைப் பாதாளத்தில் பெருந் தவம் செய்துவந்த கபில முனிவரின் ஆச்சிரமத்தில் விட்டுப் போய் விட்டான்.

சகரர்கள் அவ்வசுவத்தை நாடி, அவனி முழுவதும் அலைந்தார்கள். எந்த விடத்திலும் குதிரையைக் காணவில்லை. அனைவரும் கருவம் கொண்டவர்களாதலால், பாதாளத்தில் தேடப் பிரயத்தனம் பண்ணினார்கள். அங்குச் செல்வதற்குச் சரியான வழி அகப்படவில்லை. அனைவரும் பராக்கிரமத்தினால் நிலத்தைக் கெல்லி வழிச் செய்துகொண்டு, மிகவும் வருத்தத்தோடு பாதாளம் புகுந்தார்கள். அங்கே ஒரு வனத்தில் வேள்விக் குதிரை மேய்ந்துகொண் டிருந்தது

அவர்கள் தங்கள் முயற்சிக்குப் பலன் கிடைத்ததென்று களித்துக், குதிரையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனாலும், அங்குக் குதிரையைக் கொணர்ந்தவனைக் கண்டு பிடியாமல் திரும்புவது தங்கள் பராக்கிரமத்துக்குப் பெரிய களங்கமாகும் என்று, அனைவரும் அவனைத் தேடிச் சென்றார்கள்.

அவ்விடத்தில் குளிர்ச்சியான ஒரு ஆற்றங் கரையில் கபிலர் என்ற ஒரு மகா முனிவர் தவம் செய்துகொண் டிருந்தார். சகரர்கள் தங்கள் குதிரையை அவரே களவு செய்து கொணர்ந்திருக்க வேண்டும் என்று கருதி, அவ்வனத்தை அடியோடு அழித்தும், ஆச்சிரமத்தில் மாமிசங்களையும் எலும்புகளையும் இறைத்தும், அவரையும் வாயில் வந்தபடி தூஷித்தும், தொந்தரவு பண்ணினார்கள். அம்மகா முனிவர் யோகத்தில் இருந்தபடியினால் அரச குமாரர் செய்த அக்கிரமங்களை அறியக் கூடவில்லை. யோகம் கலைந்த பிற்பாடு, அவ் வலங்கோலங்களைக் கண்டு, அடங்காக் கோபம் கொண்டு, விழித்து நோக்கினார். பலம் பராக்கிரமம் குலம் கல்வி கருவம் முதலியவற்றில் ஒப்புயர்வற்ற அந்தச் சகரர் அறுபதி னாயிரவரும் முனிவர் கோபக் கனலில் எரிந்து, அந் நிமிஷத்திலேயே சாம்பராய் விட்டார்கள். அதனைத் தடுத்துக் கொள்ள அவர்களால் முடியவே யில்லை. ஆதலால், உத்தம குணங்களுக்கு உறைவிடமாகிய உயர்ந்தவர்களின் கோபத்தை ஒரு நிமிஷமும் தாங்க முடியாது. —இராமாயணம்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேனும் காத்த லரிது.

—(o)—

4—அறன் வலியுறுத்தல், கர்ணன்

வேதங்களிலும் அவற்றை அநுசரித்த தரும சாஸ்திரங்களிலும் 'செய்யவேண்டும்' என்று வரையறுத்த வற்றிற்கு அறம் என்று பெயர். அறு—பகுதி, அம்-தொழிற்பெயர் விகுதி. இதன் எதிர்மொழி மறம். 'செய்ய வேண்டாம்' என்று மறுப்பது. அறம் தன்பொருட்டுச் செய்வது, பிறர்பொருட்டுச் செய்வதென்று, இரண்டு வகைப்படும். இவ்விருவகை அறங்களும் எண்ணத்திலும் தொழிலிலும் ஏற்றத் தாழ்வு கொண்டிருக்கும். தன் பொருட்டுச் செய்தலிலும் பிறர் பொருட்டுச் செய்தலில் பயன் அதிகமானது. எப்படியென்றால், செய்தலில் ஒன்றும், அதனை பிறர் அநுபவித்தலில் ஒன்றுமாக அதன் பலன் இரட்டிக்கின்றது. கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றில் ஒருவன் மேலும் மேலும் உயர முயலுதல் தன் பொருட்டுச் செய்தலாகும். கற்பித்தல், பிரசங்கித்தல், பாடசாலை, சத்திரம், சாவடி, சாலை, சோலை அமைத்தல் முதலியவை பிறர்பொருட்டுச் செய்தலாகும். பெரியவர் பிறர்பொருட்டுச் செய்தலைத்தான் பேரறமென்று புகல்வர்.

அறம் கடவுள்போலத் தனக்கென்று ஒரு வடிவத்தையும் கொள்ளாமல், செய்தவன் செயல்களையெல்லாம் சொந்த வடிவங்களாய்க் கொள்ளும். கடவுளை அற வடிவனென்றும் அறைவர். ஒருவனுக்கு அறம் செய்தலினும் உயர்ந்த செல்வமும், அறம் செய்யாமையினும் இழிந்த தரித்திரமும், வேறு கிடையாது. அறத்தால் வரும் இன்பமே உயர்ந்த வின்பமாகும். பிற பயனற்றவை. மனிதனை விடாமல் தொடரும் நிழல் போல, அறமும் தன்னைச் செய்தவனை விடாமல் தொடர்ந்து செல்லும். இன்னும் அறம், வழிப் போக்கனுக்குக் கட்டு

முது போலவும், நோயாளிக்கு நன்மருந்து போலவும் நின்று, செய்தவனைச் சமயத்தில் காப்பாற்றும். செய்தவனைத் தீங்கினின்றும் தப்புவிக்கும். பாபத்தைக் கெடுக்கும். புகழை வளர்க்கும். புண்ணியத்தை மிகுக்கும்.

முற்காலத்தில் சூரியனுக்குக் குந்திதேவியின் வயிற்றில் கர்ணன் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் இளம்பிராயம் தொடங்கி யாசகர் வந்து எதனைக் கேட்டாலும் இல்லை யென்னுமல் ஈந்து வருவான். யாசகர்க்குக் கொடுக்கக் கூடாத எந்தப் பொருளும் அவனிடம் இருந்ததில்லை. அவன் இயற்கையிலேயே எல்லாவற்றையும் கொடுப்பவன். இம்மையில் செய்த வொன்று மறுமைக்கு உதவு மென்னும் பயனைக் கருதிக் கொடுப்பவன் அல்லன். இவ்வுண்மையைப் பின்வரும் உதாரணத்தால் அறியலாம்.

ஒரு சமயத்தில் கர்ணனுடைய குழந்தைப் பருவத்தில் அகஸ்திய முனிவர் அவனைக் காண வந்தனர். அந்தத் தபோதனர் புன்சிரிப்போடு அழகாய்த் தவழ்ந்து நடக்கின்ற கர்ணனை அப்படியே அணைத்துக்கொள்ள விரும்பிக், 'குழந்தாய்! இங்கேவா!' என்று கையை நீட்டினர். கர்ணன் 'இவர் நம்மை இன்சொற் சொல்லி யாசித்துக், கையை வந்துகின்றார்' என்று எண்ணிக்கொண்டு, தன் நெற்றிச் சுட்டியை அறுத்துக் கொடுக்க வந்தான். முனி புங்கவர் அவன் செயலுக்கு ஆச்சரியமடைந்து, 'குழந்தாய்! நீ உலகத்தில் இப்படியே ஒப்புயர் வற்ற தியாகியா யிரு' என்று அநுக்கிரகித்துப் போனார். இதனால், அவன் இயற்கையில் ஈபவன் என்பது எல்லாருக்கும் வெளியாகின்ற தல்லவா!

அவன் பெரும் புகழ் உலக முழுவதும் உயர்ந்து பரவிற்று. அவன் துரியோதனனுக்கு நெருங்கின நண்பன். துரி

யோதனன் சந்தோஷத்தின் பொருட்டுத் தன் உயிரையும் உதவும் உண்மைச் சிநேகிதன். வில்லாளிகளில் முதன்மைபெற்ற அர்ச்சுனனுக்கும் அவனுக்கும் வைத்தியின் முதிர்ச்சியினால் இளம் பிராயம் தொடங்கிப் பெரும் பகை வளர்ந்தது. இருவரும் வெற்றி கொள்வதன் பொருட்டுப் பலவிதத்திலும் பிரயத்தனித்து வந்தார்கள். பிற்பாடு, பாண்டவருக்கும் துரியோதனனுக்கும் பாக விஷயமாகப் பெருஞ் சண்டை நடந்தது. அவர்கள் சண்டை செய்த இடம் குருக்ஷேத்திரம் என்ற பெரிய மைதானம். இரு திறத்தாருக்கும் சண்டையில் உதவி செய்வதன் பொருட்டு இந்தியாவில் இருந்த எல்லா அரசர்களும் தங்கள் படைகளோடு வந்து திரண்டிருந்தார்கள். அந்தப் பெரிய சண்டை பதினெட்டுநாள் காலும் பயங்கரமாய் நடந்தது.

முதலில் பத்துநாள் வரையில் பிதாமகராகிய பீஷ்மர் துரியோதனன் பொருட்டுப் படைத் தலைமை வகித்துப்,பராக்கிரமத்தைக் காட்டினர். அப்புறம் ஐந்துநாள் வரையில் ஆசாரியரான துரோணர் அந்த வேலையில் அமர்ந்து அமர் செய்து அழிந்தார். பின்னர்க் கர்ணனுக்கு அந்த வேலை கிடைத்தது. பதினேழாம் நாள் கர்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் கோர யுத்தம் நடந்தது. இரண்டு வீரர்களும் வெற்றி கொள்ள வேண்டும் என்று, தங்கள் சாமர்த்தியங்களைக் காட்டி நெடுநேரம் வரையில் சண்டை செய்தார்கள்.

அப்பொழுது அர்ச்சுனன் வில்லிலிருந்து சென்ற விண்ணவர் கணைகள் கர்ணன் உடம்பைத் தொளைத்துக், காட்டாற்று வெள்ளம்போல உதிரத்தைப் பெருக்கின. கர்ணன் கணையின் மிகுதியினால் தேர்த்தட்டில் விழுந்து, மூர்ச்சை அடைந்து போனான். அஸ்திரங்கள் ஒன்றோடொன்று

உராய்ந்து கொள்வதிலிருந்து உண்டாகின்ற நெருப்பும் புகையும் நாற்புறமும் பரவின. அதனால், பகைவன் விழுந்து கிடப்பதைப் பார்த்தன் தெரிந்து கொள்ள வில்லை. கர்ணன் எதிர்த்து நிற்பதாகவே நினைத்துப், பாணங்களை மேலும் மேலும் பிரயோகித்துக் கொண்டிருந்தான். சுற்றிலும் நின்று சண்டை செய்கின்றவர்களுக்குக்கூடக் கர்ணன் நிலைமை கொஞ்சமும் தெரியாமற் போயிற்று.

அப்பொழுது கர்ணன் அதுவரையில் செய்திருந்த அறப் பயன் யாவும் ஒரு மறப் படை வீரன் போல உருப் பெற்றுக் கொண்டு வந்து, அர்ச்சுனனுடைய எல்லா அஸ்திரங் களையும் விழுங்கிக், கர்ணன் களை தெளிந்து எழுந்திருக்கும் வரையில் காப்பாற்றி நின்றன. பிற்பாடு, கர்ணன் களை தெளிந் தெழுந்து, கிரீடியோடு கொடும்போர் புரிந்து, கடுந் திறல் காட்டினன். அறப் பயன் வந்து உதவி செய்யா திருந் தால், கர்ணன் அப்பொழுதே இறந்துபோ யிருப்பா னல் லவா? ஆதலால்,யாவரும் தருமத்தை விரும்பிச் செய்யவேண் டும். அந்தத் தருமம் செய்தவனுக்குச் சமயத்தில் வந்து துணை செய்து நிற்கும். —மகாபாரதம்.

அன்றறிவா மென்னு தறஞ்செய்க ; மற்றது
போன்றுங்கால் பொன்றுந் துணை.

—(o)—

இல்லற வியல்

5—இல்வாழ்க்கை, ஸக்ருஹஸ்தர்

மனைவியோடு வாழும் வாழ்க்கைக்கு இல்வாழ்க்கை என்று பெயர். இல்—வீடு. இல்லை ஆள்கின்றவள் இல்லாள். தாய் தந்தை, அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, இவர்கள் அடங்கின சமூகத்தைக் குடும்பம் என்று கூறுவர். இவர்

களிற் சிலர் குறைந்தாவது, மருமகன் மருமகள் முதலிய இன்னும் சிலர் மிகுந்தாவது, குடும்பம் இருக்கலாம். ஆனால், தலைவன் தலைவி இல்லாமல் மாத்திரம் குடும்பம் இராது, குடும்பத்துக்கு இன்றியமையாத பொருள்களை வெளியிற் சென்று வருந்திக் கொணர்தற்குத் தலைவன் கடமைப் பட்டவன். அங்ஙனமே பண்டங்களைப் பாதுகாத்தும், அளவறிந்து செலவிட்டும், அறுசுவை அன்னம் ஆக்கிப் படைத்தும், குடும்பத்தைப் பாதுகாப்பதற்குத் தலைவி கடமைப் பட்டவள்.

கண் இரண்டாயினும் காணப்படும் பொருள் ஒன்றேயானது போலத், தலைவனும் தலைவியும் உருவத்தால் இருவராயினும் மனத்தால் ஒருவராகியே ஒன்றுபட் டிருப்பார்கள். அவர்கள் வாழ்க்கை அன்பினால் பிணிப்புண் டிருக்கும். பிதிர் கடன், தெய்வ பூஜை, விருந் தோம்பல், சுற்றம் தழுவல், குடும்பம் காத்தல் என்று, அவர்கள் செய்யும் கடமை ஐந்து வகைப்படும். சந்ததியைப் பெருக்கலால் பிதிரரும், பூஜை புரிதலால் தெய்வமும், உண்டியுதவலால் விருந்தினரும், சம்பந்தம் செய்தல், அளவளாவல், ஆடை அணி நல்கல் முதலியவற்றால் சுற்றமும், சிறுவர் சிறுமிகளுக்குப் படிப்பும் ஒழுக்கமும் கற்பித்தல், மண முடித்தல், குடும்பம் மிடியில் வருந்தாதபடி காத்தல் முதலியவற்றால் குடும்பமும் களிப்படைகின்றனர்,

குடும்பத்துக்குத் தங்கள் ஒழுக்கமே மேல்வரிச் சட்டம் என்பதைத் தலைவனும் தலைவியும் தெரிந்து உணர்ந்து, பழிக்கும் பாபத்துக்கும் பயந்து, தங்கள் கடமையை அன்புடன் செய்து வரவேண்டும். தவம் செய்வதிலும் தரும வழியில் நடத்துகின்ற இல்வாழ்க்கை சாலச் சிறந்தது. உலகத்துக்கு உண்மையில் உழைக்கின்றவன் இல்வாழ்வானே

யாவன். வித்தியார்த்தி, வனவாசி, துறவி யென்ற மூவரும் இல்வாழ்வானையே எதிர்பார்த் திருக்கிறார்கள். இல் வாழ்வான் பெருமை எண்ண முடியாதது. எல்லாச் சிறப்பும் இல் வாழ்வானுக்கு எளிதில் எய்துகின்றன. எல்லாப் புராணங்களும் இல்வாழ்க்கையின் சிறப்பையே எடுத்துக் கூறுகின்றன.

முன்னர் வனத்தில் ஸக்துப்ரஸ்தர் என்று ஒரு உயர்ந்த அந்தணர் இருந்தார். அவர் எல்லாச் சாஸ்திரங்களையும் கற்றறிந்த பிற்பாடு, இல் வாழ்க்கையைக் காட்டிலும் வேறு ஏற்றமுள்ள வாழ்க்கை இல்லை யென்று தெரிந்து, மணம் செய்துகொண்டு அவ்வாச்சிரமவொழுக்கத்தை அநுசரித்துப், புத்திரனுக்கும் பருவத்தில் மணம் செய்வித்து வாழ்ந்து வந்தார். அவர்கள் வாழ்க்கை அனைவரும் கண்டு ஆச்சரியப் படும்படி அன்பும் ஆதரவுமாக அழகாய் விளங்கிற்று. அவர்கள் தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், குடும்பம் என்ற ஐவகையினருக்கும் செய்யவேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்தார்கள். அந்தணர் தொழிலின் கடைசியான இரத்தலை அவர்கள் என்றும் கருதுவ தில்லை. வனத்தில் இருந்துகொண்டு விதம் விதமான சுகங்களை அநுபவித்துக் கழித்தார்கள்.

ஒரு சமயத்தில் யார் செய்த தவக் குறையினாலோ அவர்கள் இருந்த காட்டில் வருஷக் கணக்காக மழை பொழியாமல் பெரும் பஞ்சம் பரவிப் பீடிக்கத் தொடங்கிற்று. கானல் நீரை அல்லாமல் மழை நீர் என்பது மருந்துக்கும் கிடைக்கவில்லை. தாய்மார்கள் சிறுவர் கையில் உள்ளவற்றைப் பிடுங்கித் தின்று, வயிறு வளர்க்க விரும்பினார்கள். வேத சாஸ்திரங்களின் ஒலி இருந்த விடமும் தெரியாமல் அடியோடு மறைந்து, 'பசி பசி! உணவு உணவு! தண்ணீர்

தண்ணீர் !' என்று, இரவும் பகலும் கதறுகின்ற அரற்றொலி உலகத்தில் பரவி நிறைந்தது.

அப்படிப்பட்ட வற்கட காலத்திலும் ஸக்துப்ரஸ்தர் பிறரிடம் சென்று யாசிக்க வில்லை. அவரும் அவர் குடும்ப மும் பசியால் வாடியும், வெயிலால் வருந்தியும், பட்டினி கிடந்தும், வருத்தத்தோடு காலம் கழித்தார்கள். ஒரு தரு ணத்தில் மூன்று நாட்கள் வரையிலும் வனத்தில் ஒருவித மான உணவும் அவர் குடும்பத்துக்குக் கிடைக்காமற் போயிற்று. அந்த உயர்ந்த அந்தணர் தம் குடும்பத்தோடு எங்கேனும் உணவு கிடைக்குமா வென்று ஆராய்ந்து செல் கையில், கடவுள் கருணையினால் அறுவடையான வயல் ஒன் றில் சில தானிய மணிகள் சிந்திக் கிடக்கக் கண்டார். நித்திய தரித்திரன் பொற்குவை பெற்றதுபோல அவர்களுக்கு அள வில்லாத ஆநந்தம் உண்டாயிற்று. பின்னர் அனைவருமாய்ச் சேர்ந்து, அந்நெல் மணிகளைப் பொன்மணியினும் போற்றிப் புகழ்ந்து, பொறுக்கி யெடுத்து வந்தார்கள்.

அதனைக் குற்றிச் சமைக்கப் பற்றாத படியினால், மாவாக அரைத்துக், கடவுளுக்கு நிவேதித்து உண்ணத் தொடங்கி னார்கள். அப்பொழுது வாரக் கணக்காக உணவைக் கண் டறியாமல் மாமிசம் வற்றி, மேனி யுலர்ந்து, எலும்பெடுத்த அந்தணர் ஒருவர் நடை தள்ளாட, நாக் குழறத், தடியை ஊன்றிக்கொண்டு, மெள்ள மெள்ள அவர்கள் குடிசையை நாடி வந்தார். தருமம் தெரிந்தவர்களிற் சிறந்த ஸக்து ப்ரஸ்தர் அவருக்கு முகமன் சொல்லி, ஆசனம் அளித்து இருக்கப் பண் ணினார். விருந்தினருக்கு வார்த்தை சொல்லவும் சக்தி யில்லை. அவர் உணவு வேண்டும் என்பதைக் குறிப்பால் அறிவித்தார். ஸக்து ப்ரஸ்தர் தம் நிலைமையினும் அவர் நிலைமை கேவலமா

யிருத்தலை உணர்ந்து, “பூஜ்யரே! தாங்கள் கவலை கொள்ள வேண்டாம்; இல் வாழ்வோனுக்கு விருந்தினர் என்றும் இன்றி யமையாதவர்; அதிதிக்கு அன்ன மிடாதவன் அதிதியின் பாபத்தை அடைந்து வருந்துகின்றான்; என் வீட்டில் உள்ள வற்றைத் தாங்கள் உண்டு பசியாறிச் செல்லுங்கள்” என்று இன்சொற் சொல்லித், தாம் வைத்திருந்த மாவோடு மனைவி யின் மாவையும் கொடுத்து உபசரித்தார்.

அது விருந்தினருக்கு அரை வயிற்றுக்கும் பற்றவில்லை. அவர் அந்த மாவை உண்டு, “ஐயா! தாங்கள் அன்பு கொண்டு அளித்த மா என் பசித் தீயை விறகிட்டு வளர்த்து விட்டது; ஏற்கெனவே எரிந்து கொண்டிருந்த பசித்தீ இப்பொழுது அதிகமாய் வருத்த ஆரம்பிக்கின்றது; அஃது அடங்கும் வண்ணம் இன்னும் கொஞ்சம் உணவு தரவேண்டும்” என்று பல்லைக் காட்டிக் கெஞ்சினார். ஸக்துப்ரஸ்தர் மகன் கையில் இருந்த மாவைக் கொடுத்தார். விருந்தினர் திருப்தி யடைய வில்லை. முடிவில், மருமகள் தன் பங்கு மாவையும் கொடுக்க, அதனையும் விருப்பத்தோடு வாங்கி யளித்தார். விருந்தினர் அவ்வெல்லா மாவையும் உண்டு பசியாறி, அவர்களை வாழ்த்தி விடை பெற்றுக்கொண்டு போனார். அந்தணரும் அவர் குடும்பமும் அந்தக் கொடிய வற்கட காலத்தில் தங்கள் வீடு தேடி வந்த அதிதியின் பசியைத் தணித்ததற்குச் சந்தோ ஷித்தார்களே யன்றித், தாங்கள் பசியால் வருந்துவதற்குச் சிந்திக்கவே யில்லை. அப்புறம் என்ன நடந்தது தெரியுமா? உடனே தேவர்களுடன் இந்திரன் எதிராகி வந்து, “பூஜ்யர் களே! நீங்கள் முற்றத் துறந்த முனிவர்களிலும் சிறந்து விளங்குகின்றீர்கள்; உங்கள் அரிய செயலினால் இன்று முதல் எங்களுக்கு முதல் விருந்தின ரானீர்கள்” என்று நல்

துரை புகன்று, அவர்கள் விருப்பத்தின் வண்ணம் அந்தக் காட்டில் மழை பொழிந்து வளம் பெருகும்படி வரம் தந்து போனான். ஆதலால், சரியாய் நடத்தப்படுகின்ற இல்லறமானது பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற மூன்று நிலைகளைக் காட்டிலும் சிறந்ததாகின்றது.

—மகாபாரதம்.

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து.

—(o)—

6—வாழ்க்கைத் துணை நலம், நளாயனி

வாழ்க்கைத் துணை நலமாவது இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத நற்குண நற்செய்கைகளை யுடைய மனைவியின் நன்மையாம். மனைவி இல்லாள் முதலிய சொற்கள் குடும்பத்தலைவி யென்பதைக் குறிக்கும். விருந்தினர்க் கிடல், வறியவர்க் குதவல், துறந்தவரைத் தொழல், குடும்பப் பற்று முதலானவை தலைவியின் நற்குணங்களாம். சமையல் செய்வன்மை, வர வறிந்து செலவிடல் முதலானவை அவளது நற்செய்கைகளாம். கொண்டவன் குறிப்பறிந் தொழுகுவது மனைவிக்கு முக்கிய விலக்கணம். கணவன் இன்முகமும் அவன் தண்ணளியுமே அவள் பெறும் பாக்கியம். கணவனைக் காட்டிலும் அவளுக்கு வேறு கடவுள் கிடையாது. நல்ல மனைவியி னிடத்தில் சொல் லினிமையையும் குண வினிமையையும் காணலாம். உத்தம மனைவியைப் பெற்றவனுக்கு உம்பர் உலகமும் உரிமை யாகின்றது. அவனுக்கு உலகத்தில் அருமையானது ஒன்றுமே யில்லை. எல்லாம் கையில் உள்ளன.

ஒருபெண் தன் நல்லொழுக்கத்தினால் பிறந்த குலம் புகுந்த குலம் இரண்டுக்கும் பெருமையை உண்டுபண்ணுகின்றாள். பெண்களுக்குக் கற்பு உயிரினும் சிறந்தது. கணவனிடம் நடந்துகொள்ள வேண்டியவற்றைத் தாய் தந்தைகளும், மற்றவர்களிடம் நடந்துகொள்ள வேண்டியவற்றைக் கணவனும், கற்பித்த வழியில் நடப்பது கற்பு. கணவனுக்கு மனைவி நிழல் போன்றவள். சிறைக் காப்பு ஆடம்பரத்தோடு அமைகின்ற படியினால், ஒரு உண்மை மனைவி தற்காத்துக் கொள்ளவில் ஒருபொழுதும் சோர்வடையக் கூடாது. குடும்பம் என்பது பாரம் ஏற்றின ஒரு பெரிய வண்டியைப் போன்றது. அவ்வண்டியைக் கணவன் மனைவி இருவருமாய்ச் சேர்ந்து இழுத்துச் செல்லவேண்டும். இருவர் மனமும் ஒன்று பட்டாலன்றி, அவ்வண்டி இனிது நடவாது.

நள மகாராஜாவின் புத்திரிக்கு நளாயனி யென்று பெயர். அவள் முனிவர்களிற் சிறந்த மவுத்கல்யருக்கு வாழ்க்கைப் பட்டு, அவரோடு வனத்துக்குச் சென்று, அவர் வன வாழ்க்கையைத் தானும் அநுசரித்து வந்தாள். சிலநாள் கழித்து மவுத்கல்ய முனிவர் மனைவியின் ஒழுக்கத்தைப் பரிக்ஷிக்க நினைந்து, உறுப்புக்களைக் குறைத்து விடுகின்ற குஷ்டம் என்னும் கொடிய நோயை வருவித்துக் கொண்டு, அதனால் வருந்துகின்றவர் போல நடிக்கத் தொடங்கினார். நளாயனி அந்நோய்க்குக் கொஞ்சமும் அருவருப்புக் கொள்ளாமல், அவர் உடம்பைக் கழுவிக் குளிப்பாட்டியும், புண்களுக்கு மருந்து தடவியும், அந்நோய் தனக்கே வந்ததுபோல வருந்தியும், பரிகாரம் செய்துவந்தாள்.

முனிவர் அவ்வளவோடும் அமைதி யடையாமல், "நளாயனி! உன்னை மணந்த நாள் முதல் இந்தக் கரும நோய்

என்னை வருத்துகின்றது; உன்னை மணவாதிருந்தால், இந் நோய் வராதிருந்தாலும் இருக்கலாம்; இப்பொழுது ஒன் றும் செய்வதற்கில்லை; உன்னால் நானும், என்னால் நீயும், வருந்துவதுதான் கடவுள் திருவுள்ளம் போலும்; மூடவன் கொம்புத் தேனை விரும்புவதுபோல இப்பொழுது தீர்த்த யாத்திரை செய்ய மனம் தீவிரப்படுகின்றது; அதிக பாபம் பண்ணின எனக்கு அஃது எங்ஙனம் கிடைக்கப்போகின் றது?" என்று சொல்லி வருந்தினர்.

நாயக பக்தியில் சிறந்த நளாயனி "தலைவரே! நான் முற்பிறப்பில் நல்வினை செய்திருந்தால், இந்தக் கொடு நோய் தங்களைத் தொடர்ந்து வருத்தாது; அடியாளுக்கு நோயை நீக்கச் சக்தியற்றிருந்தாலும், உபசரணை செய்வதற்கும், யாத் திரை செய்விப்பதற்கும், சக்தி யற்றுப் போகவில்லை; தங்க ளைத் தலையில் சுமந்துகொண்டு நினைத்த விடங்களுக்கு நிமி ஷத்தில் செல்கிறேன்; என்னுடல் தங்கள் பரிசரணைக்கும் பயன்படாமல் வேறு எதற்கு இருக்கின்றது? என் தாய் பெண் களின் ஒழுக்கங்களை எனக்குக் கற்பித்திருக்கிருள்; இதன் பொருட்டுத் தாங்கள் கவலை கொள்ளவேண்டாம்" என்று சொல்லி, அம்மகா முனிவரை ஒரு கூடையில் உட்காருவித் துத் தலையில் சுமந்துகொண்டு, புண்ணிய நதிகள் தோறும் யாத்திரை செய்து வந்தாள். மனைவியின் ஒழுக்கம் முனி வர்க்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணிற்று. ஆயினும், வெளி யில் காட்டிக் கொள்ளவில்லை.

பின்னொரு சமயத்தில் நளாயனி முனிவரைச் சுமந்து கொண்டு, கங்கைக் கரையி லிருந்த ஒரு பட்டணத்துக் குப் போனாள். அங்கு ஒரு நாள் விடியற் காலையில் அவரைச் சுமந்து செல்கையில், வழி தெரியாமல் மயங்கி,

வேறொரு புதிய மார்க்கத்தில் புகுந்து சென்றுவிட்டாள். அங்கு மாண்டவியர் என்ற முனிவர் திருட்டுக் குற்றத்தின் பொருட்டு அந்நாட்டரசனால் கழுவேற்றப்பட்டிருந்தார். நளாயனியின் தலைக்கூடை தற்செயலாக முனிவர் காலில் தாக்கிற்று. கழுவில் தொங்குகின்ற முனிவருக்கு நோய் அதிகரித்த படியினால் அவர் கோபம் கொண்டு, 'நீ பொழுது விடிந்ததும் அமங்கலி யாருக' என்று சபித்தார். நளாயனிக்கு அவர் சாபம் செவிப்பட்டது. அவள் 'பொழுது புலரா தொழியட்டும்' என்று சொல்லித், தன் னிருப்பிடம் வந்து சேர்ந்தாள். சூரியன் பதிவிரதையின் சாபத்துக்குப் பயந்து, வெளியில் புறப்படாமல் மறைந்தான்.

உலகத்தில் ஐந்து நாள் வரையில் பொழுது விடியாமல் இரவாகவே யிருந்தது. பின்னர் நான்முகக் கடவுள், இந்திரன் முதலான தேவர்களோடு வந்து நளாயனியைப் புகழ்ந்து, முன்னர்ப் போலவே பொழுது விடியும்வண்ணம் அநுக்கிரகிக்கும்படி வேண்டினர். முதலில் தனக்கு மாண்டவியர் கொடுத்த சாபத்தை அம்முனிவர் மாற்றிக்கொண்ட பிற்பாடு, நளாயனியும் சூரியனை முன்னர்ப் போலவே உலகத்தில் உதித்து உலாவக் கட்டளை யிட்டனள். மவுத்கல்ய முனிவர் மனைவியின் கற்பில் மகிழ்ச்சி யடைந்து, முதலில் அவளை மணந்தபோது தாம் எடுத்துச் சென்ற மன்மத வடிவத்தைப் பெற்று, அவளுடன் நெடுங் காலம்வரையில் எல்லா வின்பங்களையும் இயைந்து அநுபவித்து வந்தார். ஆதலால், பதிவிரதைகளுக்கு இவ்வுலகத்தில் அரியதான காரியம் ஒன்றும் கிடையாது. —மகாபாரதம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள ? கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

7—புதல்வரைப் பெறுதல், பகீரதன்

நன்மக்களைப் பெறுதலுக்குப் புதல்வரைப் பெறுதல் என்று பெயர் சொல்லுவர். குடும்பம் என்னும் விருக்ஷத்துக்குக் குழந்தை கொழுங்கனி. இல்வாழ்க்கையில் உள்ளவனுக்கு மக்கட்பேறு முதன்மை யானது. புதல்வரைப் பெறுதலினால் பிதிர்கடன் பூர்த்தி யாகின்றது. நன்மக்கள் * எழுவகைப் பிறப்பிலும் தங்கள் பிதிர்களைத் தீங்கினின் றும் தப்புவிக்கின்றனர். பெற்றவர் உடம்பு மக்களைத் தழுவலானும், செவி அவாது வேய்க்குழலினும் யாழினும் இனிய மழலைச் சொல்லைக் கேட்டலானும், இன்ப மடைகின் றன. உண்ணும்பொழுது குழந்தைகள் குறுகுறு வென்று தவழ்ந்து, தமது சின்னஞ் சிறிய கரங்களால் கலத்தி லுள்ள வுணவை அள்ளியும், அளைந்தும், சிரித்து விளையாடுவது ஒருவனுக்கு இம்மை யின்பங்களில் சிறந்தது. தாய் மக்களை ஊட்டி வளர்க்கவும், தந்தை கல்வி கற்பிக்கவும், கடமைப் பட்டவர்கள்.

'தன் மகன் பெரிய சபையில் மேன்மக்களால் புகழப்படுகிறான்' என்று, பலர் சொல்லக் கேட்பது பெற்ற தாய்க்குப் பெற்ற வன்றி லும் பதின்மடங்கு மகிழ்ச்சியைத் தரும். இன்னும், தம் மக்கள் கல்வி செல்வம் முதலியவற்றில் தம்மி னும் உயர்ந்திருக்க வேண்டும் என்று பெற்றவர் விரும்புவர். நன்மக்கள் உலகத்தில் ஒப்புயர்வற்றவர். அவர்கள் தங்கள் நல்லொழுக்கத்தினால் பெற்றவர்களுக்குப் புகழையும் புண்ணியத்தையும் உண்டு பண்ணுகின்றார்கள். புண்ணிய வுலகங்களை

---

*பிறப்பேழாவன:—நிற்பன, நீந்துவன, நகர்வன, பறப்பன, நடப்பன, பேசுவன, வரம் தருவன.

உரிமை யாக்குகின்றார்கள். எல்லா மதங்களும் மக்களை அங்கீ கரிக்கின்றன. ஒரு குலம் வாழைபடி வாழைபோல விளங்கி வருவதற்குப் புத்திரன் இன்றி யமையாதவன். ஆலமரத் தின் விழுதுகள் நாற்புறத்திலும் இறங்கி, அழகாக வேரூன்றி அடிமரத்தைத் தாங்குவது போலப், புத்திரன் வயதிலும் கல்வியிலும் வளர்ந்து, முதிர் பருவத்தில் பெற்றவர்களைப் போஷித்து வருகிறான்.

முன்னொரு சமயத்தில் அயோத்திப் பட்டணத்தில் பகீர தன் என்று அரசன் ஒருவன் இருந்தான். ஒருநாள் அவ னுடைய ராஜ சபைக்குக் குல குருவாகிய வசிஷ்ட முனிவர் வந்தார். அம்முனிவர், அரசன் செய்த உபசாரணைகளை அங்கீ கரித்து, அவன் விருப்பத்தின்மீது, “ தருமம் தெரிந்த வனே! உன் பாட்டன்மார்களான சகரர் அறுபதி னாயிர வரும் பிதாவினால் பூமியை வலம்வர விடப்பட்ட வெள்ளிக் குதிரையைத் தேடிப் பாதாளம் சென்று, அங்குத் தவம் செய்துகொண் டிருந்த கபில முனிவருடைய கோபத் தீயினால் எரிந்து, சாம்பராய் விட்டார்கள்; சாபத்தில் இறந்தவர் களுக்குச் சொர்க்கம் கிடைப்ப தில்லை; அவர்கள் இன்னும் அலகை வடிவங்களாகவே அலைந்துகொண் டிருக்கிறார்கள்; அவர்களை நீதான் அத்துன்பத்தினின்றும் கரையேற்ற வேண் டும்” என்று சொன்னார்.

அரசன் ‘பூஜ்யரே! என்ன காரியம் செய்தால், அவர் கள் அலகைத் தன்மை நீங்கி அமரர் உலகம் அடைவார்கள்?’ என்று கேட்டான். வசிஷ்டர் ‘சுவர்க்கத்தில் இருக்கின்ற கங்கை பாதாள வுலகம் சென்று, அவர்கள் எலும்புக் குவைய வில் படிந்தால், அனைவரும் புண்ணிய வுலகத்தைப் பெறுவார் கள்; ஆனால், அஃது அவ்வளவு எளிதில் ஆகக்கூடிய தன்று;

மிகவும் அருமையானதுதான்' என்று கூறினர். பகீரதன் 'முனிநாதா! நான் தங்கள் கருணையை முன்னிட்டுக் கொண்டு,எப்படியாவது சுவர்க்கத்தி லிருக்கின்ற கங்கையைப் பாதாளம் கொண்டுவந்து, என் பாட்டன்மார்களைப் புண்ணிய வுலகத்தில் புகப் பண்ணுகின்றேன்' என்று சொல்லி, ராஜ்யத்தை அமைச்சர் தலையில் இருத்தி, அப்பொழுதே புறப்பட்டுப் பனிமலை அடிவாரத்துக்குச் சென்று, பிரமனை நினைந்து பெருந்தவம் புரிந்தான்.

அப்பொழுது படைப்புத் தொழிற் கடவுள் பிரத்தியக்ஷமாய் வந்து, "அரசர் தலைவனே! கங்கை நிலத்துக்கு வரும் வேகத்தில் உலகம் அழிந்து சிதைந்து போய்விடும்; அவ்வேகத்தை இடையி லிருந்து ஒருவர் தடுத்து நிற்கவேண்டும்; அதனைச் செய்வதற்குச் சிவ பெருமானை யல்லாமல், ஒருவரும் திறமை யுடையவரல்லர்; ஆதலால், நீ முதலில் கங்கையையும், பின்னர்ச் சிவபெருமானையும், தவத்தினால் சந்தோஷப்படுத்து; காரியம் கைகூடி வரும்" என்று, சொல்லி மறைந்தார். அப்புறம், பகீரதன் கங்கையை நினைந்து தவம் பண்ணத் தொடங்கினன். தேவர்களால் பூஜிக்கப்படுகின்ற கங்காதேவி பகீரத மன்னவன் தவத்தை வியந்து வெளிப்பட்டு வந்து, "மன்னவர் தலைவனே! நான் உன் தவத்திற்குச் சந்தோஷ மடைந்தேன்; உன் விருப்பத்தின் வண்ணம் பூலோகத்துக்கு வந்து உன் பாட்டன்மார்களுக்கு நற்கதியையும் உண்டுபண்ணுகின்றேன்; ஆனால், நான் நில வுலகத்தில் பாய்ந்தால், நிலம் பிளவுண்டு உயிர்கள் நாசமாய்விடும்; அங்ஙனம் ஆகா திருப்பதற்கு என் வேகத்தை ஒருவர் இடையில் நின்று தடுத்து வரவேண்டும்; அதற்குச் சிவ பெருமானை யல்லாமல் வேறொருவரும் திறமை யுடையவ ராகார்; ஆதலால், நீ முதலில் அங்

தக் கடவுளை அங்கீகரிக்கும்படி செய்'' என்று சொல்லி மறைந்து போய் விட்டாள்.

பிற்பாடு, அம் முயற்சி யுள்ள வரசன் சிவ பெருமானை நினைந்து, தவம் செய்யத் தொடங்கினான். சில வருஷங்களுக்குப் பிற்பாடு, கண்ணுதற் கடவுள் வந்து, 'தரும புத்தி யுள்ளவனே! நான் கங்கையின் வேகத்தைத் தடுத்துநிற்கிறேன்; சீக்கிரம் வரப்பண்ணு' என்று கூறினார். பகீரதன் கங்கையைப் பிரார்த்தித்த மாத்திரத்தில் கங்கை மிகுந்த வேகத்தோடு நிலத்தில் இறங்கி வந்தாள். கண்ணுதற் கடவுள் தம் சாமர்த்தியத்தினால் துளித் தண்ணீரையாவது வெளியில் பெருக விடாமல், எல்லாவற்றையும் தமது சடைக் கற்றையில் அடக்கி, அதன் வேகத்தைக் குறைத்து, வேண்டிய வளவு நிலத்தில் பெருக விட்டார். பகீரத மன்னவன் கங்கையை அழைத்துக் கொண்டு பாதாள வுலகம் சென்று, இறந்து போன பாட்டன்மார்களின் எலும்புக் குவையலில் படியப் பண்ணினான். உடனே சகரர் யாவரும் தெய்வ வடிவம் பெற்றுப், புண்ணிய வுலகம் போய்ச் சேர்ந்தார்கள். சற்புத்திரனாகிய பகீரத மன்னவன் தன் முயற்சியின் பலன் கைகூடி வந்ததற்குக் களிப்புக் கடலில் அமிழ்ந்திப், பட்டணம் வந்து நெடுங்காலம் வரையில் இந்தப் பார் முழுவதையும் பரிபாலித்து வந்தான். ஆதலால், சற்புத்திரர்களினால் ஒரு குலத்துக்குப் பெருமையும் புகழும் உண்டாகின்றன.

—இராமாயணம்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா ; பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

——(o)——

8— அன்புடைமை, ததீசிமுனிவர்

தொடர்புடையவர்களிடத்தில் உண்டாகும் காதலுக்கு அன்பென்று பெயர் கூறுவர். அன்பு ஒரு வகை மனப் பற்று. தொடர்பு சம்பந்தம். தொடர்புடையவர்களுக்குத் துன்பம் நேருமாயின், அதனைக் காணச் சகியாமல், இயற்கையில் பெருகும் கண்ணீர் அன்பைத் தெரிவிக்கும் அடையாளமாகும். அன்பு எல்லா வுயிர்களுக்கும் பொது. உலக வாழ்க்கைக்கு இவ்வன்பு கவசம் போன்றது. கொல்லும் தொழிலைக் கொண்ட கூற்றுவனாலும் கூட அன்பைப் பிரிக்க முடியாது.

கடவுள் பக்திக்கு அன்புதான் அடிப்படையாகின்றது. அன்பு முதலில் உயிர்களின் உள்ளத்தை நெகிழப் பண்ணுகின்றது. மன நெகிழ்ச்சி ஆசையைக் கிளப்புகின்றது. ஆசை தொழிலில் தூண்டுகின்றது. தொழில் பொருளையும் புகழையும் கூட்டுவிக்கின்றது. அகில காரணராகிய கடவுள் அன்பை இவ்வளவு அழுத்தமாய்ப் படைத்திராவிட்டால், இந்தப் பரந்த வுலகம் பாலை வனமும் பிணஞ்சுடு காடுமாய்ப் போம். அன்பின் மகிமையினாற்றான் உயிர் உடலில் பொருந்தியிருக்கின்றது. அன்பில்லாத வுயிரை அறக் கடவுள் காய்ந்து கொல்கிறார். பாலை வனங்களைப் பொன்னிலமாக்குவதும், மலைகளைப் பிளந்து வழியைத் திறப்பதும், கடலைக் கடந்து உடலை வருத்துவதும், நிலத்தைத் தொளைத்து நெடுந்தூரம் செல்வதும், அன்பின் தொழிலேயாகும். அன்பில்லாதவர்கள் உலகம் யாவும் தமக்கே அடிமையென்று தருக்கித், துன்பம் அடைவார்கள். அன்புள்ளவர்கள் தாங்கள் உலகத்துக்கு அடிமையென்று நினைந்து, தங்கள் உடல், பொருள், ஆவி யென்ற

மூன்றினாலும் உதவி செய்து மகிழ்வார்கள். உண்மை யன்புள்ளவர் உலக வளர்ச்சியின் பொருட்டுத் தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்திருப்பார்கள். அவர்கள் நோக்கம் உலகச் சீர்திருத்தமே யல்லாமல், தங்கள் உடலின், அல்லது குடும்பத்தின், சீர்திருத்த மன்று.

ஒரு சமயத்தில் தேவரும் அசுரரும் கூடி, அமிருதம் பெறும் பொருட்டுத் திருப்பாற் கடலைக் கடையச் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கட்டளையினால் இரு வகுப்பாரும் தங்கள் ஆயுதங்களைக் கங்கை யாற்றங் கரையில் யோகத்தில் இருந்த அதர்வா என்ற ரிஷியின் புத்திரராகிய ததீசி முனிவரிடத்தில் அடைக்கலம் வைத்துப் போனார்கள். சந்திரனைத் தறியாக நீட்டி, மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகிப் பாம்பைக் கயிறுகப் பூட்டிக், கடலைக் கடைந்ததில், அமிருதம் உண்டாயிற்று. தேவர்கள் அமிருதம் கிடைத்த சந்தோஷத்தினாலும், அசுரர்கள் அமிருதம் கிடைக்காத துக்கத்தினாலும், முனிவரிடத்தில் வைத்து வந்த தங்கள் ஆயுதங்களை வாங்கிச் செல்ல மறந்துபோய் விட்டார்கள். ததீசி முனிவர் சில வருஷங்கள் வரையில் தேவாசுரர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவரும் வரவில்லை. பிற்பாடு, அவ்வாயுதங்களை ஒன்றுய்ச் சேர்த்து விழுங்கி, முன்னர்ப்போலவே தவம் செய்யத் தொடங்கினர். தவப் பெருமையினால் எல்லா வாயுதங்களும் உருகி, அவர் முதுகெலும்போடு ஒன்று சேர்ந்து விட்டன.

நெடுநாளைக்குப் பிற்பாடு, இந்திரன் விருத்திரன் என்ற ஒருகொடிய அசுரனுடன் சண்டை செய்து, தோல்வி யடைந்து போனன். அவனைக் கொல்வதற்குப் புதிய வஜ்ராயுதம் ஒன்று வேண்டிய தாயிற்று. 'ததீசி முனிவர் முதுகெலும்பினால் அவ்

வாயுதம் செய்யப்பட்டால், விருத்திராசுரனை வதம் செய்ய லாம்' என்று, திருமால் இந்திரனுக்குக் கூறினார். இந்திரன் ததீசி முனிவர் ஆச்சிரமம் சென்று, அவர் அடியில் விழுந்து பணிந்து, விருத்திராசுரன் அக்கிரமத்தையும், அதனால் உல கம் படுகின்ற அலங்கோலத்தையும் சொல்லிக், "கருணைக் கடலே! நான் அந்தக் கொடிய அரக்கனைக் கொல்வதற்குப் புதிய வஜ்ராயுதம் ஒன்று செய்துகொள்ள வேண்டும்; முன் னர்த் தேவாசுரர்கள் அடைக்கலம் வைத்துச் சென்ற ஆயுதங் கள் தவப் பெருமையினால் தங்கள் முதுகெலும்போடு கலந்து வளர்ந்திருக்கின்றன; அவ்வெலும்பைக் கொண்டு வஜ்ராயு தம் செய்தால், விருத்திரனை வென்று வாகை சூடலாம்; நீயும் நிலைத்து விளங்கும்; உலக நன்மையின் பொருட்டு நான் இப் பொழுது தங்கள் முதுகெலும்பை யாசிக்க வந்திருக்கிறேன்; அநுக்கிரகம் செய்யவேண்டும்" என்று சொன்னான்.

முனி புங்கவர் "இந்திரனே! என் முதுகெலும்பு வஜ் ராயுதமாகப் பயன் படுவதற்கு மிகவும் சந்தோஷிக்கிறேன்; நீரில் அழகாக வெழுந்து மறைந்துபோகின்ற குமிழியைப் போலும் நிலையற்றதாகிய இந்தப் பயனற்ற வுடல் பரோப காரத்தின் பொருட்டு, அதனிலும், திரிலோகாதிபதியான உன்பொருட்டு, உபயோகமாவது உயர்ந்த பாக்கிய மல்லவா] ஏனென்றால், நீ சாதுக்களின் நன்மையைக் கவனித்துக்கொண் டு வருகிறாய்; என் முதுகெலும்பை இப்பொழுதே பெற்றுக் கொண்டு போ; நான் உயிரை விட்டுவிடுகிறேன்" என்று சொல்லி, அவன் கண்ணெதிரிலேயே யோகத்தின் முன்னிலை யில் பிராணனைப் போக்கிவிட்டார். இந்திரன் அவர் முது கெலும்பை எடுத்து விசுவ கர்மாவிடம் கொடுத்து, அதனை வஜ்ராயுதமாய்ச் செய்து, விருத்திராசுரனை வென்றான். ஆத

லால், உலகத்தின்மீது அன்புள்ளவர்கள் தங்கள் உடலையுங் கூடப் பிறர் பொருட்டு உதவி விடுவார்கள். —பாகவதம்.

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

—(o)—

9—விருந்தோம்பல், சுவேதன்

விருந் தோம்பலாவது விருந்தினரை உபசரித்தல் என்பதாம். அஃது இல்வாழ்க்கையில் இருப்பவனுக்கு இயற்கையில் இருக்கவேண்டிய தினக் கடமைகளில் ஒன்று. விருந்தினரை உபசரித்தலால் எல்லா வறமும் எளிதில் நிறைவேறுகின்றது. புதிதாக வந்தவர்க்கு விருந்தினர் என்று பெயர். அவர், தன்னைத் தெரிந்து வந்தவர், தெரியாது வந்தவர் என்று, இரு வகைப்படுவர். ஒருவீட்டில் விருந்தினர் உபசாரனை பெறாமல் முகம்வாடிச் செல்வ ராளுல், அவர் பாபம் அத்தனையும் வீட்டுத் தலைவனைச் சாரும்.

தானம் முதலாகிய சில நற்காரியங்கள் உலகத்தில் சிறந்ததா யிருந்தாலும், கொள்கின்றவனுக்கு ஒழுக்கம் குன்றி யிருக்குமாளுல், தானம் கொடுத்தவன் தீ நகரத்தில் செல்லுவான். விருந்தோம்பலுக்கு அவ்வேறுபாடு இல்லை. அதன் செயல் விருந்தாய் வந்தவன் வயிற்றை விதம் விதமான வுணவுகளினுல் நிரப்பி யனுப்புவதே யாகும். இன்சொற்பேசி விருந்தினரை உண்பிக்க வேண்டும். கொடுஞ்சொல் அவர் முகத்தைக் குன்றச் செய்துவிடும். வித்தியார்த்தி, வனவாசி, துறவியென்றவர்களும் இன்சொல்லினுல் இன்ப மடைகிருர்கள்.

பசிப் பிணி அனைவருக்கும் பொது. பசிக்குச் சிறியவன் பெரியவன், வறிஞன் அறிஞன் என்ற வித்தியாசம்

இல்லை. சகல கலையும் வல்ல சதுரனாயிருந்தாலும், பசி வந்தபொழுது பதைத்துத் துடித்து வருந்துவான். விருந்தோம்புகின்றவன் பிறப்பில் இழிந்த புலைஞனாயிருந்தாலும், பொன்னாட்டிற்குச் சென்று புத்தமிருதம் புசிக்கின்ற தேவனேயாகிறான். விண்ணவர்கள் அவனைத் தங்களுக்குவிருந்தினனாய்க் கொண்டு, மகிழ்ச்சி யடைகிறார்கள். விருந்தோம்பாதவன் செல்வம் வான வில்லைப்போல விரைவில் தோன்றித் தொலையும். விருந்தோம்பாதவன் விண்ணவர் போன்றவனாயிருந்தாலும் விரிநரகத்தில் விழுந்து வருந்துவான்.

முன்னொருகாலத்தில் விதர்ப்பதேசத்துஅரசனான சுதேவன் என்பவனுக்குச் சுவேதன் என்று ஒரு குமாரன் இருந்தான். அவன் தன் இளம் பிராயத்தில் அரச சுகங்களை வெறுத்துக், கானகம் சென்று கடுந் தவம் புரியத் தொடங்கினான். மழைக் காலத்தில் கழுத்தளவு தண்ணீரில் நின்றும், வெயிற் காலத்தில் பஞ்சாக்னி நடுவில் நின்றும், குளிர் வெப்பம் முதலியவற்றைச் சகித்துக், கடவுளைத் தொழுது வந்த அவன் தவம், முனிவர்களும் வியக்கும்படி மதிப்படைந்திருந்தது. சுவேதன் கானகத்தில் கிடைக்கின்ற உயர்ந்த பழங்களையும் சுவைக் கிழங்குகளையும் தின்று, பசியைத் தணித்துக் கொள்வது வழக்கம். அவன் சாப்பாட்டுச் சமயத்தில் எவரேனும் வந்து, 'ஐயா! பசிக்கின்றது; கொஞ்சம் உணவு தாருங்கள்!' என்று கேட்டால், "இது தபசிகள் வசிக்கும் இடம்; தருமத்தின் பொருட்டுத் திறந்துவைத்திருக்கின்ற சத்திரம் சாலை அன்று; கையில் உள்ள வுண்வை உங்களுக்குக் கொடுத்துவிட்டால், நான் பட்டினி கிடந்து வருந்தப் படவேண்டும்; அதனால், எனக்குத் தவத்தில் மனம் செல்லாமற் போகும்; நீங்கள் மற்றோரிடத்துக்குச் சென்று, யாசித்

துப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று, சொல்லி யனுப்பிவிடு வான். சுவேதன் ஒரு நாளிலாவது விருந்தினர்க்கு உப சரணை செய்த தில்லை. பின்னர்த் தவத்தின் பெருமையினால் அவன் தெய்வ வடிவம் பெற்றுச், சத்திய வுலகம் சேர்ந்தான். சேர்ந்தாலும் என்ன?

அங்குச் சுவேதனுக்குப் பசிநோய் உண்டாயிற்று. அஃது எதனாலும் அடங்க வில்லை. அவன் மிகவும் வருந்தி, நான்முகக் கடவுளிடம் சென்று, 'தன் பசி யின் உபத்திரவத்தைப் பரிகரிக்க வேண்டும்' என்று, பிரார்த்தித்துக் கொண்டான். பிதாமகர் "சுவேதனே! நீ தவம் செய்யும்பொழுது உன்னிடம் வந்து பசியென்று யாசித் தவர்களுக்குச் சிறிதும் உதவாமல், உன் வயிற்றை மாத்திரம் நிரப்பிக்கொண் டிருந்தனை; இன்னும் உன் தவத்தை வியந்தும், அவர்களை இகழ்ந்தும் பேசினை; அதனால், உனக்கு இந்தத் துன்பம் உண்டாயிற்று. நீ இந்தத் தெய்வ வடிவத்தோடு முன்னர்த் தவம் செய்துகொண் டிருந்த இடத்துக்குப் போ! அங்குள்ள குளத்தில் உன்னால் போஷிக்கப்பட்டுவந்த உன் னுடல் தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கும்; நீ ஒவ்வொரு நாளும் அதனைத் தின்றுதான் உன் பசியைத் தணித்துக் கொள்ளவேண்டும்'' என்று கூறினார். சுவேதன் அவரை வணங்கிக், 'கருணைக் கடலே! இந்தக் கொடுஞ் சாபம் நீங் கும் விதத்தை நிகழ்த்தி யருள வேண்டும்' என்று பிரார்த் திக்கப், பிதாமகர் "இராஜ ரிஷியே! நீ தினமும் சென்று உன் னுடலைத் தின்றுகொண்டு வருகையில், ஒருநாள் அகஸ் திய முனிவர் அவ்விடத்துக்கு வருவார்; அவர் தரிசனத்தி னால் சாபம் நீங்கிப் போகும்'' என்று அநுக்கிரகம் பண்ணி னார். வேறு விதி யில்லாதபடியினால் சுவேதன் நாள்தோறும்

விமானத்தில் அமர்ந்து பூலோகத்துக்கு வந்து, அருவருப்போடு தன் பிணத்தைத் தின்றுகொண்டு வந்தான்.

சில வருஷங்கள் கழிந்தன. பின்னர் ஒருநாள் அகஸ்திய முனிவர் அந்தப் பொய்கைக் கரைக்கு வந்தார். அப்பொழுது தெய்வப் பெண்கள் சூழ, விமானசாரியாகப் பிணந் தின்ன வந்த சுவேதனுக்கு அவர் தரிசனம் கிடைத்தது. புண்ணிய மூர்த்தியாகிய அகஸ்தியரைத் தரிசனம் செய்த மாத்திரத்தில் சுவேதன் சாபம் சொல்லாமற் பறந்தது. அப்புறம், அந்தக் குளத்தில் அவன் பிணமும் கிடக்கவில்லை. சுவேதன் தன் கொடுஞ்சாபம் நீங்கினதற்குக் களித்து, அகஸ்திய முனிவரை வணங்கித், தனது திவ்வியாபரணங்களில் ஒன்றைக் கழற்றிக் கொடுத்துப் போனான். அவ்வாபரணம் தான் பின்னொரு சமயத்தில் அம்மகா முனிவரால் வனத்தில் வந்திருந்த ஸ்ரீராம பிரானுக்குக் கிடைத்தது. சுவேதன் விருந்தினரைச் சரியானபடி உபசாரணை செய்திருந்தால், தன் பிணத்தைத் தானே தின்றிருக்க வேண்டாமல்லவா? ஆதலால், எவரும் விருந்தினர்களை உபசரித்து வரவேண்டும்.

—இராமாயணம்.

உடைமையு ளின்மை விருந்தோம்பல்; ஓம்பா
மடைமை மடவார்க ணுண்டு.

—(o)—

10—இனியவைகூறல், இராவணன்.

இனியவை கூற லென்பது இன்சொல் சொல்லுத லாகும். பிறருக்கு இன்பத்தை உண்டு பண்ணும் சொல் இன்சொல் லென்று பெயர் பெறும். இனி, உள்ளத்தின் உவகையை வெளிபடுத்துகின்ற சொல்லை இன்சொல்லென்று

இயம்புவர். சொல்லப் புகுந்த விஷயம் கடினமாயிருந்தாலும், சொல்லில் இனிமைபடப் பேசவேண்டும். இல்வாழ்க்கையில் உள்ளவனுக்கு இவ்வின்சொல் இல்லையானல், அவன் வாழ்க்கை இடர்க் கடலில் புகுந்து ஏங்கித் தவித்து நிற்கும். குடும்பத்தை வச மாக்குவதற்கு இன்சொல் இன்றியமையாதது. ஒருவனுக்குச் சிறந்த வாபரணம் இன்சொல் ஒன்றேயாகும். இன்சொல் நட்பை உண்டுபண்ணும். காரியங்களைக் கைகூடச் செய்யும். பகைஞர் மனத்தையும் பாகு போல வுருக்கும்.

வேதங்களில் பெரும் பாகமும் இன்சொல் வடிவமாகவே இருந்து வருகின்றன. பெரியவர்கள் இந்தப் பரந்த வுலகத்தை இன்சொல்லைக் கொண்டு வசப்படுத்தினார்களே யல்லாமல் வன்சொல்லைக் கொண்டு வசப்படுத்த வில்லை. இன்சொல் பேசுகின்றவன் இன்பக்கடலில் இறங்கி விளையாடுவான். ஒருவனுக்குப் பொருள் கொடுத்தலைக் காட்டிலும் இன்சொல் பேசுதல் எப்பொழுதும் நல்லது. இம்மை மறுமை என்ற இரண்டிடத்திற்கும் ஏற்றத்தைத் தருகின்ற இன்சொல்லைச் சொல்லாமல், இன்னாதனவாகிய வன் சொல்லைச் சொல்வது, ஒருவன் மரத்தில் பழுத்துத் தொங்குகின்ற இனிய கனிகளைக் கைக்கொள்ளக் கருதாமல், காயைப் பறித்துத் தின்று, வாயைக் கெடுத்துக் கொள்வது போலாகும்.

வன்சொல் மிகவும் கெட்டது. அஃது என்றும் தீங்கையே விளைவிக்கும். பேராசை, பெருங் கோபம், தன்னயம் கருதல் முதலியவை காரணமாக வன்சொல் வளருகின்றது. வன்சொல்லுக்கு வாழ்வும் இன்சொல்லுக்குத் தாழ்வும், எக்தக் காலத்திலும் இல்லை. இரண்டு சொற்களின் வேற்றுமையையும் பின்வரும் உதாரணத்தால் உணரலாம்.

நெடுங் காலத்துக்கு முன்னர் விசிரவசு முனிவருக்குக் கேகஸி யென்பவள் வயற்றில் தசக்கிரீவன், கும்பகர்ணன், விபீஷணன் என்று மூன்று புத்திரர் பிறந்தார்கள். அவர்களில் தசக்கிரீவன் தவஞ்செய்து உயர்ந்த வரங்களைப் பெற்றான். இந்திரன் முதலான தேவர்களும் அவன் வரத்துக்குப் பயந்து, அடங்கிக் கிடந்தார்கள். அவன் ஒரு சமயத்தில் குபேரனை வென்று புஷ்பகம் என்ற தெய்வ விமானத்தைக் கைப்பற்றி, அதில் அமர்ந்து ஆகாய மார்க்கமாய்ச் சென்றான். நடுவழியில் அவன் விமானம் ஆகாயத்தில் செல்லாமல் அப்படியே நின்று போயிற்று. தசக்கிரீவன் அங்ஙனம் நின்றதற்குக் காரணம் என்னவென்று ஆராயத் தொடங்கினான்.

அப்பொழுது நந்திதேவர் வந்து, "அசுரத் தலைவனே! இது கண்ணுதற் கடவுள் வாசஞ் செய்கின்ற கைலை மலையாகும். எப்படிப்பட்டவர் விமானமும் வெள்ளியங் கிரிக்குமேல் விண்ணில் பறந்து செல்லாது; இந்திரன் முதலான இமையவர்களும் கூட நடந்து வந்துதான் சந்திர சேகரரைத் தரிசனம் செய்வது வழக்கம்" என்று சொன்னார். தசக்கிரீவன் கோபித்துக் கொண்டு, "பிதாமகன் முதலானவர்களும் எனக்குப் பணிவிடை புரிந்து வருகிறார்கள்; மூன்று உலகங்களிலும் என் கட்டளையை எதிர்க்கின்றவர் இல்லை; நான் இந்தச் சிறிய வெள்ளி மலைக்கும், இதில் வசிக்கின்ற மலையாளிக்கும் பயந்து, நடந்து செல்லமாட்டேன்; என் பிரயாணத்துக்கு இடையூறு செய்கின்ற இந்தச் சிறிய மலையை இப்பொழுதே பெயர்த்துக் கடலில் எறிந்து விடுகிறேன்" என்று விமானத்திலிருந்து இறங்கி, வெள்ளி மலையை அசைத்துப் பெயர்க்கத் தொடங்கினான். பலம் பொருந்தியவனாதலால் இருபது கைகளா

லும் கஷ்டப்பட்டு மெள்ள மெள்ள அந்த மலையைப் பெயர்த்து விட்டான்.

அவ்வளவில் மலை நடுங்கத் தொடங்கிற்று. நிர்நிமித்த மாய்த் தோன்றிய மலை யசைவுக்குப் பயந்த பார்வதீ தேவி சிவ பெருமானைச் சேர்த்துக் கட்டிக்கொண்டனள். கடவுள் அதற்குச் சிரித்துத் தம் கால் பெருவிரலினால் மலையைச் சிறிது அழுத்தினார். அவ்வழுத்தலால், தசக்கிரீவன் இரு பது புயங்களும் நெரிந்து, எலும்புகள் நொறுங்கிப், பத்து வாய்களிலும் இரத்தம் பெருக நசுங்கி, மூர்ச்சை யடைந்து போனான். பின்னர் மூர்ச்சை தெளிந்ததும் அவனுக்கு மலையை விட்டு விலக முடிய வில்லை. அது நிமிஷத்துக்கு நிமி ஷம் பல அதிகமாகி வருத்த வாரம்பித்தது. தசக்கிரீவன் வருத்தம் பொறுக்க முடியாமல் நெடுங்குரல் பாய்ச்சி அழுது புலம்பலானான். படைவீரர் யாவரும் அசுரத்தலைவனை விடு விக்கச் சக்தி யின்றித், தாங்களும் அவ்விடத்திலேயே நின்று அழுதுகொண் டிருந்தார்கள். அசுரத் தலைவனுக்கு ஆயிரக் கணக்கான வருஷங்கள் கைலை மலையின் கீழ் அழுகையிலேயே கழிந்துபோயின. அவன் அழுகை உலகங்களுக் கெல்லாம் பயத்தை உண்டு பண்ணிற்று.

அப்பொழுது நாரத முனிவர் அவ்விடம் வந்து சேர்ந் தார். அவர் தசக்கிரீவனை நோக்கிப், "புத்தியற்றவனே! நீ சிவ பெருமான் விஷயத்தில் அபசாரப் பட்டுவிட்டனை; அதனால், இந்தத் துன்பம் உண்டாயிற்று; இதனை நீக்குவதற்கு வேறொருவரும் சமர்த்த ரல்லர்; இப்பொழுது உன் நல் லொழுக்கத்தினால் அந்தக் கடவுளுக்கு ஆநந்தத்தை உண்டு பண்ணு; வருத்தத்தினின்றும் விடுபடுவாய்" என்று, சொல்லிச் சென்றனர். உடனே தசக்கிரீவன் தன் சிரத்

தில் ஒன்றையும், காத்தில் ஒன்றையும் அறுத்து, அவற்றை வீரவீணை யாக்கிக்கொண்டு, சாம வேதத்தைக் கானம் செய்து, சிவ பெருமானைச் சந்தோஷப்படுத்தினன்.

அதனால், கண்ணுதற் கடவுள் களிப்படைந்து வந்து, "அசுர ராஜனே! உன் துதிக்குச் சந்தோஷ மடைந்திருக்கிறேன்; நீ நெடுங் காலமாக மலையின் கீழே வருந்தி அழுது கொண்டிருந்தபடியினால், உனக்கு இராவணன் என்னும் பெயர் பொருந்தட்டும்; நீ இன்றுமுதல் எனக்கு முதற் பக்தன் ஆயினை; உனக்கு இஷ்டமான வார்த்தைக் கேள்; தருகிறேன்" என்று சொன்னார். இராவணன் கடவுளை வணங்கிப், "பெருமானே! தெரியாமைத் தனத்தினால் நான் தங்களைக் கொடுஞ் சொற்களினால் தூஷித்து அபசாரப்பட்டுவிட்டேன்; இன்சொல்லின் உயர்வையும், வன்சொல்லின் இழிவையும், நான் இப்பொழுதுதான் அறிந்துகொண்டிருக்கிறேன்; தாங்கள் என்மீது கருணை கொண்டு இலங்கைப் பட்டினமும், என் அரசும், என்றும் அழியாதிருக்க வரம் தரவேண்டும்" என்று பிரார்த்தித்தான். கடவுள் அவன் காத்தில் ஒரு சிவ லிங்கத்தைக் கொடுத்து, 'வீரனே! இவ்விலிங்கத்தை எடுத்துச் சென்று, இலங்கைப் பட்டினத்தில் பிரதிஷ்டை செய்து பூஜித்துக் கொண்டு வா! உன் எண்ணம் சித்தியாகும்' என்று, வரம் கொடுத்துப் போனார். இராவணன் மன மகிழ்ச்சியோடு சிவ லிங்கத்தைப் பெற்றுக்கொண்டு சென்றான். அவ்விலிங்கம்தான் இப்பொழுது கோகர்ண க்ஷேத்திரத்தில் குற்ற மற்று விளங்குகின்றது. ஆதலால், உயர்வடைய விரும்புகின்றவர் எப்பொழுதும் இன்சொல்லையே சொல்லிவர வேண்டும்.

—கோகர்ணத் தலபுராணம்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

—(o)—

11—செய்ந்நன்றி யறிதல், சீதை

செய்ந்நன்றி யறிதல் என்பது பிறர் தனக்குச் செய்த நன்மையை மறவாமல் அறிதலாகும்: உலக வாழ்க்கைக்கு அவசியமானவற்றில் ஏதேனும் ஒன்று இல்லாமல் இடர்ப்பட்டு நிற்பவனுக்கு அவ்விடர் நீங்கச் செய்யும் காரியத்தை உதவி யென்று கூறுவர். அவ்வுதவி சொல்லல், செய்தல், ஈதல் என்று, மூன்று வகைப்படும். சொல்லலாவது ஒருவன் நேர்முகமாகச் செய்ய முடியாத வுதவியைச் செய்யும தன்மையுள்ளவனுக்குப் பரிந்து பேசியும்,கடிதம் கொடுத்தும் செய்விப்பது. செய்தலாவது தானே நேரில் செய்து முடிப்பது. ஈதலாவது ஒன்றைக் கொடுப்பது.

ஒருவர்க்கொருவர் உதவி செய்வதனால்தான் உலகம் நடை பெறுகின்றது. அங்ஙனம் செய்பாராயின், உலகத்தில் உலாவ முடியாது. உதவியை இரண்டு வகையாய்ப் பிரிக்கலாம்: ஒன்று, செய்த பின்னர்ப் பலகாலம் வரையிலும் பதனழியாமல் நின்று, பயன் பட்டுச் சிறப்பது. மற்றொன்று, செய்த மறு நிமிஷத்திலேயே மறைந்துபோகும் தன்மையுள்ளது. உணவின்றி மடிகின்ற ஒரு மனிதனுக்கு உப்பற்ற கூழும் உறுதி செய்வதனால், உதவியின் பெருமை, அடைகின்றவன் அவசியத்தை அநுசரித் திருக்கின்றது.

ஒருவா செய்த அபகாரத்தை மறப்பதும் உபகாரத்தை நினைப்பதும் உயர்ந்தவர் இலக்கணமாகும். தெங்கு, தன் தாளிற் கொண்ட நீரை இளநீராக்கித் தலையில் தருகின்றது.

உள்ளன்போடு செய்த உதவிக்கு உலகமும் ஈடாகமாட்டாது. விலங்குகளும் பறவைகளும்கூட உதவியை மறப்பதில்லை யென்றால், உதவியைப் பெற்றவன் அதனை அடியோடு மறந்து விடுவது மனித வாழ்க்கைக்கு மரியாதை யாகுமா? பாவங்களுக் கெல்லாம் பரிகாரம் சொல்லுகின்ற பிராயச்சித்த நூல்கள் நன்றி மறந்தவர்க்கு ஒருவிதத்திலும் பரிகாரம் சொல்லவில்லை. அதனால், நன்றி மறத்தலைக் காட்டிலும் கொடிது வேறு கிடையாதென்று வெளிப்படுகின்றது.

முன்னர் வாயுதேவனுக்கு அஞ்சனை யென்ற பெண் குரங்கின் வயிற்றில் அநுமான் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அறிவு ஆண்மை முதலியவற்றில் அவனுக்குச் சமானமானவர் இல்லை. அவன் சுக்கிரீவன் என்னும் வானர ராஜாவின் மந்திரி. தசரத புத்திரனான இராமன் வனத்தில் வாசம் செய்கையில், மனைவியைத் தேடிக்கொண்டு சகோதரன் இலக்ஷ்மணனோடு ரிச்யமூகம் என்னும் மலையில் வந்து சேர்ந்தான். அங்குச் சுக்கிரீவனுக்கும் அவனுக்கும் நட்பு உண்டாயிற்று. இராமன் சுக்கிரீவன் வேண்டுதலின் மீது அவன் சகோதரன் வாலியைக் கொன்று, வானர ராஜ்யத்தைச் சுக்கிரீவனுக்குச் சொந்தமாக்கின பிறபாடு, குரங்குப் படைகள் சீதையைத் தேடிக்கொண்டு சென்றன. அப்பொழுது, அங்கதன் முதலான வீரர்களோடு அநுமான் தென்திசையில் சீதையைத் தேடிக்கொண்டு போனான். மகேந்திர மலையி லிருந்த சம்பாதி யென்னும் கழுகரசன் மூலமாக அவர்கள் சீதை இலங்கைப் பட்டினத்தில் சிறையி லிருந்து வருந்துவதைத் தெரிந்துகொண்டார்கள். ஆனால், கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு அநுமானைத் தவிர அவர்களில் ஒருவர்க்கும் சக்தி யிருக்கவில்லை. அதனால், அந்

கதன் முதலானவர்களுடைய வேண்டுகோளின்மீது அநுமான் இலங்கைக்குப் போனன்.

அவன் அந்தப் பெரும் பட்டினத்தில் எல்லா விடங்களிலும் தேடி, முடிவில் அசோகம் என்ற ஒரு அழகிய வனத்தில் சீதையைக் கண்டான். அந்தச் சமயத்தில் சீதை, இராவணன் சொல்லிய கடுஞ் சொற்களைக் கேட்டுச் சகியாமல் கழுத்தில் கொடியைச் சுற்றிக்கொண்டு இறக்கத் தீர்மானித் திருந்தாள். அநுமான் அதனை உணர்ந்து, அரக்கியர்க்குத் தெரியாமல் சீதை முன்னர்ச் சென்று வணங்கி, "அன்னையே! அடியேன் இராமரால் அனுப்பப்பட்டவன்; என்னை அநுமான் என்று அழைப்பார்கள்; தங்களைத் தேடிவரும்பொருட்டு எழுபது வெள்ளம் வாநர வீரர்கள் எல்லாத் திக்குக்களிலும் சென்றிருக்கிறார்கள்; நான் அதிருஷ்டம் செய்திருந்தபடியினால் தங்களைக் கண்டு வணங்கும்படியான பாக்கியத்தைப் பெற்றேன்; இராவணனைச் சேர்ந்தவன் என்று என்னைச் சந்தேகிக்க வேண்டாம்; இராமர் இப்பொழுது கிஷ்கிந்தையைச் சேர்ந்த ரிஶ்யமூக மலையில் இலக்ஷ்மணரோடு இருந்து வருகிறார்; அவர் தங்களிடம் கொடுக்கும்படி தந்த அடையாளமும் இதோ இருக்கின்றது" என்று சொல்லி, ஒப்புயர்வற்ற ஒரு கணையாழியைக் கொடுத்தான்.

இறக்க விருந்த தருணத்தில் அநுமான் கொண்டுவந்து கொடுத்த கணையாழியைக் கண்டும், தன் கணவன் சொல்லியனுப்பின அன்புரைகளைக் கேட்டும், சீதை சந்தோஷக் கடலில் அமிழ்ந்தினள். அவள் உடம்பு பூரித்தது. மயிர் சிலிர்த்தது. கண்கள் ஆநந்த வருவி சொரிந்தன. பின்னர்ச் சீதை அநுமானை நோக்கி, "ஒப்பற்ற வீரனே! நீ கைம்மாறற்ற வுதவியை எனக்குச் செய்திருக்கிறாய்; உன்னுத

விக்கு எதனைக் கொடுத்தாலும் ஈடாக மாட்டாது; ஆயினும், சந்தோஷ மிகுதியினால் கொடுக்கின்ற எனது வரத்தைக் கேள்; நான் கற்பிலும் ஒழுக்கத்திலும் குற்ற மற்றவளானால், எல்லா வுலகங்களும் அழிந்துபோகின்ற முடிவு காலத்திலும் கூட, நீ அழிவடையாமல் என் முன்னர் இப்பொழுது இருப்பதுபோலவே எப்போதும் இருந்துவா" என்று ஒருவராலும் கொடுக்க முடியாத உயர்ந்த வரத்தைக் கொடுத்தாள். கிடைத்தற்கு அருமையாகிய அந்த உயர்ந்த வரத்தைப் பெற்று அநுமான் அதிக சந்தோஷம் கொண்டான். ஆதலால், பெரியவர்களுக்கு ஒருவன் அற்ப வுதவியைச் செய்தாலும் அவர்கள் அதனை அதிகமாய்ப் பாராட்டுவார்கள்.-இராமாயணம்.

தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

—(o)—

12—நடுவு நிலைமை, யுதிஷ்டிரர்

நீதியை ஆராயும்பொழுது பகைவர், அயலார், நட்பினர் என்ற மூவரிடத்திலும் ஒரே தன்மையாக நடந்து வருதலை நடுவுநிலைமையென்று சொல்லுவர். நடுவுநிலைமை மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களாலும் நிறைவேற்றப்படுகின்றது. நடுவுநிலைமைக்குப் பக்ஷமும் பகை இரண்டும் பெரிய சத்துருக்கள். அறிஞர் அவ்விரண்டையும் மனத்தில் கொள்ளமாட்டார்கள், ஏனென்றால், பக்ஷமுள்ள விடத்தில் குற்றமும், பகையுள்ள விடத்தில் குணமும், மறைந்து போய்விடும். பொருள்களின் நிறையைத் தராசுக் கோல் திட்டப்படுத்துவதுபோல மனம் நடுவு நிலைமையைத் திட்டப்படுத்துகின்றது.

நடுவு நிலைமையைக் கடப்பதனால் கிடைக்கின்ற செல்வத்தைக் காட்டிலும், அதனைக் கடவாமல் அடைகின்ற தரித்திரமே சாலச் சிறந்தது. அந்தத் தரித்திரம் புகழையும் புண்ணியத்தையும் வளர்க்கும். நடுவு நிலைமையைக் கடந்து செய்யும் தொழில், செய்யும்பொழுது மாத்திரம் சிறிது இன்பம் தந்து அப்புறம் செய்தவனுக்குக் கேட்டை உண்டுபண்ணும். கொள்வது மிகையும், கொடுப்பது குறையும் ஆகாமல், தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்பக் கருதிக், கொண்டும் கொடுத்தும் பொருள் திரட்டுகின்ற உத்தம வணிகர்போல, வித்தியாசம் வருக்காமல் நடுவு நிலைமையைக் கொண்டு நற்புகழ் திரட்டவேண்டும். சிலர், இந்நடுவு நிலைமை அரசர்க்கும், அவர் அதிகாரம் பெற்றவர்க்கும் மாத்திரம், அடுத்ததென்று சொல்லுவர். அஃது அறியாமை. நடுவு நிலைமை அனைவருக்கும் பொது. அதனை யுடையவன் பலவிதமான இன்னல் இடைஞ்சல்களை எதிர்க்க நேரிடும். முன்னர்ப் பலர் அதன் பொருட்டுத் தம்மையும் துறந்திருக்கின்றனர்.

முற்காலத்தில் இந்திரப் பிரஸ்தத்தில் இருந்த யுதிஷ்டிர சக்ரவர்த்தி இராஜசூயம் என்னும் ஒரு பெரிய வேள்வியைச் செய்ய விரும்பினார். பீமன், அர்ச்சுனன், நகுலன், சகதேவன் என்ற நான்கு சகோதரர்களும் நான்கு திக்குக்களிலும் சென்று, அங்குள்ள அரசர்களை வென்று, பெரும் பொருள் திரட்டி வந்தார்கள். அந்த யாகத்துக்கு உலகத்தில் இருந்த எல்லா அந்தணரும், எல்லா முனிவரும், எல்லா அரசரும், வந்திருந்தார்கள். யாக காலத்தில் அந்தணர் போஜனம் செய்யும் பொழுது தெரியாமல் நேரிடுகின்ற எச்சில் முதலான அசுத்தங்களைச் சுத்தம் செய்யும்பொருட்டுத், தான் இருக்கும் இடத்தைச் சுற்றிலும் ஒரு யோசனை தூரம் வரையில் புனித மாக்க

வல்ல *. புருஷாமிருகம் என்ற விலங்கைச் சென்று, அழைத்து வரவேண்டும் என்று கண்ணன் கூறினர்.

அவ்விலங்கு இமய மலையில் தவம் செய்துகொண் டிருந்தது. அவ்விலங்கை அழைத்து வருவதற்குப் பீமன்தான் தகுந்தவன் என்று அனைவரும் தீர்மானித்தார்கள். ஏனென்றால், பீமசேனன் சிவ பக்தியில் சிறந்தவன். அந்த விலங்கும் சிவ பக்தியில் சிறந்தது. அதனுற்றான் அவன்செல்லவேண்டியதாயிற்று. பீமன் சக்ரவர்த்தியினிடத்தில் கட்டளை பெற்றுக்கொண்டு, இமய மலைக்குச் சென்றான். நடுவழியில் அவனுக்கு அநுமானுடைய நட்புக் கிடைத்தது. அவர் பீமன் வரலாற்றை உணர்ந்து, அந்த மிருகத்தை அழைத்து வரும் விதத்தை அறிவித் தனுப்பினர். அவனும் அப்படியே புருஷா மிருகத்தைக் கண்டு, சக்ரவர்த்தியின் கட்டளையைக் கூறினன். அவ்விலங்கு இரண்டொரு நிபந்தனையின்மீது வருவதற்கு ஒப்புக்கொண்டது. அந்நிபந்தனை என்னவென்றால், 'பீமசேனன் கூப்பிடு தூரத்துக்கு முன்னாலேயே சென்றுகொண் டிருக்கவேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டாவது அவன் அந்த எல்லைக்குள் இருக்க லாகாது; அங்ஙனம் இருந்தால், அவனை அந்த மிருகம் இரையாக்கிக் கொள்ளவேண்டும்.'

பீமசேனன் அவ்வேற்பாட்டின்படி அந்த மிருகத்தை அழைத்துக்கொண்டு வந்தான். பலத்திலும் வேகத்திலும் பீமன் மிஞ்சி யிருந்தாலும், இல்வாழ்க்கையில் இருப்பவனுதலால், புருஷா மிருகத்தோடு போட்டி செய்ய முடியவில்லை. விலங்கு தன்னை நெருங்கும்போதெல்லாம் அவன் அநுமான்

* மனிதர் முகமும் விலங்கின் உடலுமுடைய ஒரு வகைப் பிராணி.

கொடுத்த ஒருவிதமான கல்லை எடுத்துப் போடுவான். அந்தக் கல் உடனே சிவ லிங்கமாக உருப்பெற்றுக் கொண்டு விடும். சிவ பக்தியில் சிறந்த அந்தப் புருஷா மிருகம் அச் சிவ லிங்கத்துக்குச் செய்யவேண்டிய பூஜையைச் செய்து திரும்புவதற்குள் பீமன் நெடுந்தூரம் வரையில் நடந்து வந்து விடுவான். இடும்பியின் கணவன் இங்ஙனமே எல்லா வழிகளையும் கடந்து,இந்திரப் பிரஸ்தத்தி லிருந்த யுதிஷ்டிர சக்ர வர்த்தியின் யாக சாலையை அணுகித், தன் ஒருகாலைச் சாலைக் குள் வைத்தான். மற்றொரு காலைத் தூக்கி யெடுப்பதற்குள் புருஷா மிருகம் வந்து அவனைப் பிடித்துக்கொண்டுவிட்டது. பீமன் ' என்னைப் பற்றக்கூடாது; நான் வேள்விச் சாலைக்குள் வந்து விட்டேன்' என்றான். அம்மிருகம் 'உன்னுடைய மற்றொரு கால் வெளியில் இருப்பதனால் நான் பிடித்துக் கொள் வதற்கு நியாயம் இருக்கின்றது' என்றது.

பின்னர் இருவரும் அந்த வழக்கைச் சக்ரவர்த்திக்குத் தெரிவிக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். சக்ரவர்த்தி ராஜசபையில் இருந்தார். இருவரும் அவரை வணங்கி, வழக்கைத் தெரிவித்தார்கள். அவர் நியாய நுட் பத்தை நெடுநேரம் வரையில் ஆராய்ந்து, 'பீமசேனனுடைய பெரிய சரீரத்தில் பாதி, புருஷா மிருகத்துக்குச் சேரவேண்டி யது'. என்று தீர்ப்புப் பண்ணினார். அப்புறம், அந்த அறி வுள்ள மிருகம் பீமசேனனைச் சகோதரன் என்றும் பாராமல், நியாயத்தை நினைந்து தீர்மானம் பண்ணின சக்ரவர்த்தியின் செயலுக்குச் சந்தோஷித்துப், பீமசேனனை விட்டுவிட்டது. ஆதலால், நடுவு நிலைமையை நினைந்து, நியாயத்தைத் துலாக் கோல்போல எல்லா விடத்திலும் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

—மஹாபாரதம்.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

——(○)——

13—அடக்க முடைமை, விசுவாமித்திரர்

அடங்குவது அடக்கம், அடக்கம் தொழிற் பெயர். இது தன்னடக்கம் உலக வடக்கம் என்று, இரண்டு பிரிவு படும். மனச் சாக்ஷிக்கு மாறுபடாமல் அடங்குவது தன்னடக்கம். அரச நீதிக்கும் உலக் நிந்தைக்கும் பயந்து அடங்குவது உலக வடக்கம். இரண்டிலும் தன்னடக்கம் சாலச் சிறந்தது. அஃதுள்ளவருக்கு அடுத்த வடக்கம் தானுகவே சித்திக்கும்.

இன்னும் இது, மன வடக்கம், மொழி யடக்கம், மெய் யடக்கம் என்றும் பிரிவுபடும். மனத்தால் அடங்குவது மன வடக்கம். இஃது இம்மை மறுமை இரண்டையும் செம்மை செய்யும் தன்மை யுள்ளது. பொய்ச் சொல், கோட் சொல், கொடுஞ் சொல், பயனில் சொல் என்ற நான்கும் வெளியாகாமல் நாவை அடக்கிப் பேசுவது மொழி யடக்கம். பிறர் பொருள் வெஃகாமை, பிறர்க்குத் தீங்கு செய்யாமை முதலியவை மெய் யடக்கம்.

மனவடக்கம் இல்லா திருப்பது தனக்கு மாத்திரம் துன்பம் செய்யும். பின்னைய விரண்டும் தனக்கும் பிறர்க்கும் துன்பம் இழைக்கும். தன் னடக்கம் உள்ளவனுக்கு எல்லாச் சிறப்புக்களும் எளிதில் எய்துகின்றன. ஒருவனுக்குக் கைப் பொருளைக் காட்டிலும் அடக்கம் சிறந்தது. அடக்க முடைமை அமரர் உலகத்தையும், அடக்கம் இல்லாமை அல்லல் நரகத்தையும் அடைவிக்கும். வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு அடங்கு

வது பொய்ந் நடிப்பாகும். அந்தஸ்து, அதிகாரம், ஆண்மை என்றவற்றை அதிகமாய்க் கொண்டவர் அடங்குவதைத்தான் அடக்கம் என்று சொல்லுவர். அடக்கம் உள்ளவரை அனைவரும் விரும்புவர். அடக்கம் ஒருவனுக்கு உலகத்தில் வளர்ச்சியையும் புகழையும் தரும்.

ஒரு சமயம் தெய்வ சபையில் எல்லாத் தேவர்களும் எல்லா முனிவர்களும் நிறைந் திருந்தார்கள். அப்பொழுது 'மண்ணுலகத்தில் உண்மை தவறாதவர் யார்?' என்று ஒரு வினா உண்டாயிற்று. வசிஷ்ட முனிவர் "மண்ணில் அரிச்சந்திரன் என்று ஓர் அரசன் இருக்கிறான்; அவன் சூரிய வம்சத்தில் பிறந்தவன்; கோசல நாட்டுக்குத் தலைவன்; அயோத்தியில் இருப்பவன்; அவன் உண்மைக்குப் பொக்கிஷம்; கனவிலும் பொய் சொல்லக் கருதான்; எனக்குத் தெரிந்தவரையில் அவனைத் தவிர வேறொருவரும் இலர்" என்று சொன்னார். அனைவரும் 'நிஜம், நிஜம்' என்று, ஒப்புக்கொண்டார்கள். இந்திரனும் சந்தோஷமடைந்தான்.

அப்பொழுது அங்கிருந்த விசுவாமித்திர முனிவர் பரபரப்போடு எழுந்து, "இந்திரனே! வசிஷ்டர் சொன்னது முழுவதும் பொய்; அதில் சிறிதும் உண்மை கிடையாது; தம் சிஷ்யனைப் புகழவேண்டும் என்ற வீண் எண்ணத்தினால், அந்தப் பயனற்ற அரிச்சந்திரனை 'உண்மை தவறாதவன்' என்று, உயர்த்திப் பேசியிருக்கிறார்; அவன் உலகத்தில் மிகவும் சாதாரணமானவன்; அவன் வாயில் ஒரு பொய் யன்று; ஒன்பது பொய்யை வரச்செய்யலாம்; அவசியம் என்று தோன்றினால், ருஜூப்படுத்துகிறேன்; அப்படிச் செய்யத் தவறின், நான் இதுவரையில் செய்திருக்கின்ற அருந் தவத்தில் பாதியை அவ்வரிச்சந்திர மன்னவனுக்கு அளித்து விடு

கிறேன்'' என்று சொன்னார். உடனே வசிஷ்ட முனிவர் 'தேவர் தலைவனே! இந்தக் கௌசிகர் இப்பொழுது சொல்லிய படி அரிச்சந்திர மன்னவனைப் பொய்ய னாக்குவாரானால், நான் மண்டை யோட்டில் கள்ளைப் பெய்துகொண்டு, தெற்கு நோக்கிச் செல்கிறேன்' என்று கூறினார். இந்திரன் 'அப் படியே யாகட்டும்' என்றான். அனைவரும் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

பின்னர் விசுவாமித்திரர் தம் சபதத்தை நிறைவேற்றும் பொருட்டு அரிச்சந்திரனிடம் வந்து, 'வேள்விக்குப் பொன் வேண்டும்' என்று யாசித்து, அவன் உண்மை ஒழுக்கத் தைத் தெரிந்துகொண்டார். மிகவும் அசாத்தியமான ஒரு பெருங் காரியத்தில் தாம் இறங்கி யிருப்பதாக, அவருக்கு அப் பொழுதுதான் தெரிந்தது. பிற்பாடு, அரிச்சந்திரனைக் கொடுமை முன்னிலையாவது பொய் புகலச் செய்யவேண்டும் என்று, சில கொடிய விலங்குகளைப் படைத்து, அவன் நாட் டுப் பயிர்களை அழிக்க ஏவினார். அரசன் அதன்பொருட்டு அமைச்சர்களோடு வேட்டைக்குச் சென்றான். அச்சமயத் தில் கௌசிகர் தாழ்ந்த குலத்தில் பிறந்த இரண்டு பெண்களை அனுப்பி, அரசனைக் கலியாணம் செய்துகொள்ளத் தூண்டி னார். அப்புறம், கோபம் அடைந்தவர்போல அபிநயம் செய்து, அயோத்திக்கு வந்து அரசன் சொல்லிய சில வசனங்களை ஆதாரமாக்கி, அவன் இராஜ்யத்தை அபகரித்துக்கொண்டு அவனை மனைவி மக்களோடும் வனத்துக்குப் போக்கினார்.

அரசன் வனம் செல்லும்பொழுது அவன் தமக்குக் கடன் தரவேண்டும் என்று சொல்லி, தவணை நாற்பது நாள் தந்து, வசூலித்து வரும்படி சிஷ்யன் ஒருவனுக்குச் சொல்லி யனுப்பினார். கடன் கொடுக்க வழி யில்லாமல் கோசல மன்ன

வன் காசிப் பட்டணம் சென்றான். அங்கு முனிவர், தம் கடன் பொருளில் பாதிக்கு மனைவி சந்திரமதியையும் மகன் லோகி, தாஸ்யனையும், காளகண்டன் என்ற அந்தணனுக்கு அடிமை ஆக்குவித்தும், மறுபாதிக்கு வீரபாகு வென்னும் பறைய னுக்கு அரசனையே அடிமைப் படுத்தியும், சுடுகாடு காக்கப் பண்ணினார்.

அதுவரையிலும் சபதம் நிறைவேறுவதற்கு ஒரு வித மான அறிகுறியும் உண்டாகவே யில்லை. அதனால் கவுசிக முனிவர் பின்னரும் அரசனை வருத்த வெண்ணிக்கொண்டு, அவன் மகன் லோகிதாஸ்யனைப் பாம்பினால் இறந்தவன் போலாக்கிச், சந்திரமதியே அந்தச் சிறுவனைச் சுடுகாட்டுக்கு எடுத்துப் போகும்படியும் செய்தார். அவர் உத்தேசம் அரிச் சந்திரன் கூலி பெறாமல் மகனைக் கொளுத்திவிடுவான் என் பது. நியாயத்துக்கு நிதி போன்றவனாகிய அரிச்சந்திர மன் னவன் அதற்கு இடம் கொடுக்க வில்லை. அவன் மனைவியைப் பார்த்து, 'நீ ஐயர் வீட்டுக்குச் சென்று, பிணம்சுடு கூலியைப் பெற்றுக்கொண்டு வா! அது யஜமானருக்குச் சொந்தம்' என்று சொல்லி யனுப்பி விட்டான்.

சந்திரமதி திரும்பி வரும் வழியில் அவள் காசி ரா ஜன் மகனைக் கொலை புரிந்தாள் என்று, காவற்காரரைக் கொண்டு குற்றம் சாட்டுவித்துச், சந்திரமதியைச் சபையில் நிற்கப் பண்ணினார். முனிவர் மாயையில் மயங்கிய அந்தக் காசி மன்னவன் சந்திரமதியைப் பெண்ணென்றும் பாராமல், கொலை செய்யும்படி கட்டளை கொடுத்துவிட்டான். முனிவர் அந்தக் கொலையை அரிச்சந்திர மன்னவனே செய்து முடிக்கும்படியும் ஏற்பாடு செய்திருந்தார். உண்மை தவ றாத மன்னவன் கொஞ்சமும் மனம் சலியாமல், கொலைத்

தீர்ப்புப் பெற்ற மனைவியை வெட்டுவதற்கு வாளை ஓங்கி விட்டான்.

சபதம் முடியும் என்று, அதுவரையிலும் தவங்களைக் கணக்கின்றிச் செலவிட்டு வந்த விசுவாமித்திர முனிவர் இனிப் பயனில்லை என்று தெரிந்து ஓடோடியும் வந்து, சந்திரமதியைக் கொல்லவொட்டாமல் தடுத்தும், இந்திர சபையில் நடந்த வாக்குவாதங்களைப் படித்தும், "அரசர் தலைவனே! நான் முக்காலும் தோல்வி யடைந்து போனேன்; நீ என்னால் மிகவும் வருத்த மடைந்து விட்டனை; அதன்பொருட்டு என் தவத்தில் பாதியைப் பெற்றுக்கொண்டு, முன்னர்ப் போலவே அயோத்திக்குச் சென்று அரசாட்சி செய்துவா! உன்னை அடிமைகொண்டவன் உண்மையில் பறையன் அல்லன்; அவன் தென்திசைக்குத் தலைவனான அறக் கடவுள்; மனைவியை அடிமை கொண்டவனும் அக்னி தேவன்; கவலை கொள்ளாதே; அதோ பார்! உன் மகனும் காசி மன்னவன் மகனும் எழுந்து வருகின்றார்கள்; அவர்கள் உண்மையில் இறந்து போகவில்லை; இறந்தவர்போலக் காணப்பட்டார்கள்; எனது எல்லாத் தவங்களும் உன்னைப் பொய்யனாக்க முயன்றதில் பொன்றிப் போய்விட்டன; இந்திரன் சபையில் வாயை மூடிக்கொண்டிருந்தால், இத்தனை கஷ்டங்களும் எனக்கு நேர்ந்திரா; அஃது என் அடக்க மின்மைக்குக் கிடைத்த தண்டனை; நீ பட்டணம் சென்றுவாழ்" என்று, அநுக்கிரகம் செய்து தவஞ் செய்யப் போனார். ஆதலால், எப்படிப்பட்டவர்களா யிருந்தாலும், நாவை அடக்கிப் பேசவேண்டும். —சண்டகௌசிகம்.

யாகாவா ராயினும் நாகாக்க ; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

——(o)——

14—ஒழுக்கமுடைமை, வால்மீகிமுனிவர்

ஒழுகுதல்-ஒழுக்கம். ஒழுகுதல்-நடத்தல். இதனைப் பொது வொழுக்கம் சிறப் பொழுக்கம் என்று இரண்டாகப் பிரிப்பர். கடவுள் பக்தி, கருணை, உதவி, கீழ்ப்பணிவு முதலியவை பொது வொழுக்கங்கள். சாதிக்கும் ஆச்சிரமத்துக்கும் உரியன வென்று சான்றோரால் சொல்லப்பட்டவை சிறப் பொழுக்கங்கள். வேத மோதல், வேள்வி செய்தல் போல்வன அந்தணருக்கும், அரசு புரிதல், அறப்பயிர் வளர்த்தல் போல்வன அரசருக்கும், வாணிகம் செய்தல், வளர்பொருளீட்டல் போல்வன வணிகருக்கும், பசுக் காத்தல், பயிர் செய்தல் போல்வன வேளாளருக்கும் சிறப் பொழுக்கங்களாம். கல்வி வாழ்க்கை, இல் வாழ்க்கை, வன வாழ்க்கை, துறவு வாழ்க்கை என்று ஆச்சிரமம் நான்கு வகைப்படும். கல்வி வாழ்க்கைக்குக் கற்றலும் குருபக்தியும், இல்வாழ்க்கைக்கு விருந்தோம்பலும் சுற்றம் தழுவலும், வன வாழ்க்கைக்குத் தவமும் உண்டி சுருக்கலும், துறவு வாழ்க்கைக்கு மன வடக்கமும் ஆசையின்மையும், ஒழுக்கங்களாகும். கல்விக்கு அறிவும், அறிவுக்கு ஒழுக்கமும் பயன்.

ஒழுக்கம் ஒருவனுக்குச் சிறப்பை அளிக்கும். அழுக்காறு கொண்டவனுக்குச் செல்வமும், ஒழுக்கம் அற்றவனுக்கு உயர்வும் ஒருகாலத்திலும் உண்டாவதில்லை. குலப் பெருமையைக் காட்டிலும் ஒழுக்கப் பெருமை உயர்வு பொருந்தியது. அஃது ஒரு நாளும் குறை வடையாது. ஒழுக்கம் உள்ளவனுக்கு உம்பர்நாட்டுப் பதங்களும் உரிமையா யிருக்கும். அவன் எல்லா விடங்களிலும் பெருமையையும் பூசனையையும் பெறுகிறான். அவன் பெருமைக்கு அமரர் உலகமும் சிறிய தாகின்றது.

ஒரு காலத்தில் வனத்தில் ஒழுக்கம் கெட்ட அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்குத் தீய வொழுக்கத்தினால் வளர்ந்த குடும்பம் பெரியதா யிருந்தது. அவ்வந்தணன் காட்டிற் செல்லும் பிரயாணிகளை மடக்கி வழிப்பறி செய்து, அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். ஒரு சமயத்தில் அகஸ்தியர் வசிஷ்டர் முதலான சப்த ரிஷிகளும் அவன் எதிரில் வந்தார்கள். அந்தணன் கைத்தடியினால் அவர்களை அச்சுறுத்திக், 'கைப்பொருளைக் கொடுத்துச் செல்லுங்கள்' என்று கூறினான்.

முனிவர்கள் "அப்பா! உன் இஷ்டப்படியே கொடுத்து விடுகிறோம்; எங்களுக்கு ஒரு சந்தேகம் உண்டாகின்றது. அதற்குச் சமாதானம் சொல்லிவிடு; அப்புறம், மூட்டைகளை எடுத்துக்கொண்டு போகலாம்; நீ வழிப்பறி செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகின்றனை; இதனால் உண்டாகின்ற பாபம் யாவரை அடைகின்றது" என்று கேட்டார்கள். அந்தணன் "இதில் சந்தேகம் என்ன வந்தது? வழிப்பறி செய்யும் பாபம் குடும்பத்துக்குப் பொது; ஏனென்றால், அந்தப் பொருளை நான் ஒருவன் மாத்திரம் உபயோகித்துக் கொள்ளவில்லை; குடும்பத்தில் உள்ள அனைவரும்தாம் கூடிப் புசித்து வருகிறோம்; ஆதலால், பாபத்திலும் அனைவருக்கும் பாகம் உண்டு" என்றான். முனிவர்கள் "இருக்கலாம்; அவர்கள் சம்மதப்பட வேண்டாமா? எல்லாவற்றையும் சென்று விசாரித்துக் கொண்டுவா! அதுவரையில் நாங்கள் இங்கேயே யிருக்கிறோம்; ஒருசமயம், மோசம் செய்வோம் என்று தோன்றினால், மூட்டைகளைக் கையில் கொண்டுபோ" என்றார்கள்.

அந்தணன் அப்படியே மூட்டைகளோடு வீட்டுக்குச் சென்று, மனைவி மக்களைப்பார்த்து, முனிவர்கள் சொல்லியவற்

றைக் கேட்டான். அவர்கள் சிரித்துக்கொண்டு, "பேஷ்! பேஷ்!! நன்றா யிருக்கின்றது! நீ குடும்பத்துக்குத் தலைவன்; எங்களைக் காப்பாற்றுவதற்கு எவ்விதத்திலும் கடமைப்பட்டவன்; நீ நற்றொழில் செய்து பொருள் கொண்டுவருவதை நாங்கள் வேண்டாம் என்று மறுக்கவில்லை; அல்லது உலகத்தில் உள்ள போஷகர்களைக் காட்டிலும், நீ அதிகமாக ஒன்றும் செய்துவிடவும் இல்லை; எங்கள் பாபத்தில் உனக்குப் பாகம் உண்டே யல்லாமல், உன் பாபத்தில் எங்களுக்குப் பாகம் கிடையாது; நீ இதனை இத்தனை நாட்களாய்த் தெரிந்துகொள்ளாததற்கு நாங்கள் விசனப்படுகிறோம்; காலை முதல் குழந்தைகள் பட்டினி கிடக்கின்றன; என்ன கொண்டு வந்திருக்கிறாய்? மூட்டையை அவிழ்த்துக் கொட்டு" என்று சொன்னார்கள்.

அந்தணன் ஒன்றும் சொல்லத் தோன்றாமல், 'ஐயையோ! இனி என்ன செய்வோம்?' என்று பயந்து, மூட்டைகளை அப்படியே சுமந்துகொண்டு திரும்பி, வழிப்பறி செய்யும் இடத்தை அடைந்தான். எழு முனிவர்களும் அங்கு ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார்கள். அந்தணன் அடியற்ற பனைபோல அவர்கள் பாதத்தில் விழுந்து பணிந்து, "பூஜ்யர்களே! நான் இதுவரையிலும் குடும்பத்தை நம்பிக் கெட்டுப் போய்விட்டேன்; எனக்கு எப்படியாவது நற்கதியை அளிக்கவேண்டும்" என்று, பலவாறு சொல்லிப் புலம்பிப் பிரார்த்தித்துக் கொண்டான். கருணைக் கடலான அந்த முனிபுங்கவர்கள் அந்தணன் வேண்டுகோளுக்கு இரங்கி, எதிரில் இருந்த ஒரு மாமரத்தைக் காட்டி, 'நீ இதன் பெயரை எப்பொழுதும் ஜபம் செய்துகொண்டுவா! நாளடைவில் நற்கதி பெறுவாய்' என்று, சொல்லிப் போனார்கள். அந்தணன் அவ்விடத்திலேயே உட்

சார்ந்து விடாப்பிடியாக 'மரா மரா-மரா' வென்று, ஜபம் செய்துகொண் டிருந்தான்.

பாபம் நீங்கவேண்டும் என்ற விருப்பத்தினால் அந்தணனுக்கு ஊணிலும் உறக்கத்திலும் உள்ளம் செல்லவில்லை. அப்படியே நெடுங்காலம் வரையில் அவ்விடத்தை விட்டுப் பெயராமல், நிலையா யிருந்துவிட்டான். நாள் செல்லச் செல்ல, அந்தணனிடத்தில் விடாப்பிடியும், தூயமனமும், உயர் தவமும், சிறந்தன. புற்றுக்கள் அவனை முற்றிலும் மறைத்துச், சுற்றிலும் வளர்ந்தன. நான்முகக் கடவுள் அதனைக் கண்டு ஆச்சரியம் அடைந்து வந்து, வருணனைக்கொண்டு, மழை பொழிவித்து, வளர்ந்திருந்த புற்றுக்களைக் கரைத்து, வேதியனை வெளியில் வரப் பண்ணினார். பின்னர் அவனுக்கு வால்மீகி யென்ற பெயரையும், விசேஷ ஞானத்தையும் வளரச் செய்து, வேண்டிய வரங்களைக் கொடுத்து மறைந்தார். அப்புறம், அவ்வந்தணன் வால்மீகி யென்ற பெயரோடு வடமொழியில் இராமாயணம் என்னும் மகா காவியத்தைச் செய்து, உலகத்தில் பிரசித்தி பெற்று விளங்கினான். ஆதலால், தீய வொழுக்கம் ஒருவனுக்குக் கெடுதியை உண்டு பண்ணுவது போலவே, நல்லொழுக்கம் புகழை உண்டுபண்ணும். —வால்மீகி சரித்திரம்.

ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.

—(o)—

15—பிறனில் விழையாமை, இராவணன்

பிறனில் விழையாமை என்பது அயலான் மனைவியை விரும்பா திருத்தலாம். பலர் அறியப் பிறனுக்கு உரிமையானவளை விரும்புவது இம்மை மறுமை என்ற இரண்டிடத்திலும் இழிவை உண்டுபண்ணும். இந்தத்துர்க்குணத்தின் முன்னர்ப்

பெருந்தன்மை பரோபகாரம் முதலான பல நற்குணங்களும் பெருமையை இழக்கின்றன. பிறனில் விழைதலென்பது ஒருவனிடத்தில் உள்ள பெரிய பெரிய தருமங்களையும் பயன் படவொட்டாமல் பாழாக்குகின்றது. கல்வியும் அறிவும் நாகரிகமும் உள்ள மனிதருக்கு இப் பிறனில் விழையாமை பெரிய வொழுக்கமாகும்.

பெண்களுக்குக் கற்பைப்போலவே புருஷர்களுக்குப் பிற னில் விழையாமை பெரிய பூஷணம். புருஷன், படிப்பு முதலிய வற்றில் பெண்களினும் பெருமை பெறுவதனால், ஒரு கற் பழிந்த காரிகையினது கேட்டைக் காட்டினும், பிறனில் விழையும் பேதையின் கேடு, பலமடங்கு இழிவு பெற்றது. இஃதுள்ளவனுக்குப் பிறர் பகை உரிமை யாகும். பாபம் பெருகி வளரும். இரவிலும் பகலிலும் அச்சம் குடிகொண் டிருக்கும். அவன் நல்ல வுடம்பு நோய்க்கு அடிமைப்பட்டு நலியும். இறந்த பின்னரும் கூட உலகம் அவனைப் பழியாமல் இருப்ப தில்லை. இத்தீய வொழுக்கம் தொடாதவனை எல்லா நற் குணங்களும் நாடி யடைகின்றன. அவன் சுவர்க்கம் சென்று, இமையவர்களுடன் என்றும் இன்புற்று வாழ்கிறான்.

விசிரவசுவின் புத்திரனை இராவணன் பிதாமகனை நினைந்து, நெடுங்காலம் வரையில் தவம் செய்து, மூன்றரை கோடி ஆயுளையும், தேவர்களினாலும் தெய்வ வகுப்பினரா லும் மடியா திருத்தலையும், தன் சிரங்களும் கரங்களும் சண் டையில் எத்தனை தடவை துணிபட்டுப் போனாலும், மறுபடி யும் மறுபடியும் முளைத்து வளர்தலையும் வரமாகப் பெற்று, இலங்கைப் பட்டினத்தில் இருந்து அரசு புரிந்துவந்தான். இந் திரன் முதலான தேவர்களும் தெய்வப் பெண்களும் அவனுக் கும் அவன் மனைவிமாருக்கும் குற்றேவல் புரிந்து, குறிப்

யறிந்து கிடந்தார்கள். மூன்று உலகங்களிலும் அவன் கட்டளை கெட்டியாய்ப் பரவிற்று. அவன் நினைத்தவற்றை நினைத்த வண்ணம் முடித்துக்கொண் டிருந்தான்.

நெடுநாள் கழித்து அவன் சகோதரி சூர்ப்பணகை என்பவள் 'சீதை இராமனோடு தண்டகாரண்யம் வந்திருப்பதையும், தெய்வப் பெண்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்ற அவள் இயற்கை யழகையும், இராவணனுக்குக் கூறினாள். உடனே இராவணன் சீதையைச் சிறைகொண்டு வர வேண்டும் என்று, ஜனஸ்தானத்தில் இருந்த மாரீசனிடம் சென்று, வந்த காரியத்தை விளம்பினான்.

மாரீசன் இராமன் பராக்கிரமத்தை மிகவும் அறிந்திருக்கின்றவன். அவன் "இராவணா! சீதை உனக்குத் தகுந்தவள் அல்லள்; அவள் இராமன் உயிர்; நீ நெருப்பி லிருந்து சுடரைப் பிரிக்க நினைக்கிறாய்; இராமன் இராக்ஷதர்களுக்கு யமன்; உன் கொடுமைக்குப் பயந்தவர்களும், முனிவர்களும், அவனிடம் சென்று அடைக்கலம் அடைந்திருக்கிறார்கள்; இளம் பிராயத்திலேயே அவன் எங்களால் வெல்ல முடியாதவனா யிருந்தான்; நான் ஒருதடவை அவனிடத்தில் அகப்பட்டுக்கொண்டு உயிர் தப்பி வந்ததை நினைத்தால், இன்னும் திகில் உண்டாகின்றது; அதுமுதல் கனவிலும்கூட நான் இராமனை நினைந்து கருத்தழிந்து வருகிறேன்; நீ சுணப்பன் வீட்டுக் கோழி போல வலுவிற் சென்று, அவன் பகையை வருவித்துக் கொள்ளாதிரு; இன்னும் ஒன்று பார்! உன் வரத்தில் மனிதர்கள் குறிக்கப் படவில்லை; இம்மை மறுமை என்ற இரண்டிடத்திலும் ஏற்றத்தை விரும்புகின்றவன் அயலான் மனைவியின்மீது ஆசை கொள்ளமாட்டான்; நீ இவ்விடத்திலேயே சீதையை மறந்து, பட்டணம் போய்ச் சேர்; நெடுங்

காலம் வரையில் சவுக்கியமா யிருப்பாய்'' என்று,பலவிதமா கப் புத்தி கூறினன்.

மாரீசன் வசனத்தை இராவணன் போற்றிக் கொள்ள வில்லை; அவனைத் தன் அதிகாரத்தினல் பொன்மா னாக்கிச், சீதையின் முன்னர் விளையாடப் போக்கினன். இராம லக்ஷ் மணர் இருவரும் ஒருவர்பின் ஒருவராக அந்தமானைப் பற்றும் பொருட்டு, சீதையை விட்டுப் பிரிந்து போய்விட்டார்கள். இராவணன் அதுதான் சமபம் என்று, அவர்கள் ஆச்சிரமத் தில் நுழைந்து, சீதையைத் தூக்கிக்கொண்டு இலங்கைப் பட் டினம் சென்ருன். அங்கு அசோகம் என்ற வனத்தில் அரக் கியர் காவலில் அவளைச் சிறை வைத்துத், தன்னைக் கணவ னுய்க் காதலிக்கும்படி அந்தக் காரிகையைக் கட்டாயப்படுத்தி வந்தான். இராம லக்ஷமணர்கள் ஜடாயுவென்கிற கழு கரசனல் இராவணன் மோசத்தை உணர்ந்து, அநுமான் முதலான வாநர வீரர்களோடு அவன் பட்டினத்தை முற்றுகை யிட் டார்கள்.

இராவணன் இராம லக்ஷமணர்களை மனிதர்கள் என்று அலக்ஷ்யம் பண்ணி, முதலில் படை வீரர்களையும், புத்திரர் களையும், பந்துக்களையும், போர்செய்யப்போக்கினன். சண்டைக் குச் சென்றவர்களில் திரும்பிவந்து செய்தி சொல்வதற்குக் கூட ஒருவரும் மிகாமல், அனைவரும் இறந்து போய்விட்டார் கள். அப்புறம், இராவணன் இராமனேடு சண்டை செய்து, தன் அரிய வரத்தையும், பலத்தையும் அநியாயமாக இழந்து, ரண களத்தில் ஆவியழிந்து போனன். அவன் முதலில் சீதையை விரும்பி எடுத்து வராதிருந்தால், இராமன் பகையும், அயலான் மனைவியை விரும்பின பாவமும், உலகப் பழிப்பும், அவனை அடைந்திரா தல்லவா, ஆதலால், எப்படிப்பட்ட மேன்மை

யுள்ளவர்களானாலும், அயலான் மனைவியின்மீது ஆசை கொள்ளக்கூடாது.

—இராமாயணம்.

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

—(o)—

16—பொறையுடைமை, யுதிஷ்டிரர்

பொறை யுடைமை யாவது பிறர் தமக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுதலாம். பொறை—தொழிற்பெயர். பொறு—பகுதி. உலகத்தில் காரணம் பற்றியாவது, அறியாமை பற்றியாவது, பிறர் தீங்கு செய்யலாம். இஃது உலக வியற்கை. தீங்கு செய்தவர்க்குப் பதில் இழைத்துத், தீங்குண்டாக்கும் திறமை இருந்தாலும், அதனைச்செய்யலாகாது. அவரிடத்துப் பெருந்தன்மை காட்டவேண்டும். அதுதான் பொறை யுடைமையின் இலக்கணம்.

இவ்விஷயத்தில், மனிதர் உத்தமர், மத்திமர், அதமர் என்று, மூன்று வகைப்படுவர். செய்த தீங்குக்குப் பதில் செய்வது மிகவும் சாதாரணம். காமம், வெகுளி முதலிய குற்றங்களுக்கு அடிமையானவர் பிறர் செய்த கெடுதிகளுக்குப் பதில் இழைத்துத், தம் ஆயுள், பொருள், மானம், என்பவற்றை அநியாய மாக்கி வருந்துவர். இவர் கடை வகுப்பு. பிறர் தமக்குச் செய்த தீங்குக்குப் பதில் செய்யாமல் பெருந்தன்மையினால் பொறுத்துக் கொள்கின்றவர் இடை வகுப்பு. ஏனென்றால், செய்த தீங்கு நினைவில் இருக்குந்தனையும் செய்தவரைக் காணுந்தோறும் காணுந்தோறும் உள்ளத்தில் ஒரு விதமான கோதிப்பு உதித்து வளர்ந்துகொண்டிருக்கும். அந்தக் கோதிப்பை வளரவிடாமல் அடக்கிக் கொள்வதற்கு,

அதனை யுடையவர் அடிக்கடி முயற்சி செய்யவேண்டும். செய்த தீங்கு மனத்தைவிட்டுத்தீர்ப்பாய்த்தொலைந்துபோகுமானால், பின்னொருசமயத்தில் அவர் தமக்குப் பிரியமுள்ள நண்பரும் ஆகலாம். அதனால், பழிப்பற்ற பெரியவர் பிறர் தமக்குச் செய்த தீங்கை முழுவதும் மறந்துவிடுவார்கள். இன்னும் அந்தப் பெரியவர், பிறர் தமக்குத் தீங்கு செய்ததன் பொருட்டுக்கடவுள் தண்டனையை அடையாதிருக்கவேண்டுமேயென்று கண்ணீர் வடித்தும் வருந்துவர். இவர்கள்தாம் முதல் வகுப்பு.

நிலமும் மரமும் பொறை யுடைமைக்கு உதாரணங்களாம். நிலம் அகழ்கின்றவனையும், மரம் வெட்டுகின்றவனையும், தாங்கியும், நிழல் தந்தும், காத்துவருகின்றன. அதமர், செய்த தீங்குக்குப் பதில்இழைக்கின்ற ஒருநாளைக்கு மாத்திரம் இன்பம் அடைவர்கள். அங்ஙனம் செய்யாமல் பொறுத்த மத்திமர் தாங்கள் பூமியில் பொன்றிப்போகுந்தனையும் புகழ் பெற்றிருப்பார்கள். செய்த தீங்கை முழுவதும் மறந்து, செய்தவர்க்குச் சிறப்பையும், செல்வத்தையும் தரும் சீரியர், உலகம் உள்ளவளவும் உயர்ந்த கீர்த்தியைப் பெறுவார்கள். பகைஞரைத் தீங்கு செய்து வெல்வதைக் காட்டிலும் பொறை செய்து வெல்வது சாலவும் சிறந்தது. அறிஞர் இதன் உண்மையை உணர்ந்து, பொறை யுடைமையைப் போற்றிக் கொள்ளவேண்டும்.

யுதிஷ்டிர சக்ரவர்த்தி இந்திரப் பிரஸ்தத்தில் இராஜஸூயம் என்னும் யாகம் செய்தார் என்று முன்னர்ப் படித்திருக்கிறீர்கள். அந்த யாகத்துக்கு எல்லா அரசரும் வந்து திரண்டிருந்தார்கள். 'உலகத்தில் எவரும் இப்படிச் செய்ததில்லை' என்னும்படி அவ்வேள்வி விமரிசையுடன் நடந்தது. துரியோதனன் யாககாலத்தில் அரசர்கள் கொணர்ந்து கொடுக்கின்ற காணிக்கைகளை வாங்கிப், பொக்கிஷத்தில் சேர்த்துவந்

தான். குன்றம் குன்றமாய்க் குவிகின்ற தனத்தையும், இரத்தினங்களையும், காணுந்தோறும் காணுந்தோறும், அவன் மனத்தில் பொறாமை வளர்ந்து பெருகிற்று. அந்தப் பெரும் பொருள்களை எப்படியாவது தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்று, அவன் தீர்மானித்துக் கொண்டுவிட்டான்.

வேள்வி முடிந்த பிற்பாடு, வந்திருந்தவர் யாவரும் விடைபெற்றுக்கொண்டு போனார்கள். துரியோதனனும் அத்தினபுரத்தை அடைந்தான். அப்புறம் ஊணையும் உறக்கத்தையும் அவன் உள்ளம் உவக்கவில்லை. தன் எண்ணத்தை எப்படி ஈடேற்றிக் கொள்ளலாம் என்று, அவன் இரவும் பகலும் யோசிக்கத் தொடங்கினான். அப்பொழுது காந்தார தேசத்துக்குத் தலைவனும், துரியோதனனுக்கு மாமனுமான சகுனியென்பவன் அவன் மனக் கலக்கத்தை உணர்ந்து, 'நான் சூதாட்டத்தினால் பாண்டவர் பொருள்களை உனக்குப் பறித்துத்தருகிறேன்' என்று, துரியோதனனுக்கு ஆசை வார்த்தை சொன்னான். காரியத்தில் கண்ணுள்ளவனான துரியோதனன் அவ்வாட்டம் நடத்தும் விதத்தைக் கர்ணன் முதலானவர்களிடத்தில் நன்றாய்க் கலந்துகொண்டு, பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் அத்தின புரத்துக்கு அழைப்பித்துக் கொண்டான்.

சூதாட்டத்துக்கென்று புதிய சபை ஒன்று சிறப்பிக்கப்பட்டது. பீஷ்மர் துரோணர் முதலான பெரியவர்களும் அந்தச் சபையில் பிரஸன்னரா யிருந்தார்கள். சகுனியும் யுதிஷ்டிரரும் எதிருக்கெதிர் உட்கார்ந்து, பந்தயம் வைத்துப் பாய்ச்சிகையை உருட்டி, ஆட்டமாடினார்கள். அன்று பிற்பகல் வரையில் அவ்வாட்டம் இடையீடில்லாமல் இன்பமாய் நடந்தது. அதில் யுதிஷ்டிர சக்ரவர்த்தி தமக்கு உரிமையான நாடு, நக

ரம், அடிமை, பொக்கிஷம் முதலிய எல்லாவற்றையும் பந்தயம் வைத்துத் தோற்றார். அப்புறம், சகோதரர்களையும், தம்மையும் தம் மனைவியையும் கூட அவ்வாட்டத்திற்குப் பந்தயமாக்கி விட்டார். ஒன்றும் பயன்படவில்லை. வெற்றி சகுனியையும் தோல்வி தருமரையும், தழுவி மகிழ்ந்தன.

பல நாட்களாய்ப் பிரயத்தனம் பண்ணி வந்த தன் பெரு முயற்சி பலன் தந்ததற்குப் பாம்புக் கொடியோன் பேருவகை பூண்டான். பின்னர்ப் பாண்டவர் பூண்டிருந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் அவிழ்த்துத் தரப்பண்ணி, அவர்களுக்கு மிகவும் எளிய வஸ்திரங்களைக் கொடுத்து, எதிரில் நிற்க வைத்தான். அவனுக்கு அதனாலும் அமைதி உண்டாகவில்லை. பாஞ்சாலியையும் அவ்வண்ணம் செய்து பார்க்கவேண்டும் என்று, ஆசை உண்டாயிற்று. அதனால், அந்தப்புரத்தில்இருந்த பாஞ்சாலியைப் பேரவைக்குக் கூட்டிவரும்படி சகோதரன் துச்சாதனனைத் தூண்டினான். அப்புறம் துரௌபதி அவனால் கட்டாயப்படுத்தப்பட்டு அரசர்சபையை அடைந்தாள். ஆனால், அவள் பாண்டவர்களைப்போல தன் ஆடையைஅவிழ்த்துத்தருவதற்கு அங்கீகரிக்கவில்லை. அதன்பொருட்டுத் துச்சாதனனால் பலாத்காரம் செய்யப்பட்டாள். துரியோதனன் அதனுடனும் அமையாமல், பாண்டவர்களுக்கும் பாஞ்சாலிக்கும் அவமானம் உண்டாகின்ற வார்த்தைகளைச் சொல்லி, அடிமைகள் என்று அதிகாரம் செய்துபழித்தான். பீமன்முதலான சகோதரர்கள் அதனைப் பொறுக்கமுடியாமல், 'துரியோதனனையும், அவன் நண்பர்களையும் தங்கள் ஆயுதங்களுக்கு ஆஹுதி செய்து விடுகிறோம்' என்று, கோபம் கொண்டு குதித்துக் கிளம்பினார்கள்.

யுதிஷ்டிரர் தம் சகோதரர்கள் ஆற்றல் நிரம்பினவர்கள் என்றும், சொல்லிய வண்ணம் செய்து தீர்ப்பார்கள் என்றும்

தெரிந்திருந்தும்கூடத் தாம்,கோபம் கொள்ள வில்லை. மிகவும் சாந்த மனத்தோடு "சூரர்களே! துரியோதனன் அந்நிய னல்லன்; நமது சகோதரன்; தெரியாமைத் தனத்தினால் நம்மைத் தூஷித்து மகிழ்கிறான் ; நம் கைவிரல்களில் ஒன்று கண்ணைக் குத்தி விட்டதென்று, விரலை வெட்டக் கூடுமா? சாந்த மடையுங்கள் ; இனி அவனே தான் செய்யும் பிழைபை நினைந்து, வருந்தி வாடுவான்;மனிதர்க்குப் பொறுமை பெரிய பூஷணம்; அதனை இப்பொழுதுதான் அணியவேண்டும் ; படித்தறிந்தவர்களான நீங்கள் அதனைக் கைவிட லாகாது ; அஃது இரண்டிடத்திலும் புகழை உண்டு பண்ணும்" என்று சொல்லி, அவர்களைச் சாந்தப்படுத்தினர். மற்றொரு சமயத்தில்,அவர் அந்தப் பொறுமைக் குணத்தினாலேயே துரியோதனனையும், அவன் படைவீரர்களையும், போரில் வெற்றிகொண்டு இழந்தவுரிமைகளைத் திரும்பவும் பெற்றுச், சக்ரவர்த்தியாகிச் சகோதரர்களுடன் சந்தோஷமா யிருந்தார். ஆதலால்,பொறுமை எவற்றிலும் உயர்ந்தது. மனிதர்க்கு அதனிலும் சிறந்த கவசம் இல்லை.

—மகாபாரதம்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தல் தலை.

—(o)—

17—அழுக்காறாமை, விந்தியமலை

பிறர் பொருளையும் புகழையும் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பதற்கு அழுக்காறாமை என்று பெயர். அழுக்காறு—பொறாமை. இது முதனிலை திரிந்த தொழிற் பெயர், எதிர்மறை ஆகார இடைநிலையையும், மை விகுதியையும் கொண்டு, அழுக்காறாமை என்று முடிந்தது. பொறாமை

ஒருவனுக்குப் பெரிய சத்துரு. பொறாமை கொண்டவனுக்கு வேறு பகைஞர்வேண்டியதில்லை.ஒருவனுடைய பொருள் புகழ் இரண்டையும் போக்கிக் கெடுப்பதற்குப் பொறாமை ஒன்றே போதுமானது.

அழுக்காறு கொண்டவன் மனம் அரண்மனையில் இருந்தாலும், அடவிக்குச் சென்றாலும், அமைதி யடைவதில்லை. அஃது அநவரதமும் அவனை வருத்தி வாதைப்படுத்திக் கொண் டிருக்கும்.இன்னும், பெரியவர் சபையில் அவனைப் புக வொட்டாமல் தடுக்கும். ஒட்டகம் வேப்பிலையையும், காக்கை வேப்பம் பழத்தையும் விரும்புவதுபோலப், பொறாமை கொண்டவன் பிறர் குற்றங்களையே பார்த்துப் பேசுவான். அவன் மனக் குற்றமே அதற்கு முதற் காரணம். அஃதுள்ளவன் பிறரையும் அங்ஙனம் காண்பதில் விபரீதம் இல்லையல்லவா? இந்தப் பொறாமைப் பேய் ஒருவனுக்கு இம்மை மட்டிலும் அன்று;மறுமையிலும் தொடர்ந்து துன்பத்தைச் செய்யும். பொறாமையுள்ளவன் உணவுக்கும் உடைக்கும்இடர்ப்பட்டுத்,தன் பெரிய குடும்பத்தோடு வருந்துவான்.திருமகள் அவனைத் திரும்பியும் பார்ப்பதில்லை. அவள் தமக்கைதான் அவனை அடிமை கொண்டு அல்லற் படுத்துவாள்.

அஷ்ட குலாசலங்களில் ஒன்றாகிய விந்திய மலையினிடத்தில் ஒருசமயம் நாரதமுனிவர் வந்தார். அம்மலை யரசு அவருக்கு உபசரணை செய்து க்ஷேமம் விசாரித்தது. நாரதர் அது தன்னைக் கேட்ட ஒவ்வொன்றுக்கும் விடை சொல்லி வந்து, கடைசியில் "மலை யரசனே! உலகத்தில் மேருமலை எல்லா விதத்திலும் விஞ்சி யிருக்கின்றது; அதன் ஒரு சிகரத்தில் கைலாயமும், ஒரு சிகரத்தில் சத்திய வுலகமும், ஒரு சிகரத்தில் வைகுண்டமும், இருந்து வருகின்றன; கங்கை

முதலான புண்ணிய நதிகளும் அதனிடத்தில் உற்பத்தியாகி, உலகத்தை வளர்க்கின்றன; அமராவதி முதலான தெய்வ நகரங்கள் யாவும் அதன் சரிவுகளிலும், தாழ்வரைகளிலும், சிறந்திருக்கின்றன ; அது கீழ்க்கடல் முதல் மேற்கடல் வரையிலும் பரந்து வளர்ந்திருப்பதனால், ஆகாய வீதியில் உலாவி வருகின்ற சூரியன் சந்திரன் முதலான கிரகங்களும், அசுவனி பரணி முதலான நக்ஷத்திரங்களும், அதனை வலம் செய்கின்றன ; தேவ கணங்களாலும், தெய்வப் பெண்களாலும், யாக வேதிகைகளாலும், தாபதக் கூட்டங்களாலும், அம்மலை அதிக மகிமை கொண்டிருக்கின்றது; நான் அதுபோன்ற பெருமையுள்ள மலையைப் பார்த்ததே யில்லை'' என்று புகழ்ந்து சொல்லி, அதனிடம் விடை பெற்றுக்கொண்டு போனார்.

அவற்றைக் கேட்டதுமுதல் விந்திய மலைக்குத் தன் இருப்பில் திருப்தி யுண்டாக வில்லை. அது மேருவின் சிறப்பை எண்ணியெண்ணிப் பொறாமை கொண்டு, அதனை அநவரதமும் தூஷிக்கத் தலைப்பட்டது. அதன் பெருமையை நினைக்க நினைக்க, அதற்கு வயிற் றெரிச்சல் வளர்ந்தது. 'மேருமலை அங்ஙனம் சிறப்பதற்குக் காரணம் என்னவா யிருக்கலாம்' என்று, அது பலவிதத்திலும் ஆலோசனை செய்தது. முடிவில், 'பனிமலை வளர்ந் திருப்பதனாற்றான் அவ்வளவு பெருமையையும் அடைந்திருக்கவேண்டும்' என்றும், 'தானும் அதற்குச் சரியாய் வளர்ந்து விட்டால், இந்திரன் முதலானவர்கள் தன்னிடத்திலும் வந்து தங்குவார்கள்' என்றும், தீர்மானித்துக் கொண்டு, அன்று முதல் அதிகமாய் வளரத் தொடங்கிற்று.

அம்மலை அப்படியே விடாமல் முயன்று, உயர்ந்து வளர்ந்து, சில நாட்களுக்குள் வானத்தை மூடி மறைத்துக்

கொண்டுவிட்டது. அதனால், சூரியன் சந்திரன் முதலான கிரகங்களின் கதிகளுக்குத் தடை உண்டாயிற்று. அப்புறம், இந்திரன்முதலான தேவர்கள் அகஸ்திய முனிவரைக் கண்டு, 'தபோ தனரே! தாங்கள் சென்று விந்திய மலையினது வீண் முயற்சியை மாற்றிவர வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்கள். முன்னொரு சமயத்தில் கடல் தண்ணீரை ஆசமனம் செய்தவராகிய அந்த முனி புங்கவர் அப்பொழுதே புறப்பட்டு வந்து, விந்திய மலையைக் கண்டார். விந்தியம் அவரை வணங்கி, "ஐயா முனிவரே! சில நாட்களுக்கு முன்பு நாரத முனிவர் வந்திருந்தார்; அவர் 'மேருமலை அதிகமாய் வளர்ந்து ஆகாயத்தை மறைத்துக்கொண் டிருப்பதனால், தேவர்கள் யாவரும் அதில் வாசம் செய்கிறார்கள்' என்று சொன்னார்; நான் அன்று முதல் வானத்தில் வளர்ந்து வருகிறேன்; என் வளர்ச்சியினால் இப்பொழுது மேருமலை இருக்கும் இடமே தெரியாமல் போயிற்று. இனி, என்னிடத்திலும் தேவர்கள் வந்து தங்குவார்கள் அல்லவா?" என்று கேட்டது.

அகஸ்தியர் 'மலைத் தலைவனே! உன் வசனம் உண்மையானது; நீ இன்னும் சற்று வளர்ந்துவிட்டால், தேவர்கள் உன்னிடத்திலும் வந்து வாசம் செய்வார்கள்; நான் இப்பொழுது மிகவும் அவசியமான ஒரு காரியத்தி னிமித்தம் தெற்கில் செல்லவேண்டும்; வயது சென்றவனாதலால், திரும்பி வரும் வரையில் நீ இப்படியே படுத்துக்கொண் டிரு! நான் உன்னைக் கடந்து வடக்கில் சென்ற பிற்பாடு, நீ மறுபடியும் நிமிர்ந்து வளரத் தொடங்கலாம்' என்று சொன்னார். அந்த மூடமலை 'முனிவரே! எனக்கும் வளர்ந்த விளைப்பு அதிகமா யிருக்கின்றது; நீங்களும் சீக்கிரம் திரும்பி வந்து விடுங்கள்' என்று,

விடைகொடுத் தனுப்பிற்று. முனிவர் தம் வல்லமையினுல் அம்மலையை எழாவண்ணம் அடக்கித், தெற்குத் திக்கிலுள்ள பொதிகை மலைக்குச் சென்று, தவம் செய்யத் தொடங்கினர். அவர் மறுபடியும் அந்த வழியில் திரும்பவே யில்லை. பின்னர் விந்தியமலை அகஸ்திய முனிவர் தன்னை உபாயத்தில் அடக்கிவிட்டதை யறிந்து, தன் பொறாமைக்கு அதுதான் பிரதிபலன் என்று, பெருமூச்சு விட்டுக்கொண்டு விசாரத் தோடு படுத்துக் கிடக்கின்றது. ஆதலால், எவரும் பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளக்கூடாது.

—ஸ்காந்தம்.

அழுக்கா றெனவொரு பாவி, திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

—(o)—

18—கள்ளாமை, வசுக்கள்

கள்ளாமை என்பதற்குப் பிறர் பொருளை வஞ்சித்துக், கொள்ளாமை என்பது பொருள். கள்ளாமை - எதிர் மறைத் தொழிற் பெயர். கள்ளல்—களவு செய்தல். பொருளைப் பறிகொடுத்தவன் மனம் பகீரென்று எரிந்து புண்படுமாதலின், களவுப் பொருள் ஒருவனுக்கு உறுதிப் பொருள் ஆகாது. கள்வன் தன் கைப் பொருளைப் பலரும் காணப் பகிரங்கமாய் வைத்து, அநுபவிக்க முடியாது. அவன் இராஜாங்கத்தில் தன் திருட்டுத் தொழில் எப்பொழுது வெளியாகித் தண்டனை உண்டாகுமோ வென்று, இரவும் பகலும் எண்ணி வருந்துவான். அவன் காணும் ஒவ்வொரு காட்சியும் குற்றமுள்ளதா யிருக்கும். அவன ஆபத்தில்லாத அரண்மனையில் இருந்தாலும், துன்பக் காட்டில் திரிந்து சுழல்பவன் போலத்

துடித்துப்பதைத்து வருந்துவான். அவன் திருட்டுத் தொழில் பலர்கூடிய சபையில் அவனைப் புக வொட்டாமல் தடுக்கும். விஷப்பாம்பு மனிதர் கண்ணுக்கு மறைந்து திரிவது போல, அவனும் மண்ணுலகத்தில் மறைந்து திரியவேண்டும். இன்னும் திருடன் இரவைப் பகலாகவும், பகலை இரவாகவும் கொண்டு, இடர்ப்பட்டுக் கலங்குவான்.

கள்வனுக்குத் தமர் பொருள் என்றும், பிறர் பொருள் என்றும், வேற்றுமை கிடையாது. அவசியம் நேர்ந்த பொழுது அனைவர் பொருளும் அவனுக்கு உரிமையானது தான். அவனை யன்றி, அவனுக்கு வேறு உறவினர் இல்லை. அவன் புரியும் அறங்களும் பயன் தராமற் போகும். அவன் பொருளுக்கும் மதிப்பு உண்டாகாது. அவன் இன்பமும் குறைவற்ற இன்ப மாகாது. திருட்டுத் தொழில் இம்மையில் இம்மூன்றையும் கெடுப்பதோடு, மறுமையில் மீளா நரகத்தையும் கொடுக்கும். களவு செய்பவர் அளவு கடந்த அந்தஸ்தில் இருந்தாலும், அத்தொழில் அவர்களைக் கிடுகிடு பாதாளத்தின் கீழே அமிழ்த்தி மூடும். ஒருவனுக்குத் திருடவேண்டும் என்ற நினைவே பாபத்தைக் கூட்டுவிக்கு மென்றால், ஆபத்துக்கும் நரகத்துக்கும் ஆலய மாகின்ற களவுத் தொழிலை அறிவுள்ளவர் கனவிலும் கருதுவார்களா ?

நெடுநாளைக்கு முன்பு வசிஷ்ட முனிவரிடத்தில் நந்தினி யென்று ஒரு காமதேநு இருந்தது. அந்தப் பசு தன்னிடம் யார் வந்து எதனை விரும்பினாலும், அதனைத் தடையின்றிக் கொடுத்துச் செல்லும். வசிஷ்டரும் அவர் ஆச்சிரமத்தில் உள்ள முனிவர்களும் தினமும் செய்துவருகின்ற வைதிகச் சடங்குகளுக்கு உதவி புரியும்படி அந்தப் பசு இந்திரனால் கொடுக்கப்பட் டிருந்தது. ஒரு சமயத்தில் அஷ்ட

வசுக்களும் வசிஷ்டர் ஆச்சிரமத்துக்கு வந்திருந்தார்கள். முனிவர் அவர்களுக்கு விருந்தளித்து உபசரணை செய்யும்படி காமதேநுவுக்குக் கட்டளையிட் டனுப்பினுர். அந்தப் பசு அவர்களுக்கு அறுசுவையோடு கூடின ஆகாரங்களை விதம் விதமாக வேண்டும் வரையில் கொடுத்தது.

வசுக்கள் எண்மரும் விலாப் புடைக்கத் தின்று, வசிஷ்ட முனிவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, அவ்விருந்தின் பெருமையை தங்கள் மனைவிமார்களிடத்தில் வியந்து கூறினுர்கள். அவர்களில் ஒருவன் மனைவி 'நாதா! மண்ணுலகத்தில் ஜிதவதி யென்னும் அரச குமாரி எனக்கு உயிர்த் தோழியா யிருக்கிறுள்; அவள் அழகில் சிறந்தவள்; அறிவில் மிகுந்தவள்; தான் அந்த உயர்ந்த சாப்பாட்டை அருந்தவேண்டும் என்று, நெடுநாட்களாக என்னை நிர்ப்பந்தித்து வருகிறுள்; ஏனென்ருல், காமதேநுவின் உணவை உண்டவர்கள் நித்திய யௌவனத்தோடு நெடுங்காலம் வரையில் இருந்து வருவார்களல்லவா! ஜிதவதி என் சிநேகத்தினுல் தன் அழகை மிகநீண்டகாலம் வரையில் நன்ருய் அநுபவித்துவரட்டும்; தாங்கள் அந்தப் பசுவைப் பிடித்து வந்து தாருங்கள் ; நான் அவள் எண்ணத்தை நிறைவேற்றித் தருகிறேன்" என்று சொன்னுள்.

அவ்வசு "நாயகி! அது தெய்வப் பசு; அது வசிஷ்ட முனிவருக்குச் சொந்தம் ; அது எங்கள் கட்டளைக்குக் கீழ்ப் படியாது ; அம்முனிவர் தவத்தில் உயர்ந்தவர்; அவர் வசத்தில் இருக்கும் பசுவை என்னுல் எப்படிக் கொண்டுவர முடியும்? வீணில் பிடிவாதம் பண்ணுதே" என்று, நயந்து கூறினுன். அவள் அவற்றை கவனிக்கவே யில்லை. 'எப்படியும் அந்தப் பசுவை எனக்குக் கொடுத்தே தீரவேண்டும்' என்று, பிடிவாதம் பண்ணத் தொடங்கினுள்.

அப்புறம் அவ்வசு மனைவியின் விருப்பத்தை மற்ற நண்பர்களுக்குச் சொல்லி, அவர்களையும் தனக்குத் துணைவரும்படி வேண்டினன். அவர்கள் விதி யில்லாமல் ஒப்புக்கொண்டு, வசிஷ்டர் ஆச்சிரமம் அடைந்து, சமயம் நோக்கி யிருந்தார்கள். பின்னர் ஒருநாள் இரவு ஆச்சிரமத்தில் அனைவரும் அயர்ந்து தூங்கும்பொழுது அவர்கள் பசுவைத் திருடிக்கொண்டு, தங்கள் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். எண்மரும் தேவர்களாதலால், அந்தப் பசு அவர்களுக்கு அடங்கி யிருந்தது.

மறுநாள் காலையில் ஆச்சிரமத்தில் அக்கினிஹோத்திர சாலைக்கு அருந்தவர் வந்தார்கள். வேள்விக்கு வேண்டிய பால் நெய் முதலானவை பசுவால் கொடுக்கப்பட வில்லை. அனைவரும் காமதேநுவைத் தேடினார்கள். அதனைக் காண வில்லை. பின்னர் வசிஷ்டரிடத்தில் வந்து சொன்னார்கள். அவர் பசு சென்ற விடத்தைத் தமது திவ்விய அறிவினால் தெரிந்து, சிற்றம் மேற் கொண்டு, 'என் தெய்வப் பசுவைக் களவு செய்த வசுக்கள் காசினியில் மனித ராகக்கடவர்' என்று, கடுஞ் சாபம் கொடுத்தார். உடனே அது வசுக்களுக்குத் தெரிந்தது. அவர்கள் ஓடோடியும் வந்து முனிவரைப் பணிந்து, தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு 'மன்னிக்க வேண்டும்' என்று மன்றாடி நின்றார்கள்.

கருணைக்கு உறைவிடமாகிய அந்த முனிபுங்கவர், "வசுக்களே ! நீங்கள் தேவர்கள் ; உங்கள் ஒழுக்கம் எப்பொழுதும் உயர்ந் திருக்கவேண்டும் ; ஏனென்றால், உங்களை வழி காட்டியாய்க் கொண்டு, உங்களுக்குக் கீழ் எட்டுக் கோடி வசுக்கள் இருந்து வருகிறார்கள் ; உங்கள் ஒழுக்கம் தீயதாயின், அஃது அவர்களையும் கெடுத்துக் குற்ற முள்ளவர்க ளாக்கும்; உங்கள் குற்றம் மன்னிக்கத் தக்க தன்று ; என் சாபமும் பொய்க்க

மாட்டாது ; எண்மரும் சென்று, மண்ணுலகத்தில் மனிதர்களாய்ப் பிறக்க வேண்டியதுதான் ; மனைவியின் சந்தோஷத்தை விரும்பிக், களவு செய்வதற்கு உங்களையும் துணைவராக்கிக்கொண்ட இந்தத் தியோவென்வன் மாத்திரம் உலகத்தில் நெடுங்காலம் வரையில் மனைவியை யிழந்து, பிரமசாரியா யிருக்கட்டும் ; நீங்கள் எழுவரும் பிறந்தவுடன் கொல்லப்பட்டு, உங்கள் பதத்தை அடையுங்கள்" என்று, அநுக்கிரகம் செய்தார். அஷ்ட வசுக்களும் மறுக்க வகை யில்லாமல், அப்புறம் சந்திர வம்ச சக்ரவர்த்தியான சந்தநு மன்னவன் மனைவி கங்காதேவியின் வயிற்றில் வந்து பிறந்தார்கள். உலகத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த பீஷ்மர் என்பவர் அவர்களில் ஒருவர். ஆதலால், எவ்வளவு உயர்ந்தவர்களா யிருந்தாலும், பிறர் பொருளை அபகரிக்க லாகாது. —மகாபாரதம்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே ; பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல்.

—(o)—

19—புறங்கூறாமை, தக்ஷன்

இஃது எதிரில் இல்லாதபொழுது ஒருவனை இகழ்ந்துரைத்தலாம். புறம்—பக்கம். இது சொற் குற்றத்தைச் சார்ந்தது. பிறர் குற்றங்களை எதிரில் கூறித் திருத்துவது பெரியவர் இலக்கணம். செய்தவனுக்குத் தன் குற்றம் தெரிந்திருந்தால், அதனைப் பரிகரிக்க வகை தேடுவான். எதிர் காலத்தில் குற்றம் செய்யாமல் விலகுவான். புறம் கூறுகின்றவன் ஒருவனை எதிரில் கண்டவிடத்து இன்சொல் சொல்லித் தழுவியும், காணாதவிடத்துப் பிறர்பால் இகழ்ந்துரைத்தும், நாய் பசை யின்றி வற்றிய வெற்றெலும்பைக்

கடித்துத், தன் னிரத்தத்தையே குடித்து இன்பம் அடைகின்றது போல, ஒரு விதமான பொய்ம் மகிழ்ச்சியைப் பெறுகிறான்.

புறம்சொல்கின்றவனைப் பெரியவர் அருவருப்பர். அவன் பலர் கூடிய சபையின் நடுவில் இருந்தாலும், பெருங்காட்டில் புதரில் வசிப்பவன்போலப், பெரிதும் துன்ப மடைந்து வருந்துவான். அவன் மனம் எப்பொழுதும் பதைத்துக்கொண்டே யிருக்கும். ஒவ்வொரு நிமிஷத்திலும் மனச்சாக்ஷி அவனை வருத்தி வாதனை செய்துவரும். புறம் கூறுகின்றவன் பிறர் குற்றங்களை அவர் காணுதவிடத்துச் சொல்லித், தான் மகிழ்ச்சி யடைவது போலப், பிறர் தன் குற்றங்களைச் சொன்னுல், தனக்கு மகிழ்ச்சி யுண்டாகுமா வென்று, ஒருபொழுதும் நினைத்துப் பார்ப்ப தில்லை. ஒருவன் அறம் செய்யாவிட்டாலும், புறம் கூறுதிருப்பது பெரியவர் விரும்பத் தக்கதாகும். புறம்சொல்வானைப் பூமி தன் பொறுமையின் பொருட்டுத் தான் தாங்கி வருகின்றது. புறம்கூறும் குற்றம் ஒருவனது புண்ணியங்களைக் கெடுக்கும். பெருமையைச் சிறுமை யாக்கும். புகழை விரும்புகின்றவன் அந்தப் புன்தொழிலைச் செய்யவே மாட்டான்.

முன்னர்ப் பிதாமகன் புத்திரனுன தக்ஷன் என்பவனுக்கு இருபத்தெட்டுப் பெண்கள் பிறந்தார்கள். முதற் புத்திரிக்குத் தாக்ஷாயணி என்று பெயர். பெண்கள் மணப் பருவத்தை அடைந்தபொழுது, தாக்ஷாயணியைச் சிவ பெருமானுக்கும், மற்ற அசுவனி முதலிய இருபத்தெழுவரையும் சந்திரனுக்கும் கொடுத்து, மணம் செய்வித்திருந்தான். தீவினைப் பயனுல், அப்புறம் தக்ஷனுக்குச் சிவ பெருமான்மீது துவேஷமும், சந்திரன்மீது சந்தோஷமும், அதிகரிக்கலாயின.

அதனால், அவன் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் சிவ பெருமானைப் பலர் முன்னர்ப் புறம் கூறிப் பழிக்கத்தலைப்பட்டு வந்தான். இளைய பெண்களையும் இளைய மருமகனையும் மாத்திரம் தன் வீட்டுக்கு அடிக்கடி அழைப்பித்தும், ஆடை அணிகள் அளித்தும்; இல்லாத விடங்களிலும் அவர்கள் குணங்களைப் புகழ்ந்தும், சந்தோஷம் பாராட்டுவான். இளைய மருமகன் தன்னிடத்தில் அடக்கமும் அன்பும் பொருந்தி யிருப்பதுபோல, மூத்தவன் இருப்ப தில்லை என்றும், அவன் கருவம் கொண்டவன் என்றும், அற்ப சகவாச முள்ளவன் என்றும், இரண்டொரு சமயங்களில் அவனை அவமானப் படுத்தினா லன்றி, நல்வழிப்படான் என்றும், தக்ஷன் அடிக்கடி சொல்லி வருவான்.

சில காலத்துக்குப் பிற்பாடு, தக்ஷன் உயர்ந்த வேள்வி யொன்றைச் செய்யத் தொடங்கினான். அதற்குச் சிவ பெருமானை ஒழிந்த எல்லாத் தேவர்களும் எல்லா முனிவர்களும் வந்திருந்தார்கள். தக்ஷன் மூத்த குமாரிக்கும் அவள் புருஷனுக்கும் மாத்திரம் செய்தி யனுப்ப வில்லை. வேள்வி விமர்சையாக நடந்துகொண் டிருந்தது. அப்பொழுது நாரத முனிவர் வந்து தக்ஷனைக் கண்டு, "கீர்த்தி யுள்ளவனே! நீ பிதாமகன் புத்திரன்; அந்தஸ்தையும் பெருமையையும் அதிகமாய்ப் பெற்றவன்; உன்னால் செய்யப்படுகின்ற இந்த வேள்வி மிகவும் உயர்ந்தது; இவ்வளவு பெரிய சபையில் தாக்ஷாயணியும் சிவபெருமானும் வாரா திருப்பது விரும்பத் தக்கதன்று; சிவ பெருமான் அனைவருக்கும் கடவுள்; நல்வினைப் பயனால் அவர் உனக்கு மருமக ராயினர். இப்பொழுதாவது அவசியமானவர்களை அனுப்பி, அவ்விருவரையும் அழைத்துவரப் பண்ணு; அதுதான் கவுரவமானது" என்று சொன்னார்.

அதனைக் கேட்டதும் தக்ஷனுக்குக் கோபம் உண்டா யிற்று. அவன் "முனிவரில் சிறந்தவரே! சிவ பெருமான் பெருமை எனக்குத் தெரியா திருக்கவில்லை; முன்னர்த் தெரி யாமைத் தனத்தினால் என் அருமைக் குமாரியை அவனுக் குக் கலியாணம் செய்து கொடுத்து விட்டேன்; அதனை இப் பொழுது அறைவதிற் பயன்இல்லை; தாக்ஷாயணியை மணப்ப தற்கு முன்பு சந்திர சேகரன் அன்பும் அடக்கமும் உள்ளவ னாகவே யிருந்தான்; அப்புறம் அவன் அறிவு மாறிப் போயிற்று; வேடர்களைப் போல மலையில் வசிப்பதும், பூத கணங்களோடு பேசிப் பழகுவதும், சுடுகாட்டுச் சாம்பலை உடம்பில் பூசிக்கொள்வதும், பிண வெலும்புகளை மாலையாய்த் தொடுத்து மார்பில் அணிவதும், எருக்கம் பூவைச் சிரத்தில் சூடுவதும், மண்டை யோட்டில் பிச்சை யெடுப்பதும், நாகரிக மும் நல்லொழுக்கம் உள்ளவர்களுக்கு நியாய மாகுமா? தாங்கள் தாம் நினைத்துப் பாருங்கள்! சாதுக்களின் பழக்கத்தை அவன் சற்றாவது கொள்கின்றானா? அநாசாரங்களின் ஆலயமாகின்ற ஆற்றுச் சடையானை மருமகனாய்க் கொண்டதில் என் மானம் போகின்றது; விரிசடைவானவன் வேள்விக்கு வாராதிருப் பதுவே விசேஷமான புண்ணியம்; மற்றொரு முறை தாங்கள் அவனைப் பற்றிச் சொல்லாதிருக்க வேண்டுகிறேன்" என்று சொன்னான். அதனால், தக்ஷன் தனக்கு வர விருக்கின்ற இழிவையும், பழியையும், எண்ணிப் பார்க்க வில்லை.

இஃது இங்ஙனமிருக்கத், தந்தை யாகம் செய்வதும், எல் லாத் தேவர்களும் யாகத்துக்குச் சென்றிருப்பதும், தாக்ஷா யணிக்குத் தெரிந்தது. அவள் தன்னையும் கணவனையும் தந்தை அநாதரவு பண்ணியிருந்தாலும், சமயத்தில் அதனைப் பாராட்ட லாகா தென்று, சிவபெருமானை வணங்கித், "தலை

வரே ! என் தந்தை வேள்வி செய்கிறார்; தங்களை அவ்வேள்விக்கு அழைக்கவில்லை என்பதை நான் அறியாதிருக்கவில்லை ; ஆயினும், வலுவிலாவது சென்று, அவ்வேள்வியைக் காண்பதற்கு விருப்பம் கொள்கிறேன்; என் சகோதரிகளும் வேள்விக்கு வந்திருப்பார்கள்; பிறந்த வீடு எவ்வளவு பயனற்றுக் கிடந்தாலும், பெண்களுக்கு மாத்திரம் பாசம் குறைய மாட்டாது ; தாங்கள் அனுப்பினால், நான் சென்று பார்த்து வருகிறேன் என்று கேட்டாள். கடவுள் 'நாயகி! உன் செலவை நான் தடுக்கவில்லை ; இஷ்டம் இருந்தால், இப்பொழுதே சென்றுவா !' என்று சொன்னார்.

உடனே தாக்ஷாயணி பூத கணங்கள் தொடரத், தந்தையின் வேள்விக்குப் போனாள். அவளை நல் வரவேற்று உபசரிப்பதற்குத் தந்தையாவது, அல்லது தந்தையைச் சேர்ந்தவர்களாவது, எழுந்து வரவில்லை. சபையில் இருந்தவர்கள் 'அதோ தாக்ஷாயணி வந்துவிட்டாள்; வந்த பின்னரும் கூட அவளை வரவேற்காமல் இருக்கலாகுமா? இந்தப் பெரிய சபையில் தந்தை செய்யும் அநாதரவை அவள் எப்படிச் சகித்துக்கொண் டிருப்பாள்' என்று பேசிக்கொண்டார்கள். அவற்றை கேட்டும் கூடத், தந்தை வாராதிருப்பது அவளுக்குத் தாங்க முடியாத துயரமா யிருந்தது. இளைய சகோதரிகள் யாவரும் ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு அன்பும் ஆதரவும் மிகத், தந்தையின் அருகில் சந்தோஷத்தோடு வீற்றிருக்க, மூத்தவளும் சிவபெருமானுக்கு மனைவியுமாகிய தான்மாத்திரம் அங்ஙனம் அநாதர வடைவது அவளுக்கு அவமானமா யிருந்தது. அதனோடு தந்தை தன்னெதிரில் கூடத் தன் கணவனை அலக்ஷியம் செய்து பேசினது அவளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பிற்று.

அதனால், அவள் அடங்காக் கோபம் கொண்டு தக்ஷன் எதிரில் சென்று, "தந்தையே! தாங்கள் இந்தப் பெரிய சபையில் என் கணவரைத் தூஷித்து எனக்கு அவமானத்தை விளைத்தீர்கள்; இது தங்களுக்கு நல்ல தன்று; யாகத்துக்கு என்னை அழையாத குற்றத்தையுங்கொள்ளாமல், வலுவில் நானாகவே வந்திருக்கும்போதுகூட அநாதரவு பண்ணினீர்கள்; குலப் பெண்கள் இவ்வவமானத்துக்கு ஆற்றலைடயார்கள்; இப்பொழுது நானும் என் தலைவரும் தங்களுக்கு வேண்டாதவர்க ளானோம்; அதனால், என்னைத் தங்கள் புத்திரி யென்று இயம்புவதற்கும், தாங்கள் வளர்த்த சரீரத்தை வைத்துக்கொண்டு உலகத்தில் உலாவுவதற்கும், இனி எனக்கு இஷ்டம் கிடையாது; ஆதலால், தாங்கள் வளர்த்த வுடம்பு இந்த வேள்வித் தீயிலேயேவிரைவில் எரிந்து போகட்டும்; என் நாயகரிடத்தில் நான் அன்பு கொண்டிருந்தால், மறு பிறப்பில் அவரையே தலைவராய் அடைகிறேன்" என்றுசொல்லி, வேள்வித் தீயில் விழுந்து மாண்டுபோய் விட்டாள். அந்தச் செய்தி பூதகணங்கள் மூலமாகச் சிவ பெருமானுக்குத் தெரிந்தது. அவர் உடனே தம் கோபத்தினால் வீரபத்திரக் கடவுளைப் படைத்துத் தக்ஷனைக் கொன்று, அவன் யாகத்தையும் அழித்தார். தக்ஷன் சிவ பெருமானை அங்ஙனம் தூஷித் திராவிட்டால், அப்படி இறந்திருக்க வேண்டாமல்லவா? ஆதலால், எதிரில் இல்லாத பொழுது ஒருவரையும் தூஷிக்கக் கூடாது. —ஸ்காந்தம்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

—(o)—

20—பயனில சொல்லாமை, சிசுபாலன்

ஒருவன் தனக்காவது, அன்றிப் பிறர்க்காவது, பயன்படாத சொற்களைச் சொல்லாதிருப்பதற்குப் பயனில சொல்லாமை யென்று பெயர். அறமும் பொருளும் இன்பமும் என்பன பயன்களாம். பொய்ச் சொல், கோட்சொல், கடுஞ்சொல், பயனில் சொல் என்று, சொற்குற்றம் நான்கு வகைப்படும். இவற்றில் பொய்ச்சொல் உண்மை உரைத்தலாலும், கோட்சொல் புறம்சொல்லாமையாலும், கடுஞ்சொல் இன்சொல்லாலும் நீங்குகின்றன. பயனில் சொல்லை மித பாஷணையினால் ஒருவாறு நீக்கிக்கொள்ளலாம். ஒருவனுக்கு அறியாமையுள் அறியாமையாவது பயனில சொல்லுதலாம். அதனைச் சொல்பவனைப் பெரியவர் மனிதப் பதர் என்று பேசுவர். தனக்காவது, அன்றிப் பிறருக்காவது, சிறிதும் நன்மை யில்லாமல், இருவருக்கும் ஒருமிக்கத் தீமை தருதலால் பயனில்சொல் குற்ற மாகின்றது. ஒருவன் ஒரு தினத்தின் மிகவும் சிறிய பாகத்தையும் இம்மை மறுமை என்ற இரண்டிடத்துக்கும் உறுதி செய்யும் பொருட்டு உழைத்து வரவேண்டும். அவ்விரண்டையும் கெடுத்துக் கொண்டு தீமையின் பொருட்டுக் காரியம் செய்வது தீங்கைத் தருமல்லவா? பயனில் சொல் ஒருவனுடைய சிறப் பென்கின்ற சிறந்த மரத்தைக் கூரிய கோடரியாகிக் குறைத்துத் தள்ளுகின்றது.

பிரசங்கிகளின் அதிகப் பேச்சுக்களில் எல்லாம் பொருள் கொண் டிருக்க மாட்டா. பூவாணிகர் மலர்மாலையின் பாதி பாகத்தையும் பச்சிலைகளைத் தொடுத்துப் பணம் பெறுவது போல, ஒருவனது அதிகப் பிரசங்கத்தைப் பயனில் சொல்

பூர்த்தி பண்ணுகின்றது. புகழை விரும்புகின்றவன் அந்தச் சொற்களைப் பரிகரித்து வரவேண்டும்.

முன்னாளில் தமகோஷன் என்ற அரசன் புத்திரனை சிசுபாலன் என்பவன் சேதி நாட்டுக்குத் தலைவனா யிருந்தான். அவன் கண்ண பிரானுக்கு அத்தைமகன் ஆகவேண்டும். அவன் பிறந்தபொழுது மூன்று கண்களும் நான்கு கரங்களும் இருந்தன. தாய் தந்தைகள் அவற்றைக் கண்டு வருத்தம் அடைந்தார்கள். அப்பொழுது, 'எவர் மடியில் உட்காரு கையில் இந்தச் சிறுவனுடைய அதிகமான விழியும் கரமும் விரைவில் மறைகின்றனவோ, அவரால் முடிவில் இவன் மரணத்தைப் பெறுவான்' என்று, அசரீரி உண்டாயிற்று. அப்படியே அவனுடைய அதிகமான வுறுப்புக்கள் கண்ணனால் மறைந்து போயின. சிசுபாலன் தாய் புத்திரன் க்ஷேமத்தை நினைந்து,அவன் செய்யும் பிழைகளில் தினம் ஒன்றுக்கு நூறு பிழை வரையில் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று, கண்ணனிடத்தில் வரம் கேட்டுக்கொண்டாள்.

சிசுபாலன் புத்தி வந்ததுமுதல் கண்ணனைப் பகைத்துக்கொண்டு வந்தான். கண்ணன் பகைஞர் யாவரும் அவனுக்கு அந்தரங்கமான நண்பர்கள். அவன் தாயின் வரத்தை அறிந்து, கண்ணனைத் தூஷிப்பதையே தனக்குப் பெரிய கௌரவமாக நினைத்துக்கொண் டிருந்தான். உருக்மணியின் விவாக காலத்தில் அவனுக்குக் கண்ணன்மீ திருந்த பகை அதிகமாய் வளர்ந்து பெருகிப் போயிற்று. அதனால், எவ்விதத்திலாவது கண்ணனைக் கொல்லவேண்டும் என்று, அவன் பலவிதத்திலும் பிரயத்தனம் பண்ணி வந்தான். சிசுபாலன் அந்தரங்க நண்பர்களில் கம்ஸன் ஜராஸந்தன் தந்தவக்த்ரன் என்ற மூவரும் நாளடைவில் கண்ணனால் கொல்லப்பட்டுப்

போனார்கள். அஃது அவன் கண்ணன்மேல் கொண்டிருந்த பகையாகிய பெரு நெருப்பிற்கு நெய் வார்த்ததுபோல் ஆயிற்று.

பிற்பாடு, யுதிஷ்டிர சக்ரவர்த்தி இந்திரப் பிரஸ்தத்தில் இராஜஸூயம் என்ற மகா யாகத்தைச் செய்தார். அதற்கு உலகத்தில் உள்ள எல்லா அரசர்களும் வந்திருந்தார்கள். விதிப்படி வேள்வி நடந்து வந்தது. அப்பொழுது யாவருக்கு அக்கிரபூஜை செய்வ தென்று ஆலோசனை உண்டாயிற்று. பீஷ்மர் அதனைக் கண்ணனுக்குச் செய்யும்படி கூறினார். அவர் கட்டளையின்மேல் யுதிஷ்டிரர் கண்ணனுக்குப் பூஜை பண்ணினார்.

உடனே சிசுபாலன் கண்கள் சிவக்க, மீசையும் உதடும் துடிக்க, நெஞ்சம் படபடக்கச், சபையில் எழுந்துநின்று, "உயர் குலத்துப் பிறந்த உத்தம அரசர்களே! இந்த அவமரியாதையை நீங்கள் எங்கேயாவது கண்டிருக்கிறீர்களா? குலத்திலும், குணத்திலும், அறிவிலும், ஆண்மையிலும், பெயர் பெற்றவர்களான எத்தனையோ உயர்ந்த அரசர்கள் இந்தப் பெரிய சபையில் நிறைந்திருக்கிறார்கள்; வயது சென்ற கிழவனான பீஷ்மன் 'பொரிமாவை மெச்சினான் பொக்கை வாயன்' என்பதுபோல, அவர்களைக் கவனியாமல் கண்ணனுக்கு முதல் மரியாதை செய்யக் கட்டளை யிட்டுவிட்டான்; அக்கிர பூஜையை ஏற்றுக் கொள்வதற்குக் கண்ணனிடத்தில் என்ன யோக்கியதை இருந்துவருகின்றது? கண்ணன் துர்க்குணக் களஞ்சியம்; பொய்க்குப் பொக்கிஷம்; அநாசாரங்களின் ஆலயம்; பாவத்தின் பஞ்சரம்; அவன் பிறந்தது முதல் இது வரையில் செய்திருக்கும் அக்கிரமங்களை எண்ணி முடியுமா? ஏட்டில் அடங்குமா? அக்கிரபூஜை என்பது எப்பொழுதும்

உயர்ந்த வொழுக்கம் உள்ளவர்களுக்குச் செய்யப்பட வேண்டும்; அக்கிரமத்தில் மிகுந்தவர்க்கு அதனைச் செய்வது தகுதியாகும் என்றால், கண்ணன் ஏற்றுக்கொள்வதற்கு முக்காலும் யோக்கியதை யுள்ளவன்றான் " என்று, பலவாறு வாய்க்கு வந்தபடி பிதற்றினான்.

சிசுபாலன் தூஷணைச் சொற்கள் அங்கு உள்ளவர்களுக்குச்சகிக்க முடியாமற் போயின. பேய் பிடித்தவனைப்போல அவன்விடாமல் பேசிக்கொண் டிருந்த படியினால், அவன் குற்றங்கள் ஆதியில் கண்ணன் அவன் தாய்க்குக் கொடுத்திருந்த வரத்தின் அளவையும் மீறிப் போய்விட்டன. அதனால், கண்ணன் அனைவரும் அறியச், சக்ராயுதத்தைப் பிரயோகித்துச், சிசுபாலனைக் கொன்று விட்டார். ஆதலால், பயனில்லாத சொற்களை ஒருவரும் சொல்ல லாகாது. —மகாபாரதம்.

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்;
மக்கட் பதடி யெனல்.

—(o)—

21—தீவினை யச்சம், காளமுனிவர்

தீவினை யச்சம் என்பது பாவ காரியங்களைச் செய்ய அஞ்சுதலாம். இஃது உடற் குற்றத்தின் வகையைச் சேர்ந்தது. பெரியவர்களால் பாவம் என்று வரையறுக்கப் பட்டவை பாவச் செயல்களாம். பேராசை, பெருங்கோபம் முதலிய துர்க்குணங்கள் ஒருவனைப் பாவம் செய்யத் தூண்டுகின்றன. பாவ காரியம் பிறருக்குக் கெடுதி செய்வதில் ஆரம்பமாகின்றது. வேம்பில் இனிப்பைப் பெற முடியாததுபோலக், கெட்ட வற்றிலிருந்து நல்லவற்றை எதிர்பார்க்க முடியாது. தீவினை எல்லாத் தீங்குகளையும் தன்னைச் செய்தவனுக்குச் சேர்த்துத்தருகின்றது.

ஒருவன் தனது ஒழியாத முயற்சியினால் மரணத்தையும் மாற்றிக் கொள்ளலாம். ஆனால், தீவினையிலிருந்து மாத்திரம் அங்ஙனம் தப்ப முடியாது. நிழல் நம்மைப் பிரியாமல் இருந்து சமயம் நேர்ந்தபொழுது சிறிதும் பெரிதுமாகிச் சிறந்து விளங்குவதுபோலத், தீவினையும் நம்மைத் தெரியாமலேயே தொடர்ந்து, சமயத்தில் வெளிப்பட்டுத் துன்பம் செய்து நிற்கும். தீவினை நெருப்பினும் கொடியது. அனைவரும் அதற்குப் பயப்படவேண்டும். அறக் கடவுள் நாம் பிறருக்குச் செய்த தீவினைகளை அதிகமாய்ப் பெருக்கி, அதன் பலன்களை நம்மையே அநுபவிக்கச் செய்கிறார். பிறருக்குத் தீங்குசெய்து உயர்ந்தவர் எக்காலத்திலும் இல்லை. பாவ காரியங்களினால் ஒருநாளும் பொருள் பெற முடியாது. அச்செயல் ஒருவனுக்கு உள்ளவற்றையும் போக்கி, மிடிமைக்கு அடிமைப் படுத்திவிடும். ஆதலால், நாம் மறந்தேனும் பிறருக்குக் கேடு சூழக் கருதலாகாது.

திருதராஷ்டிர மன்னவன் புத்திரனான துரியோதனன் சூழ்ச்சியினால், பாண்டவர்கள் சூதாடி உரிமை யிழந்ததும், பாஞ்சாலி தனக்குச் சபையில் நேர்ந்த அவமானத்தைச் சமாளித்துக் கொண்டதும், அனைவரும் அறிந்த விஷயம். 'பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனத்திலும், ஒருவரும் அறியாமல் ஒருவருஷம் புரத்திலும் மறைந்திருந்து வந்தால், அவர்கள் இழந்துபோன உரிமைகளைத் திரும்பவும் தரவேண்டும்' என்று, பீஷ்மர் துரோணர் முதலிய பெரியவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். உடனே பாண்டவர்கள் வனத்தில் வசிக்கச் சென்று விட்டார்கள். அவர்களை எப்படிப்பட்டாவது அந்தக் காலத்துக்குள் அழித்துவிடவேண்டும் என்று, துரியோதனன் பலவிதத்திலும் பிரயத்தனப் பட்டுவந்தான். அவற்றில் ஒன்றாவது அநுகூலமாகவில்லை.

6

பிற்பாடு, அவன் வனத்துக்குச் சென்று, காளமுனிவர் என்ற ஒரு தபசியைச் சரணம் அடைந்து, தன் குறைகளை விண்ணப்பம் செய்து கொண்டான். அம்முனிவர் துரியோதனன் முறைக்குச் செவி கொடுத்து, "இளவரசனே! இனி உன் விசாரத்தை ஒழி! நான் அதர்வ வேத மார்க்கத்தை அநுசரித்து, அரிய வேள்வி யொன்று செய்து, அவர்களை அழித்து விடுகிறேன்; நீ வேள்விப் பொருள்களை விரைவில் போய் அனுப்பு; மந்திர பலத்தினால் முடியாத காரியம் ஒன்றுமே யில்லை; கொல்லும் பேயும், கடிக்கும் பாம்பும்கூட, மந்திரத்துக்கு மயங்கிவிடுகின்றன வல்லவா? உன் க்ஷேமத்தின் பொருட்டு நான் அந்த உயர்ந்த வேள்வியை உறுதியாய்ச் செய்கிறேன்; உலகத்தில் எல்லாம் தெரியும் என்று, எவரும் இயம்ப மாட்டார்கள்; ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று தான் கைவந் திருக்கும்; நான் ஆபிசார யாகம் செய்வதிலும், செய்விப்பதிலும்,கைதேர்ந் திருக்கிறேன்; உனக்காகச் செய்ய வுத்தேசிக்கும் வேள்வி மிகவும் உயர்ந்தது; அது முன்னர்த் தாருக வனத்து முனிவர்கள் சிவபெருமானைச் சிதைக்க நினைந்து செய்தது; இனி உனக்கு ஒரு குறையும் இல்லை; உன் பகைவர் ஐவரும் இப்பொழுதே போய்விட்டார்கள் என்று, பூர்த்தியாய் நினைத்துக்கொள்" என்று சொன்னார். அரவகேதனன் அளவற்ற சந்தோஷம் அடைந்து, அவரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, அத்தினபுரம் சென்று அவர் விரும்பின பொருள்களை விரைவில் கொடுத் தனுப்பினான்.

காளமுனிவர் வனத்தில் சாஸ்திர விதிப்படி சாலையை நியமித்து, யாகம் செய்யத் தொடங்கினார். அவ்வேள்வியில் நெய்க்குப் பதிலாக வேப்பெண்ணெய், ஆமணக் கெண்ணெய், பிரமதண்டுவிதை யெண்ணெய் முதலியவை ஹோமம் செய்

யப்பட்டன: எட்டி, வேம்பு, எருக்கு, கள்ளி, காட்டா மணக்கு முதலியவை சமித்துக்களாகச் சேர்த்திடப்பட்டன. எருமைக் கிடாயும் பன்றியும் வேள்விப் பசுக்களாக விரைவில் கொலையுண்டன.

அப்புறம், வேள்வித் தீயிலிருந்து பயங்கரமான பூதம் ஒன்று புறப்பட்டு வந்தது. முனிவர் மதுக்களினாலும் மாமிசங்களினாலும் பூதத்தினுடைய பசியை அடக்கின பிற்பாடு, அந்தப் பெரிய பூதம் ஹுங்காரம் செய்துகொண்டு, 'கட்டளை என்ன?' என்று கேட்டது. காளமுனிவர் 'வனத்தில் வசிக்கின்ற பாண்டவர் ஐவரையும் புசித்து வரவேண்டும்; நீ அதற்குத்தான் படைக்கப்பட்டனை' என்றார். பூதம் 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிப் போயிற்று.

அப்பொழுது கண்ணன் தந்திரத்தினால், பாண்டவர்களில் யுதிஷ்டிரர் மரணத்துக்குச் சமானமான மூர்ச்சையடைந்து, ஒரு மரத்தடியிலும், மற்றை நால்வரும் ஒருவிதமான விஷத்தண்ணீரை அருந்தி, மரணம் அடைந்தவர்போல ஒரு குளக்கரையிலும், விழுந்து கிடந்தார்கள். பூதம் அவர்களை இறந்துபோனவர்கள் என்று இதயத்தில் எண்ணிக் கொண்டு, 'முனிவர் தன்னை மரணம் அடைந்துபோன மனிதர் மீது போக்கினர்' என்று, சினத்தோடு திரும்பி வந்து, அந்தத் தீ முனிவரையே தின்று போய்விட்டது. ஆதலால், எவரும் பிறருக்குக் கெடுதி செய்யலாகாது. —மகாபாரதம்

தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினு மஞ்சப் படும்.

——(o)——

22—ஒப்புரவறிதல், இளையான்குடி மாறனாயனார்.

உலக நடையினை அறிந்து செய்வதற்கு ஒப்புரவறிதல் என்று பெயர். இஃது ஈகையில் அடங்கும். ஈகை என்பது வறிஞராக வந்து தம்மை விரும்பி யிரந்தவர்க்கு இல்லை யென்று சொல்லாமல், அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்தலாம். ஒப்புர வறிதல் என்பது தன்னை இரந்தவர் களுக்கு இல்லை யென்னுமல் கொடுக்கின்ற ஏற்றமுள்ள நிலைமை தனக்கு இல்லாமற் போனாலும், தன் பொருளின் வருவாய்க் கும் அளவுக்கும் தகுதியாகத், தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தலாம். இதுதான் இரண்டுக்கும் வேறுபாடு. சிலர் ஈகை மறுமை நோக்கியும், ஒப்புரவறிதல் இம்மை நோக்கியும், கொடுத்தல் என்றும் கூறுவர்.

கைம்மாறு கருதாமல் கொடுப்பது, கைம்மாறு கருதிக் கொடுப்பது என்று, ஒப்புரவு இரண்டு வகைப்படும். இதனில் முன்னையது மிகவும் சிறந்தது. ஒருவன் தனது நன்முயற்சி யினால் கிடைத்த பொருளை நல்லவர்க்குக் கொடுக்கவேண்டும். ஊற்றுநீர் ஒரே காலத்தில் பெருகி உலகத்தை உண்பியாமல், சிறுகச் சிறுகச் சுரந்து, உயிர்களை வளர்ப்பதுபோல, உயர் குடியில் பிறந்தவர்கள் தங்கள் வருவாய்க்குத் தகுதியாகச் சிறுகவும் பெருகவும் கொடுத்து, யாசகர்களுக்கு இன்பம் ஊட்டுவார்கள். மேகம் தான் கொண்ட தண்ணீருக்குத் தக்கவண்ணம் பெய்து, தரையை குளிர்விக்கின்ற தல்லவா? பெரியவர்கள் செல்வம் சுருங்கிய காலத்திலும், பிறர்க்கு உதவி செய்வதில் பின் னிடைய மாட்டார்கள். தம்மிடத்தில் வந்த வர்களுக்குத் தருவதற்கு இல்லையே யென்று, தயங்கி வருந்து வார்களே யன்றித், தங்கள் பொருட்டுச் சற்றும் துன்பம்

கொள்ளார்கள். அவர்கள் செல்வம் இரப்பவர்களுக்கு என்றும் உரிமையானது.

முன்னர்ச் சோழநாட்டில் இளேயான் குடியில் மாறன் என்று ஒருவர் இருந்தார். அவருக்குப் பூஸ்திதி மிகுந்திருந்தது. அவர் இரப்பவர்களுக்கு இல்லே யென்னுமல் ஈதலே, என்றும் விரதமாய்க் கொண்டிருந்தார். எப்பொழுதும் ஈதலில் ஈடுபட்டிருந்த படியினுல், அவர் செல்வம் நாள் செல்லச் செல்லத், தேய்பிறை யென்னச் சுருங்கித், தேயத் தொடங்கிற்று. செல்வம் சுருங்கினும் அவர் உள்ளம் மாத்திரம் சுருங்கிப் போகவில்லே. பொருள் முட்டுப்பாடு நேருந்தோறும் நேருந்தோறும், அவர் நிலங்களில் பெரும் பாகமும் அவரை விட்டு நீங்கின. ஒளியின் நீக்கத்தில் இருள் பரவுவதுபோல, வருவாய் தீர்ந்தபொழுது தரித்திரம் வந்து அவரை அடிமை கொண்டுவிட்டது. சுற்றத்தார் யாவரும் நீர்ப்பறவைபோல அவரைத் திரும்பியும் பார்க்காமற் போனுர்கள். மாறனும் அவர் மனேவியும் இரண்டொரு சமயங்களில் பட்டினியும் இருந்து விட்டார்கள்.

அப்படிப்பட்ட பரிசோதனேத் தருணத்தில் ஒருநாள் மாலேப் பொழுதில் மழை ஆரம்ப மாயிற்று. கார்கால மாதலால் ஆரம்பத்தில் அற்பமா யிருந்த அம்மழை, வர வர அதிகமாகி இரவில் முதற் சாமம் வரையில் மும்முரமாய்ப் பெய்தது. அப்பொழுது ஒரு முதிர்ந்த கிழவர் மழையில் நனேந்து கொண்டு, மாறனுர் வீட்டுக்கு வந்தார். அவருக்கு வயது எண்பதுக்கு மேல் இருக்கும். அவர் கிழத்தனத்துக்கு மழையும் குளிரும் மதிப் புண்டாக்கின. அவர் உடம்பு நடுங்கிக்கொண் டிருந்தது. கால்கள் நடை தள்ளாடின. அந்தப் பெருங் கிழவர் மெள்ள மெள்ள மாறனுர் வீட்டுத் தலேக்கடை

யில் வந்து விழுந்தார். மாறனாரும் அவர் மனைவியும் அந்தப் பெரியவரை இன்சொல் பேசி மகிழ்வித்தும், கையைப் பிடித்து அழைத்து வந்தும், உடம்பு நீரைத் துடைத்தும், உலர்ந்த வஸ்திரம் கொடுத்தும், உட்காருவித்தார்கள்.

அப்புறம் மாறனார் மனைவியை நோக்கி, 'நாயகி! பெரியவர் பசித்துப் படுத்திருக்கிறார்; உணவு உதவ வேண்டுமே? என்ன செய்யலாம்?' என்று கேட்டார். அந்நங்கையர்க் கரசி "ஆருயிர்த் தலைவரே! அகால மாய்விட்டது; அண்டை அயல் வீட்டாரும் அயர்ந்து தூங்குகின்றார்கள்; இப்படிப்பட்ட இரவில் பிறர் உதவியைக் கொண்டு பெரியவர் பசியைப் பரிகரிக்க நினைப்பது பரிகஸிக்கத் தக்கது; இன்று காலையில் வயலில் சிறிது விதை தெளித்து வந்தீர்க ளல்லவா? அதனைத் திரட்டி யெடுத்து வந்தால், வறுத்துக் குற்றியாவது சமைத்துப் படைக்கலாம்; அதனைத் தவிர ஒன்றும் உபாயம் இல்லை" என்று சொன்னாள். மாறனார் சந்தோஷம் அடைந்து, இருளைப் பொருள் பண்ணாமல் வயலுக்குச் சென்று, முளை நெற்களை வாரிக் கூடையில் இட்டுக், கொண்டுவந்து கொடுத்தார். அப் பெண்கள் நாயகி, அம்முளை நெற்களைச் சேறு போகக் கழுவிச் சுத்தப்படுத்தி யெடுத்து, வறுத்துக் குற்றிச் சமைத்து முடித்தாள்.

பின்னர் மாறனார் முதியவரை அழைத்துவந்து ஆசனத்தில் அமர்த்தினார். அவர் மனைவி "அந்தோ! செல்வம் உள்ள காலத்தில் இந்தப் பெரியவர் விருந்தினராக வராமல் போயினாரே! நல்லொழுக்கத்தில் சிறந்த இம்முதியவருக்குச் சாதாரணமான சாப்பாட்டைப் படைக்க நேர்ந்த தல்லவா? இது நாம் செய்த தீவினையே யாகும்; விருந்தினருக்குச் சரியானபடி செய்ய முடியாத நாம் நடைப்பிணம் போல நாட்டில்

ஏன் இருக்கவேண்டும்? கடவுளே! அடிமைகளாகிய நாங்கள் தங்கள் திருக் குறிப்புக்குத் தவறு செய்ய முடியுமா? தங்கள் சம்மதம் எதுவாயினும் சந்தோஷமாய் நடக்கிறோம்" என்று, மனத்தில் வருந்திய வண்ணம் போஜனம் பரிமாறினாள்.

மாறனாரும் அவ்வண்ணமே நினைத்துக்கொண்டு, இன் சொல் சொல்லி முதியவரை உண்பித்தனர். அவ்விருவர் மனமும் அன்று காலைமுதல் பட்டினி கிடக்கின்ற தங்கள் பொருட்டுச் சற்றும் சஞ்சலப்படவில்லை. விருந்தினருக்குச் சரியானபடி சாப்பாடு அளிக்கவில்லையேயென்று தான் சிந்தித்துக் கலங்கிற்று. அவர்கள் உபசரணையும் இன்சொல்லும் அமிருதத்திலும் அதிகமாயிருந்தபடியினால், அம்முதியவர் மகிழ்ச்சியடைந்துவயிறார வுண்டு, வாயார வாழ்த்தி, விடைபெற்றுக்கொண்டு போனார். அவ்விருந்து கடவுளுக்கு அதிக ஆச்சரியத்தை அளித்தது. அதனால், அவர் திருக்குறிப்பின் வண்ணம் மாறனார் செல்வம் பெருகி, அன்றுமுதல் அதிகமான சுகங்களை அநுபவித்துக் கொண்டு வந்தார். அந்நாள் தொடங்கி அவரும் இளையான்குடி மாற நாயனார் என்று, கடவுள் அடியவர்களில் ஒருவராய்ச் சேர்த்துக் கணக்கிடப்பட்டு வருகிறார். ஆதலால், நற்குடியில் பிறந்தவர் தரித்திரம் அடைந்தகாலத்திலும், தங்களிடத்தில் வந்தவருக்குக் கொடுக்கக்கூடியவற்றைக் கொடாமல் ஒளிக்கமாட்டார்கள். —பெரிய புராணம்.

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கோல்கார்
கடனறி காட்சி யவர்.

—(o)—

23—ஈகை, பூரு

இரப்பவர் விரும்பின வற்றை இல்லையென்று சொல்லாமல் கொடுப்பதற்கு ஈகை என்று பெயர். இவ்வீகை இரண்டு வகைப்படும். ஒன்று, இரப்பவன் தன் வறுமையை வாய்விட்டுச் சொல்வதன் முன்னர்க் குறிப்பறிந்து கொடுப்பது. மற்றொன்று கேட்ட பின்னர்க் கொடுப்பது. தன்னிடத்தில் இரந்தவன் மற்றொருவ ரிடத்திலும் சென்று அந்தப் பொருளை இரந்து பெறாவண்ணம் அதிகமாய்க் கொடுப்பது மேன்மக்கள் இலக்கணம். பயனை விரும்பிக் கொடுக்காமல் கடமையை, விரும்பிக் கொடுத்தல் வேண்டும். கடவுள் உலகம் கைகூடுவ தானாலும், பிறரிடத்திலிருந்து ஒன்றைப் பெற்றுக்கொள்வது புன்மைத் தன்மையானது. பொருளை வருந்தித்தேடித், தாமும் உண்ணாமல், பிறருக்கும் கொடாமல், பத்திரப்படுத்தும் பேதைகள் இம்மை மறுமை என்ற இரண்டையும் இழந்து போகின்றார்கள்.

ஈகையில் உணவிடல் உயர்ந்தது. ஏனென்றால், உணவு உயிர்களைக் காப்பாற்றி, உலகத்தில் நிலைக்கச் செய்யும். உண்டவருக்குக் களிப்பை உண்டுபண்ணும். உதார குணம் உள்ளவர்களுக்கு வள்ளல் என்று பெயர். இரப்பவர்களுக்குத் தரத்தகாத எந்தப் பொருளும் அவர்களிடம் இராது. இரப்பவர்களுடைய இன்முகம் காணும்பொருட்டு, அவர்கள் தங்கள் உயிரையும் உதவிவிடுவார்கள். உலகத்தில் பொருளுள்ளவர் பலரும் ஈகை யுள்ளவ ராகார். ஆனால், ஈகை யுள்ளவர் மாத்திரம் பொருள் உள்ளவ ராவார். பிறருக்குக் கொடுத்தலைக் காட்டிலும், பொருள் படைத்ததற்குப் பயன் வேறில்லை. இதனை அநுசரிப்பதில் அனைவருக்கும் சிரமம் உண்டாகாமல் தீராது.

நெடுங் காலத்துக்கு முன்னர்ச் சந்திர வம்ச சக்ரவர்த்திகளுக்குப் பிரதிஷ்டானம் என்ற புராதன பட்டணம் இராஜதானியா யிருந்தது. அதில் புண்ணிய புருஷராகிய யயாதி மன்னவர் அரசு செய்துவந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தி நவக் கிரகங்களில் ஒருவரும் அசுர குருவுமான சுக்கிர பகவான் புத்திரி. பெயர் தெய்வயானை. மற்றொருத்தி அசுர சக்ரவர்த்தியான விருஷபர்வாவின் புத்திரி. பெயர் சன்மிஷ்டை. தெய்வ யானையை மணந்தபிற்பாடு, சன்மிஷ்டை சில வருஷம் கழித்துக் காந்தருவ விதிப்படி அவருக்குக் காதலி யாயினள். இருவரும் ஒரே அரண்மனையில் இருந்து வந்தாலும், சன்மிஷ்டையை மணந்தது தெய்வ யானைக்குத் தெரியாது. சில வருஷங்கள் வரையில் அவர்கள் ஒழுக்கம் அந்தரங்க மாகவே யிருந்தது. நாளடைவில் தெய்வ யானையின் வயிற்றில் இரண்டு புத்திரர்களும், சன்மிஷ்டையின் வயிற்றில் மூன்று புத்திரர்களும் பிறந்தார்கள்.

ஒருநாள் தெய்வயானை அரசரோடு அரண்மனைச் சோலையில் அமர்ந்திருக்கும்போது சன்மிஷ்டையி னுடைய மூன்று மக்களும் அங்கு விளையாடிக்கொண் டிருந்தார்கள். அரசி அவர்களை அருகில் அழைத்துக், 'குழந்தைகளே! உங்கள் தாய் தந்தைகள் யார்? உங்கள் பெயர் என்ன?' என்று கேட்டாள். கள்ளம் கபடம் அறியாத அந்தச் சிறுவர்கள் 'பெருமாட்டி! த்ருஹ்யு, அநு, பூரு, என்று எங்களுக்குப் பெயர். தாயார் சன்மிஷ்டா தேவி. இதோ இருப்பவர்தாம் தந்தை' என்று சொன்னார்கள்.

உடனே தெய்வ யானைக்குக் கோபம் உண்டாயிற்று. அவளுக்குக் கண்கள் தெரிய வில்லை. அவள் நெஞ்சம் துடிக்க, உடல் வியர்க்க, மயிர் பொடிக்கச், சக்ரவர்த்தியை நோக்கி,

"என்னை மோசம் செய்துவிட்டீர்கள்;என் பிதா என்னைத் தங்களிடத்தில் ஒப்புவிக்கும்போது 'என் மகள் பார்ப்பனி; அவளை அடைந்த பிற்பாடு, நீ வேறு பெண்களை விரும்பலாகாது' என்று எச்சரித்திருக்கிறார்; தாங்கள் அதற்குத் தவறு செய்துவிட்டீர்கள்; இனித், தங்கள் அரண்மனையில் நான் தங்க முடியாது; பிதாவின் வீட்டுக்குப் போய்ச்சேருகிறேன்" என்று சொல்லித், தந்தையின் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

யயாதி மன்னவர் நடந்தவற்றைச் சொல்லித், தம்மை மன்னிக்கும்படி கெஞ்சிக்கேட்டுக்கொண்டு தெய்வயானையைத் தொடர்ந்து சென்றனர். தெய்வயானை அழுது கொண்டும், தலை மயிரைப் பிய்த்துக் கொண்டும், தலைவன் குற்றத்தைத் தந்தைக்குத் தெரியப்படுத்தினாள். சுக்கிர பகவானுக்குச் சினத் தீ மூண்டது. அவர் ஆராய்ந்து பாராமல், யயாதி மன்னவரை "நீ க்ஷய ரோகமையும் கிழத்தனத்தையும் கொள்க" என்று கடுஞ் சாபம் கொடுத்தார். யயாதி மன்னவர் அவர் பாதத்தில் பணிந்து, சன்மிஷ்டையின் சம்பந்தமான சரித்திரங்களைச் சொல்லி, 'அநுக்கிரகம் செய்யுங்கள்' என்று வேண்டினார். சுக்கிர பகவானுக்கு அவர் குற்ற மற்றவர் என்று, அப்பொழுதுதான் தெரிந்தது. அவர் "அரசனே! உன் புத்திரரில் ஒருவனுக்கு என் சாபத்தைக் கொடுத்து அவன் இளமையை ஏற்றுக்கொண்டு சிலகாலம்வரையில் இரு; அப்புறம் உன் சாபத்தைப் பெற்று, வனத்துக்குப் போய்ச் சேர்; இதுதான் என் அநுக்கிரகம்" என்று, விடைகொடுத்தனுப்பினார். உடனே சக்ரவர்த்திக்குச் சாபம் வந்தடைந்தது. அதனைப் பிறரால் அரைக் கணமும் பொறுக்க முடியாது. அருவருப்புக்கு ஆலயமான கிழத்தனம்; ஓய்வின்றி இருமித் தூர்க்கர்

தமான கோழையைக் கக்கிக்கொண்டிருக்கும் க்ஷய ரோக; அம்மம்ம; இவ்விரண்டும் ஒருவனுக்குத் திடீரென்று வந்தால் தாங்க முடியுமா?

அந்த மன்னவர் ஒருநாள் இராஜ சபையில் தம் ஐந்து புத்திரர்களையும் அழைத்துச், சுக்கிரர் சாபத்தையும், அவர் அநுக்கிரகத்தையும் சொல்லி, 'உங்களில் ஒருவன் என் சாபத்தை ஏற்றுக்கொண்டு உங்கள் இளமையைத் தாருங்கள்; சிலகாலம் கழித்து, அரசாட்சியையும் இளமையையும் அவனிடம் ஒப்புவித்துப் போகிறேன்'' என்று கேட்டார். முதல் நான்கு புத்திரர்களும் 'தந்தையே! நாங்கள் இளமையைத் தர மாட்டோம்; தங்கள் அரசாட்சியை இஷ்டப்படி விநியோகித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டார்கள்.

அப்புறம், இளையவனும் வயதில் சிறியவனுமான பூருவென்பவன் சக்ரவர்த்தியைப் பணிந்து, "தந்தையே! விசாரத்தை ஒழியுங்கள்; தங்கள் விருப்பம் நிறைவேறட்டும்; என் இளமையை நான் தங்களுக்குச் சந்தோஷமாய்த் தருகிறேன்; புத்திரனுடைய உடல் பொருள் ஆவி யென்ற மூன்றும், பிதாவுக்கு எப்பொழுதும் உரிமை யானது; தாங்கள் வளர்த்த இந்தச் சரீரம் தங்களுக்குப் பயன்படாமல், வேறு எதன் பொருட்டு இருக்கின்றது? 'தந்தை தாய்ப் பேண்' என்பது தமிழ்ப் பழமொழி; என் கடமையைத் திருப்தியும் சந்தோஷமுமாகச் செய்து முடிக்கிறேன்; தாங்கள் 'தருகிறாயா' என்று, கேட்பதற்கு முன்னரே நான் தந்திருக்கவேண்டும்; அனைவரிலும் கடைஞனாதலால், முதலில் செய்ய முடியாமல் போயிற்று; சக்ரவர்த்திக்குப் புத்திரனாய்ப் பிறக்கும் புண்ணியத்தைக் காட்டிலும், அவருக்கு இளமையை உதவும் பெருமை எப்பொழுதும் உயர்ந்தது; தந்தையும் தெய்வமும் சக்ரவர்த்

தியு மாகிய தங்களுக்கு இந்தப் பெரிய அரசாட்சியை நினைந்து எனது பயனற்ற இளமையைப் பரிந்து தரவில்லை; நான்கு புத்திரர்களும் கொடுக்க முடியா தென்றதைக் 'கடைஞனும், இளைஞனுமான பூரு வென்பவன் பிதாவுக்குக் கொடுத்துப் பூரிப்பை உண்டு பண்ணினன்' என்ற பெரும் புகழை நினைந்து, தங்களுக்குத் தருகிறேன்'' என்று சொல்லிக், கிடைத்தற் கரிய இளமையைக் கொடுத்துத் தாங்கற் கரிய தன் தந்தையின் சாபத்தைப் பெற்றான்.

சில காலத்துக்குப் பிற்பாடு, அந்தச் சக்ரவர்த்தியின் சிங்காசனம் பூருவுக்குச் சொந்த மாயிற்று. அவன் சந்ததிக் குத்தாம் பௌரவர் என்று பெயர். ஆதலால், யாவரா யிருந்தாலும் பிறருக்கு ஒன்றைக் கொடுத்தலில் உண்டாகும் சிறப்பு, கொள்வதில் உண்டாக மாட்டாது. —மகாபாரதம்.

நல்லா றெனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

—(o)—

24—புகழ், சிபி சக்ரவர்த்தி

இல்லற வொழுக்கத்தை வழுவாமல் நிறைவேற்றுகின்றவருக்கு இவ்வுலகத்தில் இறவாமல் நிற்கும் கீர்த்தியைப் புகழ் என்று பேசுவர். இது பெரும்பாலும் ஈகையினால் உண்டாகின்றது. இதற்கு எதிர்ப்பதம் இகழ். அது கொடுஞ் செயலால் கிடைக்கின்றது. நல்லொழுக்கத்துக்குப் புகழ் ஊதியம். உலகமும் உலகப் பொருள்களும் அடியோடு அழிந்து போகும்போது புகழ் ஒன்றுமாத்திரம் தான் அழியாமல் நிலைத்திருக்கும். கரும்பை யந்திரத்தில் ஆட்டிக், கொப்பறை யில் காய்ச்சிக், கற்கண்டாக்கிய பிற்பாடு, கோதும் தழையும்

குலைந்து போவதற்கு வருந்த மாட்டார்களல்லவா? அதுபோலவே பெரியவர் தமது நல்லொழுக்கத்தினாலும் நற்கொடையினாலும் வருந்திப், புகழைப் பெற்ற பிற்பாடு, உடல் அழிவுக்கும் பொருள் அழிவுக்கும் வருந்துதலைச் செய்யமாட்டார்கள். புகழ் பெற வருந்தாதவன் மரணத்துக்கு வருந்திப் புலம்புவான்.

ஆனால், ஒருவனுக்குப் புகழ் எளிதில் கிடைக்கத் தக்கதன்று. புகழ்க் கனி ஆபத்து என்னும் மரத்தின் அருங்கிளை நுனியில்தான் பழுத்துத் தொங்கிக்கொண் டிருக்கும். அதனைக் கொள்வது எளிய காரிய மன்று; அஃது அரிதினும் அரியது. அதன் பொருட்டுச் சிலர் மனைவியைத் துறந்தனர். சிலர் மக்களைக் கைவிட்டனர். சிலர் உறவினரை இழந்தனர். சிலர் உடைமையைப் பிரிந்தனர். இன்னும் சிலர் தங்கள் உயிரையும் உதவி யிருக்கின்றனர். புகழ் பொருந்தியவர்கள் தேவர்களைக் காட்டிலும் சிறப்படைந் திருப்பார்கள். எப்படி யென்றால், தேவர்கள் தங்கள் ஒழுக்கத்தினால் சுவர்க்கத்தில் மாத்திரம் தலைமை பெற்றுவிளங்கப், புகழ் பெற்றவர்களோ பூமியிலும் அந்தரத்திலும் பெருமை பெற்றுக் களிக்கிறார்கள்.

ஆதிகாலத்தில் சூரிய வம்சத்தில் பிறந்த சிபி சக்ரவர்த்தி யென்பவர் நெடுங் காலம் வரையில் உலகத்தில் நீதி நடத்தி வந்தார். அவர் ஒரு நாள் பூஞ்சோலை ஒன்றில் புகுந்து உலாவும்போது, வல்லூறினால் துரத்தப்பட்ட புறா வொன்று வேகமாய்ப் பறந்து வந்து,அவர் பாதத்தில் விழுந்தது. சக்ரவர்த்தி அதனை எடுத்துத் தடவிக்கொடுத்துப், 'பறவையே! பயப்படவேண்டாம்; இங்குச் சற்று இருந்து இளைப்பாறுதலை அடை; பிற்பாடு பறந்து செல்லலாம்'

என்றார். அவர் சொல்லி வாய் மூடுவதற்குள் அதனைத் துரத்தி வந்த வல்லூறு ஒன்று வந்து, "அண்ணலே! நான் இந்தப் புறாவைக் காலைமுதல் துறத்தி வருகிறேன்; இஃது என்னை மிகவும் அலக்கழித்து விட்டது; நான் இதனைக் கொன்று தின்னவேண்டும்; சீக்கிரம் வெளியில் விடுங்கள்" என்றது. சக்ரவர்த்தி "பறவையே! இந்தப் புறா என் காலில் வந்து விழுந்தது; நான் இதற்கு அபயம் கொடுத்துவிட்டேன்; இதுபோன்ற பறவை உலகத்தில் எத்தனையோ இருக்கின்றன; அவற்றில் ஒன்றைப் பிடித்து உணவாக்கிக் கொண்டு போ! நான் கொடுக்கமாட்டேன்" என்று சொன்னார்.

வல்லூறு "அரசர் தலைவரே! பக்ஷபாதம் பண்ணுவது பார்த்திபர்க்கு நீதி யன்று; தாங்கள் புறாவைக் காப்பாற்றி என்னை மாத்திரம் கைவிட லாகாது; தங்களை அடைந்தவர்கள் வருத்தத்தோடு வெளியில் செல்ல லாகுமா? என் விண்ணப்பத்தைக் கேட்டருளுங்கள்; தங்களுக்குப் புறாவைக் காப்பாற்ற எண்ணம் இருக்குமானால், அதன் எடைக்குச் சரியான மாமிசத்தைத் தங்கள் உடம்பிலிருந்து அறுத்துக் கொடுத்து விடுங்கள்; இருவரும் சந்தோஷமாய்ச் செல்கிறோம்" என்று சொல்லிற்று.

சக்ரவர்த்தி சற்று யோசித்துப் பார்த்துப், 'பறவையே! நீ சொல்வது சரிதான்; நீயும் வருந்திச் செல்லவேண்டாம்; உன் இஷ்டப்படியே உண்டு மகிழ்ந்து போ!' என்று சொல்லி, உடனே துலைக்கோலை நாட்டித், தம் துடையிலிருந்து கொஞ்சம் மாமிசத்தை எடுத்துத், தட்டில் வைத்துத் தூக்கினார். அது புறாவின் எடைக்குக் குறைவா யிருந்தது. இன்னும் கொஞ்சம் அறுத்து வைத்தார். அதுவும் சரியாக வில்லை. இங்ஙனம் கொஞ்சம் கொஞ்சமாகத் தம் உடம்பில் உள்ள

எல்லா மாமிசங்களையும் அறுத்துத், தட்டில் வைத்துத் தூக்கியும்எடை சரியான பாடில்லை. சக்ரவர்த்தியின் உடம்பில் அறுத்து வைப்பதற்கு அப்புறம் மாமிசம் இருக்கவில்லை. இரத்தம் வழிகின்ற எலும்புக் கூடுதான் மிச்சமா யிருந்தது. அவ்வளவு சிரமப்பட்டும்கூட வல்லூறுக்குச் செய்த வாக்குதத்தம் நிறைவேற வில்லையே யென்று, அவர் அதிக வருத்தம் அடைந்தார். அவர் மனம் யோசனையில் அமிழ்ந்தது.

அப்புறம் அவர் வல்லூறைப் பார்த்துப், "பறவையே! இனி என் னுடம்பில் மாமிசம் கிடையாது; எடையைச் சரிப் படுத்தாமலும் உன்னை அனுப்ப லாகாது; ஆதலால், தயை செய்து எலும்புமட்டும் உள்ள என்னுடைய சரீரத்தையும் ஏற்றுக்கொண்டு விடு; நானே துலைத்தட்டில் ஏறி, எடையைச் சரிப்படுத்துகிறேன்" என்று சொன்னர். அந்தப் பறவை 'தரும பாலகரே! இஷ்டப்படி செய்யுங்கள்; எப்படியாவது எடையைச் சரிப்படுத்தினால் போதும்' என்றது. அரசர் 'நான் தருமம் தவறு திருந்தால், எடை சரியாய் இருக்கட் டும்' என்று சொல்லிக் கொண்டு, தட்டில் ஏறி நின்றர். எடை சரியாய்ப் போயிற்று. அப்பொழுது அந்தரத்தி லிருந்து மலர் மழை சொரிந்தது. உடனே எதிரில் இருந்த வல்லூறு இந்திரனாகவும், புறு அக்னியாகவும் உருமாறி, அரசர் எதிரில் நின்றன.

பின்னர் இந்திரன் அரசர் உடம்பைத் தடவிக்கொடுத் துச், 'சக்ரவர்த்தியே! தங்கள் புகழ் ஒப்புயர் வற்றது; தங் கள் கீர்த்தியை ஒருவராலும் ஒழிக்க முடியாது; இனித் தங்கள் உடம்பு வஜ்ர சரீரமாகும்; புண்ணிய வுலகம் யாவும் தங்களுக்கு உரிமையாய் விட்டன; தாங்கள் இன்னும்சிலகாலம் உலகத்தைப் பரிபாலித்து வந்து, அப்புறம் சுவர்க்கத்துக்கு

வந்து சேருங்கள்' என்று, வரம் கொடுத்து அக்னியுடன் மறைந்தான். அப்புறம், அந்தச் சக்ரவர்த்தி நெடுங்காலம் வரையில் உலகத்தைப் பாதுகாத்துக்கொண்டு வந்தார். அவர் புகழ் இன்னமும் அழியாமல் உலகத்தில் விளங்கி வருகின்றது. ஆதலால், ஒருவனுக்கு அழியாச் செல்வமானது அவன் தேடிய பெரும்புகழ் ஒன்றே யொன்றுதான். —மகாபாரதம்.

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

இல்லறவியல் முற்றும்.

—(o)—

துறவற வியல்

25—அருள், சித்தார்த்தர்

தொடர்பில்லாமல் எல்லா உயிர்களின் மேலும் இயல்பாய் எழுகின்ற கருணைக்கு அருள் என்று பெயர். இல்லறத்துக்கு அன்புடைமை அவசியமானது போலத், துறவறத்துக்கு அருள் அவசிய மானது. தாய்க்குக் குழந்தையின்மேல் உண்டாகும் மன நெகிழ்ச்சி இதற்கு உதாரணம். தன் குழந்தை நோய் நீங்கி நன்றாகும் பொருட்டுப் பத்திய மிருந்தும், பட்டினி கிடந்தும், பிரார்த்தனை செய்தும் வருந்துவது, பெற்ற தாயின் செயல். அதுபோல அருட்செல்வம் உள்ளவர் உயிர்கள் வருந்துவதைக் கண்டால், அவ்வருத்தம் தமக்கே நேர்ந்ததுபோலப் பதைத்துச் சென்று பாதுகாப்பார்கள். அருட்செல்வம் அனைத்திலும் சிறந்தது. எப்படி யென்றால், பொருட் செல்வத்தைப் பூரியரிடத்திலும் காணலாகும். அருட்செல்வத்தை அங்ஙனம்

காண முடியாது. அருள் கொண்டவர்கள் துன்ப வுலகத்தைத் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். தீவினையைக் கருத மாட்டார்கள். அருட்செல்வத்தை ஆள்பவர் அனைத் துயிரையும் ஆள்கின்றவ ராவார்கள். அவர்களது உடல், பொருள், உயிர் என்ற மூன்றும் பிற வுயிர்களின் உதவியின் பொருட்டு உபயோகப்பட்டுவரும். அவர்கள் ஒரு உத்தம வேலைக்காரன் போல உலகத்துக்கு உழைத்து வருவார்கள்.

இவ்வுயர்ந்த வொழுக்கத்தை ஒருவன் உண்மையில் கொண்டிருக்க வேண்டும். புகழின் பொருட்டும், பூஜைகளின் பொருட்டும் பூண லாகாது. பொய் யொழுக்கத்துக்குப் பாவமும் பழியும் தண்டனைகளாகும். மனித வுலகத்துக்குப் பொருளும், கடவுள் உலகத்துக்குக் கருணையும், இன்றியமையாதன. பொருளில் வறிஞரானவர்கள் ஒரு சமயத்தில் அதனைப் பெற்றுப் பூரித்து வாழலாம். அருளில் வறிஞரானவர்கள் அங்ஙனம் சிறப்பது ஆகாத காரியம். அருளில்லாதவர்கள் செய்யும் அறம் அற்பமும் பயன் படமாட்டாது. இயற்கை யருளின் சிறப்பைப் பின்வரும் கதையினுற் காணலாம்.

கபில வஸ்து நகரத்துக்குக் காவலராகிய சுத்தோதனருக்குச் சித்தார்த்தர் என்று ஒரு புத்திரர் இருந்தார். சுத்தோதனர் சித்தார்த்தரைக் கௌசிக முனிவரிடத்தில் கல்வி கற்க அனுப்பினர். அரசகுமாரர் தமது பணிவிடைகளினுலும், நல்லொழுக்கத்தினுலும், உண்மை யடக்கத்தினுலும் குருவைக் களிப்பித்து, வேதங்களையும் சாஸ்திரங்களையும் சந்தேக மின்றிக் கற்று, வில்வித்தை முதலான சிறப்புக் கல்விகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். அவருடைய கல்வியும் ஆற்றலும் அனைவரும் கண்டு அதிசயிக்கும்படி அமைந்திருந்தன. அவர் இயற்கை யழகு அவ்விரண்டையும் மிஞ்சி விளங்கிற்று.

சில சமயங்களில் சித்தார்த்தர் அரச குமாரர்களோடு குதிரைப் பந்தயம் விளையாடுவார். அப்பொழுது நடுப் பந்தயத்தில் குதிரை தம்மைச் சுமப்பதன் பொருட்டு இரைப்பதைக் கண்டால், அவ்விலங்கு பெருந்துன்பப்படுகின்றதென்று கருதி, அப்படியே நிறுத்திக்கொண்டு பந்தயத்தை இழப்பார். இதுவன்றித், தம் குதிரை வேகமாய் ஓடிக், குறித்த பந்தயத்தைக் கெலிக்கும் தருணத்தில் விளையாட்டு நண்பர்கள் பந்தய நஷ்டத்தின் பொருட்டு வருத்த முறுவார்களானால், அவர்கள் வருத்தத்துக்குத் தாம் காரண மாவதைக் காட்டிலும், சந்தோஷத்தைத் தருவது சிறந்த மார்க்கமென்று எண்ணிக், குதிரையின் வேகத்தைக் குறைத்துக்கொண்டு தோற்பார்.

அவர் ஒரு நாள் மாலையில் தேவதத்தன் என்பவனோடு பூஞ்சோலை ஒன்றில் உலாவிக்கொண் டிருந்தார். அப்பொழுது சில அன்னப் பறவைகள் இரைதேடித் தின்று, இமய மலையிலிருக்கின்ற தங்கள் இருப்பிடத்துக்குச் சென்றுகொண் டிருந்தன. சித்தார்த்தர் அப்பறவைகளின் வனப்பைக் கண்டு அகம் களித் திருக்கையில், தேவதத்தன் வில்லை வளைத்து அம்பொன்றைத் தொடுத்து, அவற்றைப் பார்த்து விடுத்தான். அவ்வம்பு பழுது படாமல், முதலிற் சென்ற பறவையின் உடம்பில் பொத்துக் கொண்ட படியினால், அவ்வழகிய பறவை கறங்கெனச் சுழன்று கொண்டு, அரச குமாரரது அடியில் வந்து விழுந்தது. அரச குமாரர் அதனைக் கண்டு அதிக வருத்தத்தை அடைந்தார். அவர் கண்களில் அவரை அறியாமலேயே நீர் பெருகிற்று. மனம் பரிதபித்தது. அவ்வம்பு தம்முடம்பில்தான் பொத்துக்கொண்டது போலத் துன்பத்தில் அமிழ்ந்தினார். தேவதத்தனையும் கடிந்தார். பின்னர்ப் பறவையை அணைத்தும், அதன் களைப்பை மாற்றியும்,

அம்பைப் பிடுங்கியும், உபசரணை செய்தார். அந்தப் பறவை செல்லச் சக்தி யற்றிருந்த படியினுல், அதற்குப் பாலும் பழமும் பரிந்தூட்டியும், இரணத்துக்கு மருந்துகள் கட்டியும், கூட்டில் இட்டுக் காப்பாற்றியும் வந்தார்.

சில நாள் சென்ற பிற்பாடு, அந்தப் பறவை இழந்த வலிமையைத் திரும்பவும் அடைந்தது. 'தான் அம்பெறிந்து வீழ்த்தின படியினுல், அவ்வன்னப் பறவை தனக்குத்தான் உரிமையாக வேண்டும்' என்று, தேவதத்தன் சபையில் வழக்குச் செய்து கொண்டான். அரச குமாரர் 'பறவை பிழைக்கும்படி தாம் பலவகையிலும் பாதுகாத்து வந்த படியினுல், தம்மைச் சேர வேண்டும்' என்று, எதிர் வழக்குச் செய்து சுவாதீன மாக்கிக்கொண்டு, பறவையைப் போக விட்டார். அந்தப் பொற்பறவை அவரை முத்தமிட்டுக் கொண்டு மகிழ்ச்சியோடு சென்று விட்டது.

மற்றொரு சமயத்தில் அவர் கானகத்துக்கு வேட்டைக்குச் சென்றிருந்தார். அநேகம் வேட்டைக்காரர்கள் அவருக்கு முன்னர்ச் சென்று வலைகளை விரித்தும், வேலிகளை நிறைத்தும், புதர்களை அடித்தும், பறைகளை முழக்கியும், விலங்குகளைக் கிளப்பினுர்கள். சித்தார்த்தர் குதிரையேறி, வில்லில் அம்பைப் பூட்டிக்கொண்டு வந்தார். மான் முயல் முதலிய விலங்குகளைக் கண்டதும், அவர் மனம் இளகிப் போயிற்று. அப்புறம், அவற்றைக் கொல்ல மனம் வரவில்லை. அவர் 'நாம் ஏன் இந்தப் பிராணிகளைக் கொல்ல வேண்டும்? இவைகளும் நம்மைப்போலக் கஷ்டங்களை அறிகின்றன; உலகத்திலும் உலக சுகத்திலும் நம்மைப் போலவே இவைகளுக்கும் உரிமை யிருக்கின்றன; ஆபத்து வந்த சமயத்தில் ஓடித் தப்புவதை யன்றி, வேறொன்றையும்

செய்ய வறியாத இந்தப் பிராணிகளைக் கொல்வது பெரிய பாப மாகும்' என்று தமக்குள் நினைத்துக், குதிரையைத் திருப்பிக்கொண்டு பட்டணம் வந்து சேர்ந்தார்.

அவர் வேறொரு சமயத்தில் பந்துக்களால் புறக்கணிக்கப்பட்டும், உறுப்புக்கள் அழுகியும், இரணம்கொண்டும் கிடந்த குஷ்டரோகி யொருவனைச் சந்தித்துத், தமது மேன்மையைக் கவனியாமல், அவன் சமீபம் சென்று, அவனுக்கு மருந்து தடவியும், உணவளித்தும் காப்பாற்றினார். இன்னமும் அவர் சரித்திரத்தில் இவை போன்ற எண்ணிறந்த அருள் தன்மைகளைக் காணலாம். அவருக்குப் புத்தர் என்று அப்புறம் பெயர் உண்டாயிற்று. இவ்வளவு உயர்ந்த அருளை இயற்கையில் கொண்டிருந்த படியினாற்றான் அவர் கடவுள் அருளுக்கு உரிமையானவ ராகிப், புத்தமதம் என்று தம் பெயரால் புதிய மதம் ஒன்றை ஏற்பாடு செய்தார். இப்பொழுதும் உலகத்தில் அதிகமான தொகையினர் அவர் மதத்தையே தழுவி யிருக்கிறார்கள். ஆதலால், அனைவரும் புத்தரைப் போல அருளுடையவர்க ளாகவேண்டும். -புத்தசரித்திரம்.

அருட்செல்வம் செல்வத்துட்செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

—(o)—

26—புலால் மறுத்தல், வசிஷ்டர்

புலால் மறுத்தலாவது ஊன் உண்ணலை ஒழித்தலாம். தன் உடலை வளர்ப்பதற்குப் பிறிதொரு உயிரைக் கொன்று, அதன் மாமிசத்தை உண்பது பெரிய பேதமை அல்லவா? புலால் உண்பவன்மேல் இருவிதமான குற்றம் சுமருகின்றது. ஒன்று உயிரைக் கொல்வது. மற்றொன்று ஊன் தின்

பது. கொல்லாமல் தின்ன முடியாது. சிலர் 'நாங்கள் கொல்வதில்லை' என்று சொல்வது குற்றமே யாகும். ஏனென்றால், தின்பவர் இல்லையேல், கொல்பவரும் கடைக்காரரும் இருக்கவே மாட்டார்கள்.

ஆடு கோழி மீன் முதலான சில உயிர்கள் உலகத்தில் உணவின் பொருட்டாகவே கொல்லப் படுகின்றன. அந்தப் பிராணிகளுக்குத் தம் ஆபத்தை அறிந்து தடுத்துக் கொள்வதற்கு திறமை கிடையாது. அந்தோ! சுவையில்லாத வூனுக்கு மசாலைப் பொருள்களாலும், நெய் எண்ணெய் முதலியவற்றாலும், சுவையை அமைத்துத்தின்று, தசையை வளர்ப்பது பெரும் பாவம் அல்லவா? ஒவ்வொரு உயிர்வர்க்கமும் ஒவ்வொரு விதமான வுணவை உண்டு உயிர் வாழ்கின்றது. ஆனால், மனிதவர்க்கத்துக்கு மாத்திரம் இந்த வரையறை ஏற்படவில்லை. அன்பு அருள் இரண்டும் புலால் உண்பவனை விட்டுப் பறந்து போகின்றன. ஆயிரம் வேள்வி செய்தலினும் ஊன் உண்ணாதவிரதம் ஒன்றே உயர்ந்ததாகின்றது. ஊன்உண்பவன் மனம் கல்லினும் கடினமாகிக், கருணையைக் கைவிட்டிருக்கும். ஊன் உண்பவன் செய்கின்ற அறம் தவம் முதலியவை ஒரு நாளும் உறுதியடைவதில்லை. கடவுள் அருள் ஒளி அவன் மேல் மறந்தும் வீசுவதில்லை. அவன்பெருமைகள் யாவும்நிமிஷநேரம்கூட நில்லாமல் தொலைகின்றன. அப்புறம், கண்ணீரும் கம்பலையுமாகவே அவன் வாழ்நாள் கழிந்து கணக்காகும்.

ஒரு சமயத்தில் தவத்தில் சிறந்த வசிஷ்ட முனிவர் சூரிய வம்சத் தரசனான ஸோதாஸன் என்னும் அரசனிடத்துக்குச் சென்று, மாமிச போஜனத்தை விரும்பினார். அவ்வரசன் 'அப்படியே தருகிறேன்; இவ்விடத்தில் இருங்கள்; ஏற்பாடு செய்து வருகிறேன்' என்று சொல்லி, மடைப்பள்ளிக்

குச் சென்றான். நடுவழியில் சில அவசியமான விஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்யும் பொருட்டு, அவனுடைய அமைச்சன் வந்திருந்தான். அவன் பேசிச் சென்ற பிற்பாடு, பட்டமகிஷி வந்து சேர்ந்தாள். அவளை அனுப்புவதற்குள் அகாலமாய்ப் போயிற்று.

அதன் பின்னர் மன்னவன் மடைப் பள்ளிக்குப் போனான். அங்கு ஒருவரும் இல்லை. வேலைக்காரர்கள் தங்கள் வேலைகளை முடித்து வீட்டுக்குச் சென்று விட்டார்கள். அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் என்ன செய்யலாம் என்று, ஏங்கித் தவிக்கும் பொழுது, எங்கேயோ படுத்துக் கொண்டிருந்த ஒரு வேலைக்காரன் எழுந்து வந்து நின்றான். ஹோராதாஸன் அவனுக்கு இன்சொற்களைப் பேசி, 'நீ எப்படியாவது வசிஷ்ட முனிவருக்கு மாமிச போஜனம் படைக்க வேண்டும்' என்று சொன்னான். அவன் 'பிரபுவே! சித்தம் செய்து விடுகிறேன்; தாங்கள் சென்று அழைத்து வாருங்கள்' என்று, சொல்லி யனுப்பி விட்டு, அங்குத் தூங்கிக்கொண் டிருந்த குழந்தை ஒன்றைக் கொன்று, அதன் மாமிசத்தை எடுத்துச் சமைத்து வைத்திருந்தான்.

அரசன் முனிவரை வணங்கி அழைத்துக்கொண்டு வந்து, ஆசனத்தில் அமர்த்தினான். பரிசாரகன் தான் சமைத்துவைத்திருந்த மாமிச போஜனத்தைப் பய பக்தியோடு இலைக் கலத்தில் படைத்தான். முனிவர் மாமிச போஜனம் பண்ணவேண்டும் என்று, விருப்பம் கொண்டிருந்த படியினால், முதலில் இரண்டு மூன்று கவளங்கள் துரிதமாய்த் தின்று விட்டார். அப்புறம், அவருக்கு அது மிருக மாமிசமா? அல்லது வேறு மாமிசமா? என்று, சந்தேகம் தோன்றிற்று.

சற்று யோசனை செய்த பிற்பாடு, அது நர மாமிசம் என்பதை நன்றாய் அறிந்துகொள்ளலானார். 'மிருக மாமிசம் வேண்டும் என்று அரசனை விரும்பி கேட்டதற்கு, நர மாமிசம் அளித்துத் தன்னை நாசம் செய்துவிட்டான்' என்று, அவன் மீது கோபித்துக்கொண்டு, "துஷ்ட வாசனே! நர மாமிசத்தைக் கொடுத்து நரகத்தை அளித்துவிட்டனை; அதனால், நீ இன்று முதல் நர மாமிசம் புசிக்கின்ற ராக்ஷஸனாக மாறுக" என்று சபித்தார்.

ஹோதாசன் "ஐயா! இந்தக் குற்றம் என்னால் உண்டானதன்று; இது சமையற்காரன் செய்த சூது; அவன் தங்கள் மீதிலாவது, அல்லது என் மீதிலாவது, பகை பூண்டிருக்க வேண்டும்; இல்லா விட்டால், அவன் இந்தக் கொடுந் தொழிலைச் செய்திரான்; தாங்கள் உண்மையை உணராமல், எனக்குக் கொடுஞ் சாபத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்; அக்கிரமமாய்ச் சபித்த தங்களுக்கு நான் பிரதி சாபம் கொடுக்கிறேன்; என் வல்லமையைப் பாருங்கள்!" என்று, கரத்தில் நீர்ப் பெய்துகொண்டு, மந்திரம் உச்சரித்தான். அவ்வளவில் அவன் மனைவி மதயந்தி யென்பவள் முன்னால் வந்து தடுத்து, 'நாதா! குருவுக்குச் சாபம் கொடுக்கக் கூடாது; சாந்த மடையுங்கள்' என்று வேண்டிக் கொண்டனள். ஹோதாஸன் கோபம் தணிந்து, கையிலிருந்த தண்ணீரைத் தனது காலிற் பெய்து கொண்டான். மந்திரம் நிரம்பிய தண்ணீரா தலால், அஃது அவன் காலைக் கறுக்கச் செய்து விட்டது. அதனால், அவ்வரசனுக்கு அன்று முதல் கல்மாஷ பாதன் என்ற பெயர் பிரசித்தமாய்ப் போயிற்று. கல்மஷம் என்றால், கறுப்பு. கறுப்பான பாதத்தை யுடையவன் என்பது பொருள். அப்புறம், வசிஷ்ட முனிவர் ஞான

திருஷ்டியினால் அரசன் குற்றமற்றவன் என்பதைத் தெரிந்து, ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்.

கல்மாஷ பாதன் அவர் சாபத்தினால் அன்று முதல் அரக்கனாகி, வனத்தில் அலைந்து திரிந்து, அகப்பட்டவர்களை யெல்லாம் தின்றுவரத் தொடங்கினான்: பின்னர் அவ்வரசன் வனத்தில் தவம் செய்துவந்த வசிஷ்ட முனிவருடைய நூறு புத்திரர்களையும் ஒருவர்பின் ஒருவராய்க் கொன்று, உணவாக் கிக் கொண்டுவிட்டான். அது வசிஷ்டருக்குத் தெரிந்தது. தம் புத்திரர் நூற்றுவரும் அரசனால் கொல்லப்பட்டுப் போன தற்கு, அவர் மிகவும் வருந்திப் புலம்பினார். புத்திர சோகத் தினால் பிராணனை விடுவதற்குப் பலவிதத்திலும் பிரயத்தனம் பண்ணினார். ஒன்றாவது பலன் தர வில்லை. தாம் மாமிச போஜனம் விரும்பினதற்குப் பலன் புத்திர சோகம்தான் என்று, அவர் பூர்த்தியாய்த் தெரிந்துகொண்டு விட்டார். அப் புறம், அந்த உயர்ந்த முனிவர் கல்மாஷ பாதனுடைய கொடுஞ் சாபத்தை அகற்றி, அவனை அயோத்திக்கு அழைத்துக் கொண்டுவந்து, முன்னர்ப்போலவே அரசனும் ஆக்கினார். ஆதலால், அருளுடைமையை விரும்புகின்றவர்கள் மாமி சத்தை மறந்தும் புசிக்கமாட்டார்கள். —மகாபாரதம்.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளும் அருள்.

—(o)—

27—தவம், விசுவாமித்திரர்

தன் னுயிர்க்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்துப், பிற வுயிர் ஓம்புதலைத் தவம் என்று சொல்லுவர். மனம், பொறிவழியில் சென்று புன்றொழிலைச் செய்யாமல் அடங்கு

வதற்கு, விரதங்களினால் உண்டி சுருக்குதல், கோடைக்காலத்தில் வெயிலிலும், மாரிக்காலத்தில் மழையிலும், பனிக்காலத்தில் நீரிலும் நிற்குதல், முதலியவை வழிகளாகும். இந்தப் பழக்கங்களினால் மனம் பொறிகளாகிய வாயில்களின் வழியிற் செல்லாமல் அடங்கி யிருக்கும். தவத்திற்கு மன வடக்கம் முதன்மை யானது. இஃதிருந்தா லன்றி, மற்றைய வடக்கம் சித்தி யாகாது. பலர் இந்த மன வடக்கத்தின் பொருட்டுத்தான் கானகம் சென்றும், காய் இலை தின்றும், பட்டினி கிடந்தும், கஷ்டப்பட்டு வருந்துகின்றனர். நெருப்பில் சுடுந்தோறும் சுடுந்தோறும், மாற்று உயர்ந்து விளங்குகின்ற தங்கத்தைப்போலத், தவமும் உடற் றுன்பங்களைப் பொறுக்குந்தோறும் பொறுக்குந்தோறும், ஓங்கி வளருகின்றது.

ஒருவன் உலகத்தில் மிகவும் உயர்ந்த வொன்றைத் தவத்தினால் சாதித்துக் கொள்ளலாம். விரும்பியவற்றைப் பெறுதலும், விண்ணவரை ஏவல் கொள்ளுதலும், பகைவரை அழித்தலும், அடைந்தவரை ஆதரித்தலும், தவத்தினால் சாதிக்கப்படுகின்றன. தவம் ஒருவனுக்கு இம்மை மறுமை என்ற இரண்டையும் தரும். தாழ்ந்தவனை உயர்த்தும். தெய்வ பதங்களையும் சிறப்பையும் சொந்த மாக்கும். இறப்பையும் துறக்கச் செய்யும். தவம் செய்பவர் சிலரும், செய்யாதவர் பலரு மாகலால், மறுபிறப்பில் அதன் பயனாகிய செல்வத்தைச் சிலரும், வறுமையைப் பலருமாக அநுபவிக்கிறார்கள். இவ்வளவு பெருமை பொருந்திய தவத்தை ஒருவன் செய்யாமல் இருக்கமுடியுமா?

முன்னர்க் குசிக வம்சத்தில் பிறந்த கௌசிகர் என்ற அரசர் ஒரு சமயத்தில் தம்முடைய நூறு புத்திரர்களுடன் வனத்துக்குச் சென்றிருந்தார். கரி பரி தேர் காலாள்

என்ற நால்வகைப் படைகளும் அவரைத் தொடர்ந்து சென்றன. அவர் காட்டில் வேட்டைத் தொழிலை முடித்துத் திரும்புகின்ற தருணத்தில் பிரம ரிஷியாகிய வசிஷ்ட முனிவரைக் கண்டார். அம்முனிவர் அரசரையும் அவர் பரிவாரங்களையும், தமது ஆச்சிரமத்துக்கு வந்து, அன்னம் அருந்திச் செல்லும்படி கூறினார். அரசரும் அங்கிகரித்தனர்.

பின்பு முனிவர் தம்மிடத்தி லிருந்த நந்தினி யென்ற காமதேநுவைக் கொண்டு, அரசருக்கும் அவருடன் வந்த பரிவாரங்களுக்கும், விருந்து செய்வித்தார். சாப்பாடு முடிந்த பிற்பாடு, கௌசிகருக்கு அந்தக் காமதேநுவைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று, கருத்து உண்டாயிற்று. அதனால், தமது விருப்பத்தை முனிவருக்குக் கூறினார். முனிவர் அங்கீகரிக்க வில்லை. கொடுக்க முடியா தென்று, மறுத்துச் சொல்லிவிட்டார். கௌசிக வரசர் அந்தக் கடவுள் பசுவைக் கட்டாயம் பற்றிச் செல்லவேண்டும் என்று பிடிவாதம் கொண்டு, அதனைப் பிடித்துக்கொள்ளும்படி படைவீரர்களுக்குப் புகன்றார். பசுவைப் பிடிக்க முயன்றவர்களில் ஒருவரும் உயிர் பிழைக்க வில்லை. எல்லாரும் அதன் கோபத்தில் உண்டான கிங்கரர்களினால் குறைந்துபோய் விட்டார்கள்.

கௌசிகர் படைவீரர்களின் கஷ்டத்துக்கு வருந்தி, அவ்வளவும் வசிஷ்டர் செய்கின்ற கொடுஞ் செயல் என்று கொண்டு, தம் மக்களோடு முனிவர்மீது சண்டைக்குச் சென்று, விற்களை வளைத்து விண்ணவர் கணைகளை மிகுதியாய்ச் சொரிந்தார். வசிஷ்ட முனிவர் அரசர் செய்கின்ற அடாச் செயலுக்குச் சிரித்துத், தமது யோக தண்டத்தினால் அவ்வளவு அஸ்திரங்களையும் கெடுத்து, அவர் மக்கள் நூற்றுவரையும் சாம்பர் செய்துவிட்டார். அரசர் தமது பராக்கிர

மங்களை யெல்லாம் வசிஷ்ட முனிவர் மிகவும் எளிதில் கெடுத்துவிட்ட படியினால், அரசின் பலத்தைக் காட்டிலும், தவத்தின் பலமே சிறந்த தென்று தீர்மானித்து, 'முனிவரே! நானும் உம்மைப்போல உயர்ந்த தவசியாகி, உம்மை எதிர்த்து நிற்கிறேன்' என்று சபதம் செய்துவிட்டுச், சடைமுடி புனைந்து தபசி வேஷம் பூண்டு, இமய மலைக்குக் கிழக்குத் திக்கில் அமர்ந்து, தவம் செய்யத் தொடங்கினார்.

அங்குப் பல வருஷங்கள் வரையில் அரிய தவத்தைச் செய்து, இந்திரன் கட்டளையின்மீது தம்மைக் கெடுப்பதற்கு வந்த அரம்பை என்னும் தெய்வக் கணிகையைச் சபித்துப், பின்னர் அம்மலைக்குத் தெற்கில் வந்து தவம் செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது சூரிய குலத்துஅரசனான திரிசங்கு மன்னவன் உடலோடு சுவர்க்கம் செல்வதற்கு முயன்றான். குலகுருவான வசிஷ்ட முனிவர் அப்படிச் செல்ல முடியா தென்று பல தடவை சொல்லியும், அவ்வரசன் மீண்டும் மீண்டும் வந்து அவரைப் நிர்ப்பந்தித்து, 'நான் வேறு குருவை அடைந்தாவது நினைத்த காரியத்தை நிறைவேற்றிக் கொள்கிறேன்; உத்தரவு தாருங்கள்' என்று, பிடிவாதம் பண்ணினான். அதனால், அம்முனிவர் அதிக கோபம் கொண்டு, 'நீ சண்டாள னாகக்கடவது' என்று சாபம் கொடுத்துவிட்டார். அப்புறம், அந்த மன்னவன் சண்டாள வடிவத்தோடு இராஜரிஷியாகிய கௌசிகரைக் கண்டு, கருத்தில் உள்ளவற்றைக் கூறினான். அவர் திரிசங்கு மன்னவனுக்கு அபயம் கொடுத்து, "அரசனே! விசாரப் படாதிரு; அந்தப் பஞ்சை வசிஷ்டன் முடியா தென்று மறுத்துவிட்டதனாலேயே அதனை நிறைவேற்றித்தருகின்றவர் உலகத்தில் இல்லாமற் போகவில்லை;

நான் உன்னை உடலோடு சுவர்க்கம் அனுப்புகிறேன்'' என்று தேற்றரவு சொல்லி, வனத்தில் வேள்வி யொன்று செய்து, அதன் முன்னிலையில் திரிசங்கு மன்னவனை விமானத்தில் ஏற்றிச், சுவர்க்கத்துக்கு அனுப்பினார். சண்டாளன் சுவர்க்கத்தில் புகக் கூடாதென்று, இந்திரன் கீழே தள்ளி விட்டான். நிலத்தை நோக்கித் தலை கீழாய் விழுகின்ற அந்நிருபனைக் காப்பாற்றும் நிமித்தம், கௌசிகர் தம் தவப் பெருமையினால்அவ்வரசனை அப்படியே அந்தரத்தில் நிறுத்தி வேறொரு சுவர்க்கத்தையும் உயிர் வர்க்கங்களையும் படைத்துத், தமது ஒப்புயர்வற்ற சாமர்த்தியத்தைக் காட்டினார். அவ்வளவில், பிரமன் முதலான தேவர்கள் பிரத்தியக்ஷமாய் வந்து, கௌசிகர் கோபத்தைத் தணித்துத், திரிசங்கு மன்னவனை அவரால் படைக்கப்பட்ட சுவர்க்கத்திலேயே இருந்து வரச் செய்து, மறைந்து போனார்கள்.

பிற்பாடு, கௌசிக முனிவர் இமயத்தின் மேற்குத் திக்கில் சென்று, தவம் செய்யத் தொடங்கினார். அப்பொழுது அம்பரீஷ மன்னவன் தான் செய்ய விரும்பின ஒரு உயர்ந்த வேள்விக்கு நர பசுவாக, ரிசீகர் என்ற முனிவர் புத்திரனை சுநச்சேபன் என்பவனை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தான். நடுவழியில் அச்சுநச்சேபன் கௌசிகர் ஆச்சிரமத்துக்குச் சென்று, தன்னைக் காப்பாற்றும்படி அவர் காலில் விழுந்து வணங்கினான். முனிவர் தமது தவ மகிமையினால் அவனுக்கு ஒரு மகா மந்திரத்தைச் சொல்லி, 'நீ வேள்வி நடக்கும் பொழுது, இதனை விடாமல் சொல்லிக் கொண்டிரு! உனக்குக் கெடுதி நேராது' என்று, சொல்லி யனுப்பினார். அவனும் அவ்வண்ணமே செய்து, உயிர் பிழைத்துப் போனான்.

நான்காவது அவர் இமயத்தின் வடக்குத் திக்கில் சென்று, பிரமரிஷி யாகவேண்டும் என்று, தவத்தில் உறுதி யாய் நின்றார். இந்திரன் முதலானவர்கள் அவர் தவத்தைக் கெடுக்க எவ்வளவோ சூழ்ச்சி செய்தார்கள். அவர் அவற் றைப் பொருள் பண்ணாமல், மேலும் மேலும் விடாமல் தவம் செய்துவந்த படியினால், பிதாமகர் வந்து, அவருக்குப் பிரமரிஷி யென்ற பட்டத்தையும், வசிஷ்ட முனிவருக்குச் சமானமான கவுரவத்தையும், கொடுத்து மறைந்தார். கௌசிக முனிவர் தமது விடாமுயற்சியினால் கருதியது கைகூடப் பெற்று, அப்புறம் களிப் படைந்து விளங்கினார். அவர் தவம் செய்திராவிட்டால், தம் இஷ்டப்படி ஒன்றையும் செய்திருக்க முடியா தல்லவா? ஆதலால், ஒருவனுக்குத் தவத்தினா லல்லா மல், வேறொன்றினாலும் கருதியது கைகூட மாட்டாது.

—இராமாயணம்.

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

—(o)—

28—கூடாவொழுக்கம், திருமால்

தவத்தொடு பொருந்தாத தீ யொழுக்கத்தைக் கூடா வொழுக்கம் என்பர். கூடா வென்பது ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். இது தாம் வெறுத்துவந்த காம வின் பத்தை மனவலி யின்மையினால் மீட்டும் மீட்டும் விரும்புமாறு தோன்ற, அவ்வாறே மேற்கொண் டொழுகும் தீயவொழுக்க மாகும். கூடா வொழுக்கம் உள்ளவன் தனது வஞ்சகத் தன் மையை வெளிக்குத் தெரியவொட்டாமல், தவ வேடம் பூண்டு மறைத்து வருவதனால், வேடம் ஒழுக்கம் இரண்டுக்குமாக

அவன் குற்றம் இரட்டிக்கின்றது. அவன் குற்றத்துக்கு வெளியிலிருந்து வேறு சாக்ஷிகள் வேண்டியதில்லை: அவன் ஐம்புலன்களுமே அறிந்த சாக்ஷிகளாகின்றன.

பசுத்தோல் போர்த்துத் திரிகின்ற பெரும் புலியைக்காட்டிலும் அவன் வேடம் புன்மை கொண்டது. வேட்டுவன் புதரில் மறைந்திருந்து அதில் வரும் புட்களைப் பிணித்துக்கொள்வது போல, இவனும் தவத்தில் மறைந்து அவத்தைத் திரட்டிக் கொள்கிறான். இப்படிப்பட்ட வேஷதாரிகள் இந்தப் பரந்த வுலகத்துக்குப் பெரும் பிழைசெய்தவ ராவார்கள். அம்பு அழகுள்ளதா யிருந்தாலும், தொழிலில் அழகு பெற்றிருக்கவில்லை. வீணைத் தண்டு அழகற்றதா யிருந்தாலும்,தொழிலில் சிறந்து விளங்குகின்றது.அவற்றைப்போல ஒருவனுடைய வேஷம் விகாரமா யிருந்தாலும், ஒழுக்கம் உயர்ந் திருக்க வேண்டும். புண்ணிய நீராடல் முதலிய பெரிய விரதங்களும் பொய் யொழுக்கம் உள்ளவனுக்குப் பயன் படுவ தில்லை. அவன் பெருமைகள் யாவும் சிறுமைக ளாகின்றன. ஒருவன் தனது கூடா வொழுக்கத்தினால் தனக்குத் தானே கேட்டைத் தருவித்துக் கொள்கிறான்.

முன்னர்ச் சலந்தரன் என்ற அசுரனுக்குப் பிருந்தை என்று ஒரு மனைவி யிருந்தாள். அவள் அழகு தெய்வலோகம் முழுவதும் சிறந்த தென்று சொல்லப்பட்டு வந்தது. அவள் கற்பொழுக்கம் உள்ளவள். நன்னெறி கடவாதவள். பதிபக்தியில் சிறந்தவள்.பெரியவர்க ளிடத்தில் பிரிய முள்ளவள். அப்படிப்பட்ட வுத்தமியை அடைய வேண்டும் என்று, அலர் மகள் கேள்வன் ஆசை கொண்டி ருந்தார். அவருக்குச் சமயமும் சவுகரியமும் அநுகூலிக்கவில்லை. ஏனென்றால், சலந்தரன் பராக்கிரம சாலியாகி ஒருவராலும் வெல்லப்படாத

வனு யிருந்தான். பிருந்தையும் பிறர் அணுக முடியாதபடி தனது பெருங் கற்பைப் பாதுகாத்துக்கொண்டு வந்தாள்.

ஒரு சமயத்தில் சலந்தரன் போரில் ஆசைகொண்டு, பொன்னுலகத்திற்குப் போனன். இந்திரன் பயந்து, 'என்னால் யுத்தம் செய்யமுடியாது' என்று சொல்லிப், பாதத்தில் பணிந்து விட்டான். சலந்தரன் அங்கிருந்து அக்னி யுலகம் போனன். இந்திரனைப்போலவே அக்னியும் வணங்கி விடைகொடுத் தனுப்பினன். இப்படியே அவ்வசுரன் ஒவ்வொரு திசைக் காவலர் உலகத்துக்கும் சென்று, "என்னுடன் சண்டைசெய்ய வாருங்கள்! நான் யுத்த பிக்ஷையை விரும்பி வந்திருக்கிறேன்; என் தோள்கள் தினவு கொள்கின்றன" என்று அறை கூவி அழைத்தும் கூட, அவனுடன் ஒருவராவது சண்டை செய்ய வரவில்லை. அவன் "சீ! சீ! வெட்கம் கெட்டவர்களே! இதுவும் ஒரு பிழைப் பாகுமா?" என்று அவர்களைத் தூஷித்துத் திரும்புகையில், நாரத முனிவரைக் கண்டான்.

அசுரத் தலைவன் அவரிடத்தில் தன் விருப்பத்தையும், திக்குப் பாலகர்களுடைய தன்மையையும், தெரியப்படுத்தினன். அந்தத் தெய்வ முனிவர் அவனைப் பலவாறு புகழ்ந்து, "அசுரத் தலைவனே! உனது ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தைக் கேட்டதும், அவர்கள் பயந்து நடுங்குகிறார்கள்; அவர்களோடு சண்டை செய்வதனால் உனக்கும் புகழ் கிடைக்க மாட்டாது; உன் பராக்கிரமத்துக்குச் சிவபெருமான் ஒருவர்தாம் தகுதி யுள்ளவர்; அவர் உன்னோடு சண்டை செய்ய வருவார்; நீ சீக்கிரம் திருக் கைலாயத்துக்குச் செல்" என்று சொன்னர். சலந்தரன் விடை பெற்றுக் கொண்டு, கைலை மலைக்குப் போனன். சிவபெருமான் அவன் வருகையைத் தெரிந்து, ஒரு கிழவேதி யாகி வந்து, 'அப்பா! நீ யார்? எங்கே போகிறாய்?' என்று

கேட்டார். அசுரன் 'கிழவரே ! நான் இந்த வெள்ளிமலைக்குத் தலைவரான விரிசடைக் கடவுளோடு சண்டை செய்ய வந்திருக்கிறேன்; என்னைச் சலந்தரன் என்பார்கள்' என்று சொன்னான். அவர் தம் காற்பெரு விரலினால் நிலத்தில் வட்ட வடிவமாகக் கோடு ஒன்று கிழித்து, 'வீரனே! இந்தக் கோட்டுக்குள்ளிட்ட நிலத்தை உன் திறமையினால் பெயர்த்துத், தலையில் வைத்துக்கொள்; அஃது உன் திறலைச் சிவ பெருமானுக்குச் சந்தேகமின்றித் தெரிவிக்கும்' என்றார். அசுரன் பலத்தினால் கருவித்து அந்நிலத்தை அப்படியே பெயர்த்துத் தலையில் வைத்துக்கொண்டான். அஃது உடனே சக்ராயுதமாகி, அவ்வசுரன் உடலை மூன்று பாகமாகப் பிளந்து போய் விட்டது. இங்ஙனம் சலந்தரன் தன் கருவத்தினால் தனக்குத்தானே மரணத்தைத் தருவித்துக் கொண்டுவிட்டான்.

அவன் மரணச் செய்தி பிருந்தைக்குத் தெரிய மாட்டாது. பிருந்தையை அடைய வேண்டும் என்று, நெடு நாட்களாக நெஞ்சத்தில் நினைத்திருந்த நேமியங் கடவுள் சலந்தரன் வடிவம் எடுத்துப், பிருந்தையை அடைந்து சந்தோஷித்திருந்தார். நாள்செல்லச் செல்ல, அவர் பழக்கவொழுக்கங்களில் பதிவிரதையான பிருந்தைக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அப்புறம் அவளுக்கு அவரை அறிந்து கொள்ள நாழிகை செல்லவில்லை. திருமகள் கொழுநன் என்று, உடனே தெரிந்து கொண்டு விட்டாள். பின்னர் அடங்காக் கோபத்தோடு சீற்றம் கொண்ட ஒரு பெண் புலியைப்போலச் சீறி, உதடுகள் துடிக்க, மார்பு படபடவென்று அடிக்கப், "பொய்யொழுக்கம் உள்ளவனே ! நீ எல்லா உலகங்களுக்கும் தலைவன் ; பிதாமகனுக்குத் தந்தை ; உயிர்கள் நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்குகளை உண்டுபண்ணியும், அவ்வொழுங்கில் உலகங்களை

நடத்தியும், பாதுகாத்து வருகின்றனே; பெண்களுக்குக் கற்பு பிராணனிலும் பெரியது; குலப் பெண்கள் கற்பழிவைக் காட்டிலும் உயிரழிவுக்கு வருந்தித் துபாமாட்டார்கள்; நீ சில நாட்களாக என் தலைவன்போல நடித்து என்னை மோசம் செய்து விட்டனை; அயலான் மனைவி யென்பதை நன்றாய் அறிந்திருந்தும்கூட என்னை வேண்டும் என்று கெடுத்தனை; கபடம் உள்ளவனே! பெண்களை மோசம் செய்வது பெரிய தீங்கை விளைக்கும்; என்னுடைய சாபத்தைக் கேள்! என்னைக் கெடுத்ததன் காரணமாக உன் அன்புள்ள மனைவியை என் குலத்தில் பிறக்கும் அரக்கன் ஒருவன் அபகரித்துச் செல்ல, நீ அதனைக் கண்டு மனம் வருந்திப், புலம்பி அலையக் கடவாய்" என்று சொல்லி, அப்பொழுதே நெருப்பில் விழுந்து இறந்து போய்விட்டாள்.

பதுமைக் கேள்வன் பதில் சொல்லத் தோன்றாமல், பூமியில் இராமனாய்ப் பிறந்து, அந்தச் சாபத்தை அநுபவித்துத் தொலைத்தார். திருமால் கடவுளா யிருந்தும் அந்தக் கொடுஞ் சாபத்தைக் கடக்க முடிய வில்லை. ஆதலால், தேவர்களா யிருந்தாலும், கெட்ட செய்கைகளுக்குத் தண்டனை கிடைக்காமல் போகாது. —ஸ்காந்தம்.

தவமறைந் தல்லவை செய்தல், புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

—(o)—

29—வெஃகாமை, தக்ஷகன்

பிறர் பொருளை அபகரிக்க விரும்பாமைக்கு வெஃகாமை என்று பெயர். வெஃகல்-விரும்புதல். பிறர் உடைமையைக் களவு செய்தலே யன்றி, அதனை விரும்புதலும் குற்ற மூன்

டாக்கும். மனத்தை அசுத்தப் படுத்துவதற்கு இந்நினைப்பு ஒன்றே போதுமானது. துறவற நெறியில் நின்று அருளை விரும்புகின்றவர் பிறர் பொருளை விரும்ப மாட்டார்கள். தமக்கு இன்றியமையாத ஒரு பொருள் இல்லாமற்போனாலும், கடவுள் உலகம் கைம்மேல் கிடைப்பதா யிருந்தாலும், பெரியவர் அந்தப் புன்தொழிலைச் செய்யார்.

மன விருப்பம் ஆரம்பத்தில் அற்ப முள்ளதாயிருந்தாலும், அப்புறம் அமைதியைக் கெடுத்து அநர்த்தத்தைக் கிளப்பும். மனம் மொழி மெய் யென்ற மூன்றையும் வசப்படுத்துவதற்கு, இவ்விருப்பம் இடறு கட்டையாகி இன்னல் விளைத்து நிற்கும். விருப்பங்களுக்கு இப்பொழுது இல்லாவிட்டாலும், எப்பொழுதாவது பலன் கிடைத்துத் தீர வேண்டும். யானை ஒரு பெரிய மடுவில் தன் பிரதி பிம்பத்தைக் கண்டு களிக்கும் சந்தோஷத்தை, மிகவும் சிறிய தவளைகூடத் திடீரென்று தண்ணீரில் விழுந்து கெடுத்துக் குலைத்துவிடும். தூயவிருப்பம் உள்ளவனுக்குத் திருமகள் செல்வத்தைப் பெருக்குவாள். அவன் தருமங்களும் சிறப்படைந்து விளங்கும். அவனுக்கு அனைவரும் அநுகூலரா யிருப்பார்கள். பிறர் பொருள் வெஃகுவோன் பலகலை கற்ற பண்டிதனா யிருந்தாலும், நெற்பதரைப் போலப் பயன்படாமற் போவான்.

முன்னொரு காலத்தில் பிருகு வம்சத்தில் பிறந்த உதங்கன் என்பவன் பைலவ முனிவருக்குப் பணிவிடை புரிந்து பெரிய கல்வியைக் கற்றான். அவன் குருவுக்குத் தெரிந்த எல்லாச் சாஸ்திரங்களையும் குறை வின்றிக் கற்று விடை பெற்றுச் செல்லும்பொழுது, குருவை வணங்கிப், "பூஜ்யரே! நான் தங்களுக்குத் தக்ஷிணை கொடுக்க வேண்டும்; தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்!" என்று கேட்டான். முனிவர் 'என்

மனைவியைக் கேட்டுக்கொண்டு போ'! என்று கூறினர். உதங்கன் குரு பத்தினியைக் கண்டு வணங்கிக் கேட்டதற்கு, அவள் "ஒழுக்கம் உள்ளவனே! பௌஷ்யன் என்னும் அரசன் மனைவி காதில் அணிந்துகொண் டிருக்கின்ற நாக ரத்தினக் கம்மலை எனக்குக் கேட்டு வாங்கிக் கொடு! நான் நெடு நாட்களாக அந்தக் கம்மலை அணிந்துகொள்ள ஆசை கொண்டிருக்கிறேன்" என்று சொன்னாள்.

உதங்கன் 'அப்படியே தருகிறேன்' என்று, விடை பெற்றுக்கொண்டு பௌஷ்ய வரசன் பட்டணத்துக்குச் சென்று, அந்த மன்னவனைக் கண்டு ஆசீர்வாதங்களினாலும், கல்வியினாலும், அவனைச் சந்தோஷப்படுத்தித் தன் வரலாற்றைச் சொல்லி, நாக ரத்தினக் கம்மலைக் கேட்டான். அரசன் 'அந்தணர் தலைவரே! தாங்கள் என் மனைவியைக் கேட்டு அதனை வாங்கிக் கொண்டு செல்லுங்கள்' என்று அனுப்பினான். உதங்கனும் அந்தப்புரம் சென்றான். அங்குப் பட்ட மகிஷியைக் காணவில்லை. அவன் திரும்பிவந்து, பௌஷ்யனைக் கண்டு நடந்ததை நவின்றான். அம்மன்னவன் 'அந்தணர் பெரும! என் மனைவி அசுத்த முள்ளவர் கண்ணுக்கு அகப்பட மாட்டாள்; இஃது அவள் விரதம்; தாங்கள் மற்றொரு முறை சுத்தமாய்ச் செல்லுங்கள்' என்று சொன்னான். வேதியன் அங்ஙனமே தன் உறுப்புக்களைச் சுத்தம் செய்துகொண்டு, மீட்டும் உள்ளே நுழைந்தான்.

அப்பொழுது அரசன் மனைவி எதிராகி வந்து, அவனுக்கு உபசாரணை செய்து, "அந்தணர் தலைவரே! இந்தக் கம்மல் பரிசுத்த மானது; தவத்தினால் அன்றிப், பணத்தினால் பெற முடியாதது; சர்ப்ப ராஜனை தக்ஷகன் நெடு நாட்களாக இதனை நாடித்திரிந்து வருகிறான்; அவனுக்கு என்னை ஏமாற்ற

முடியவில்லை; நீங்களும் அவ்விஷயத்தில் எச்சரிக்கையா யிருங்கள்'' என்று சொல்லித், தன் காதிலிருந்த நாக ரத்தினக் கம்மலைக் கழற்றிக் கொடுத் தனுப்பினர்.

உதங்கன் அதனைப் பெற்றுக்கொண்டு வருகையில் நடு வழியில் இருந்த ஒரு குளக் கரையில் கம்மலை வைத்து விட்டுக் குளத்துக்குச் சென்றான். அப்பொழுது தக்ஷகன் மறைந்து வந்து, கம்மலைக் களவு செய்து கொண்டு போனன். உதங்கன் அதனை அறிந்து தக்ஷகனைத் தொடர்ந்து செல்கையில், தக்ஷகன் எதிரில் இருந்த ஒரு வளையில் நுழைந்து பாதாளம் சென்றுவிட்டான். அந்தணன் தவத்தின் பெருமையினல் தானும் பாதாளம் சென்று, இரத்தினக் கற்களினல் பிரகாசிக்கின்ற அந்த வுலகம் முழுவதும் திரிந்து தேடியும் தக்ஷகன் அகப்பட வில்லை. அவர்கள் பேசுவது மாத்திரம் காதில் கேட்கின்றது. உதங்கன் அவர்களைத் தோத்திரங் களினல் வசப்படுத்தப் பார்த்தான். அப்பொழுதும் வரவில்லை.

உதங்கனுக்குக் கோபம் உண்டாயிற்று. அவன் இந்திரனைத் துதித்தான். இந்திரன் உடனே ஒரு வெள்ளைக் குதிரையின் மீது வந்து, "பனவனே! உன் துதிக்குச் சந்தோஷிக்கிறேன்; நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? உன் விருப்பத்தை வெளியிடு" என்று கேட்டான். உதங்கன் 'இந் நாகர்கள் எனக்கு வசப்பட வேண்டும்' என்று சொன்னன். இந்திரன் 'நீ இந்த வெள்ளைக் குதிரையின் காதில் ஊதினல் உன் விருப்பம் நிறைவேறும்' என்னலும், உதங்கன் அவ்வண்ணமே தனது பலம் கொண்டமட்டும் அந்தக் குதிரையின் காதில் ஊதினன். அப்பொழுது குதிரையின் உடம்பிலுள்ள ஒவ்வொரு மயிர்க்காலி லிருந்தும் ஒரு வகையான

புகையும் நெருப்பும் தோன்றிப் பாதாள வுலகத்தைப் பரவிக் கிளம்பின. அதனால், பாதாளத்தில் இருந்த பாம்புகளுக்கெல்லாம் பார்வை குறைந்து உடம்பும் எரியத்தொடங்கிற்று. அப்புறம் நாகர்கள் மூலைக்கு மூலை கூக்குர லிட்டுக்கொண்டு தலைவிரி கோலமாக ஓடத் தொடங்கினார்கள். தக்ஷகன் மிகவும் துன்பம் அடைந்து, தன்னால் முடியுந்தனையும் அந்தத் தீங்கைத் தடுக்க முயற்சித்தான். அநுகூலம் ஆகவில்லை. பிற்பாடு, தான் திருடி வந்த நாகரத்தினக் கம்மலை உதங்கனிடத்தில் கொடுத்துத், தன்னை மன்னிக்கும்படி வணங்கி வேண்டிக்கொண்டான்.

அந்தணன் கம்மலைக் குரு பத்தினிக்குக் கொடுத்து விட்டு, நாகர்கள் தனக்குச் செய்த தீங்கை மனத்திற்கொண்டு, அவர்களுக்குச் சிக்ஷை செய்ய வேண்டும் என்று, ஜனமேஜய மன்னவனிடம் சென்று, அவனைச் சர்ப்ப யாகம் செய்யத் தூண்டி, அந்த வேள்வியைத் தானே முன்னின்றும் நடத்தினான். தக்ஷகன் அவ்வேள்வியில் தன் இனத்தார் யாவரையும் இழந்து, துன்பம் அடைந்துபோனான். ஆதலால், ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலைமையில் இருந்தாலும் பிறர் பொருளை அபகரிக்கக் கருத லாகாது. —மகாபாரதம்.

நடுவின்றி நன்பொருள் வெஃகின், குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

—(o)—

30—வாய்மை, கவுசிகன்

உண்மைத் தன்மையை வாய்மை யென்று சொல்லுவர்.

உள்ளவற்றை உள்ளபடி சொல்வது உண்மை என்று பெயர் பெறும். பொய் சொல்வதற்குப் புத்தி அதிகமாய் வேண்

டும். மெய் சொல்வதற்கு அவ்வளவு வேண்டிய தில்லை. பிறவுயிருக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணாத சொல் உண்மைச் சொல்லாகும். உண்மைச் சொல் ஒரு உயிருக்கு உதவி செய்யுமே யன்றி உபத்திரவம் செய்யாது. தமது உண்மை பிறவுயிருக்குத் தீங்கு தரும் என்று தெரிந்தால், பெரியவர் அதனைப் பேச மாட்டார்கள். மனம் அறிந்த வொன்றை மறைத்துப் பேசுவது பொய் யென்று பெயர் பெறும். பொய் பொல்லாத நரகத்தை விளைக்கும்.

உண்மை உரைப்பவன் உத்தமருக்குத் தானம் செய்த பலனைப் பெறுகிறான். இன்னும் அவன், உத்தமர் உள்ளத்திலும் ஒழியாமல் வீற்றிருக்கிறான். உண்மை உரைப்பதற்குப் பொருள் முதலியவற்றைச் செலவு செய்ய வேண்டாம். உடலை வருத்தித் தவம் புரிய வேண்டாம். உண்மைக்கு இவ்வளவு உயர்வு இருந்தாலும், அறிவற்றவர்கள் அதனை அறிந்துகொள்வ தில்லை. அவர்கள் பொய் சொல்லிச் சொல்லித், தங்கள் பொருளையும் புகழையும் பொன்றுவிக்கிறார்கள். உடலைத் தூய்மை செய்வதற்குத் தண்ணீர் கருவியாவது போல, உள்ளத்தைத் தூய்மை செய்வதற்கு உண்மை சிறந்த கருவி. உண்மை விளக்கத்தைக் காட்டிலும் ஒருவனுக்கு உயர்ந்த விளக்கம் வேண்டிய தில்லை. சூரியன் சந்திரன் முதலிய சுடர்களும் அதன் முன்னர்ச் சுடர் அழிந்து மழுங்கும். மெய்க்கு முக்காலத்திலும் மதிப் புண்டு. முதலில் சில சமயங்களில் மெய் பேசுவதனால் வருத்தம் உண்டானாலும், அப்புறம் அதன் மதிப்பு படிப்படியாய் வளர்ந்து, பெருமை பெறப் பண்ணும். பொய் முதலில் மாத்திரம் சிறிது இன்பத்தை விளைத்து, அப்புறம் பொல்லாத துன்பத்தில் புகச் செய்து விடும். இன்னும், ஒரு பொய்யை மறைக்க, ஒன்பது பொய்

யைச் சொல்ல வரும். பொய் புரைப்பவன் மனம் சமாதானம் இன்றி வருந்திக்கொண்டே யிருக்கும்.

முன்னர்க் கவுசாம்பி நகரத்தில் கவுசிகன் என்று ஒரு அந்தணன் இருந்தான். அவன் தனது இளமைப் பருவத்தில் கற்க வேண்டியவற்றைக் கற்றுக், கீழ் மக்களோடு கேண்மை கொண்டு களித்து வரத்தொடங்கினன். அந்தணன் கல்வி அவன் கெட்ட வொழுக்கத்தைக் காத்துக் கொள்வதற்கு மாத்திரம் கருவியா யிருந்துவந்தது. குடி, சூது, கொலை, களவு முதலான கொடுஞ் செயல் யாவும் அவனிடத்தில் குடி புகுந்து களித்தன. சமயத்துக்குத் தக்கபடி தனது நடை உடைகளை மாற்றிக் கொள்வதில் கவுசிகன் சதுரனா யிருந்தான். ஒழுக்கம் இழந்தவன் என்று, உறவினர் யாவரும் அவனை உதாஸீனம் செய்து தள்ளிவிட்டார்கள்.

சில வருஷங்கள் கழிந்தன. ஒரு நாள் கவுசிகன் வீட்டுக்கு விருந்தினர் ஒருவர் வந்தார். அவர் பனிமலைச் சாரலில் இனிமையாய் வசிப்பவர். கடவுளை மறவாமல் தவம் செய்து வருபவர். வேதியன் அவரை 'வாருங்கள்' என்று சொல்லி அழைத்து வந்து, அறு சுவை பொருந்திய அன்னத்தைப் படைத்து அன்பு பாராட்டினன். அவ்விருந்தினர் இரண்டு நாள் வரையில் எங்கும் போகாமல் இருந்து விட்டார். மூன்றாவது நாள் மாலையில் விடை பெறுவதன் பொருட்டு வேதியனோடு வார்த்தை யாடலானார்.

கவுசிகன் அவரிடத்தில் தனது அக்கிரமச் செயல்களையும், அதனை விட முடியா திருக்கின்ற தன் தீய செல்வுகளையும், வெட்கத்தோடு கூறினன். தாபதர் காதில் கரத்தை வைத்து, "அந்தோ! அந்தணனாய்ப் பிறந்து அரும் கலை பயின்றும்கூட, அக்கிரமம் செய்ய லாகுமா? அறியாமல்

வந்து, உன்னுடைய அன்னத்தை அருந்தி விட்டேனே; ஒழுக்க முள்ளவன் என்றல்லவா உன் வீட்டில் வந்து தங்கினேன்? உன் பாபத்தை எங்ஙனம் ஒழித்துக் கொள்ளப் போகிறாய்? இனியாவது வேதியர் ஒழுக்கங்களை விரும்பிப் பெற்றுவா; அதுதான் உன் பாபங்களுக்கு ஒரு விதத்தில் பிராயச் சித்தமா யிருக்கும்'' என்று சொன்னார்.

அந்தணன் அவர் பாதத்தில் பணிந்து, ''பெருந்தன்மை யுள்ளவரே! நான் எல்லாவற்றையும் தொலைத்துச் சுத்தனாவதற்கு இன்னும் ஒரு வருஷ காலம் செல்லும்; அதற்குப் பிற்பாடு அந்தணர் கூட்டத்தை அடைந்து களிக்கிறேன்; அது வரையில் ஒன்றைக் கைக்கொண்டு வரும்படி உறுதி கூறிச் செல்லுங்கள்; அதனைக் கட்டாயம் அநுசரித்து வருகிறேன்'' என்றான். முனிவர் சற்று ஆலோசனை செய்து, ''இன்று முதல் உண்மையை ஒளியாமல் உரைத்துக் கொண்டுவா; உயிர் போவதா யிருந்தாலும், உண்மையைக் கைவிடா திரு; அஃது உனக்கு உயர்ந்த பதவியைத் தரும்'' என்று சொன்னார். கவுசிகன் 'அப்படியே நடக்கிறேன்' என்று, அவருக்கு வழிவிட்டுத் திரும்பினான்.

பின்னர் ஒருநாள் இரவு கவுசிகன் குறுக்குச் சந்து ஒன்றில் சென்றுகொண் டிருந்தான். அன்று பொய் யுருப் புனைந்து பட்டணம் காண வந்த கொற்றவன் தற்செயலாகக் கவுசிகனைக் காண லாயிற்று. அரசன் ஐயம் கொண்டு, 'ஐயா! இந்த அகால வேளையில் எங்குச் செல்கிறீர்கள்?' என்று கேட்டான். அந்தணன் முனிவரிடத்தில் 'உண்மை உரைக்கிறேன்' என்று ஒப்புக்கொண்டுவிட்ட படியினால், 'அரண்மனையில் களவு செய்யச் செல்கிறேன்' என்றான். அரசன் ஆச்சரியப்பட்டு, ''ஐயா! என்னைக் கேலி செய்யவேண்

டாம்; நான் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு வேற்று நாட்டிலிருந்து வந்திருக்கிறேன்; தாங்கள் ஏதாவது தொழில் செய்ய வைத்துக் கொண்டால், தங்களிடத்தில் சந்தோஷமாய்ச் செய்துகொண் டிருப்பேன்'' என்று சொன்னான். அந்தணன் ''நாளை நிலைமை எனக்குத் தெரியாது; இஷ்டம் இருந்தால், இப்பொழுதே புறப்பட்டு வா; எனக்குக் கிடைப்பவற்றில் உனக்கும் கொஞ்சம் உதவி செய்கிறேன்'' என்று கூறினான். அரசன் 'அப்படியே வருகிறேன்' என்று சொல்லி, அந்தணனைத் தொடர்ந்து போனான்.

இருவரும் சந்தடி செய்யாமல் நடந்து, அரண்மனை அருகில் அணைந்தார்கள். அந்தணன் கையில் கொண்டுவந்திருந்த கன்னக் கோலின் உதவியினால் சுவரைக் கெல்லி வழிச் செய்துகொண்டு, அரசனை வாயிலில் காவல் வைத்து விட்டு, உள்ளே நுழைந்து போனான். அவன் சென்றது அரசன் படுக்கையறை. அவ்வறையில் தனக்கு அவசியமான பொருள் இருக்கின்றதா வென்று, ஆராய்ந்து பார்க்கும்போது, தந்தப் பெட்டி யொன்றில் விலை மதிக்க முடியாத மூன்று ரத்தினம் இருந்தது. அம்மூன்றும் ஒன்றுக் கொன்று வித்தியாசம் இல்லாமல், ஒளியிலும் உருவத்திலும் உயர்ந்து விளங்கிற்று.

கவுசிகன் சற்று ஆலோசனை செய்து, மூன்றையும் எடுத்துக் கொள்வது முறைமை யாகாதென்று, ஒன்றைப் பெட்டியில் வைத்து விட்டு, இரண்டை மாத்திரம் எடுத்துக் கொண்டு திரும்பினான். வாயிலில் இருந்த மன்னவன் 'என்ன ஐயா! வெறுங் கையோடு திரும்பி விட்டீர்களே?' என்று கேட்க, அந்தணன் '' அப்பா! பெட்டியில் மூன்று ரத்தினங்கள் இருந்தன; கஷ்டப்பட்டுச் சேர்த்த கொற்றவனுக்கு என்று ஒன்றை நிறுத்திவிட்டு, இரண்டைக் கொண்டு வந்தி

ருக்கிறேன்; இவற்றில் உனக்கு இஷ்டமான வொன்றை எடுத்துக்கொண்டு போ" என்று சொல்லி, ரத்தினங்களைக் கொடுத்தான். வேந்தன் வேதியன் செயலில் வியப்பு மேலிட்டு, ஒன்றைப் பெற்றுக் கொண்டு வந்து, பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்தணன் சொல்லிய ரத்தினம் அப்படியேயிருந்தது.

உடனே மந்திரியைக் கூப்பிட்டுப், பள்ளியறையில் கள்வன் நுழைந்ததைக் கூறிக், களவு போன பொருள் என்னவென்று, கண்டறிந்து வரச் சொன்னான். அமைச்சன் அறையில் நுழைந்து, பெட்டியில் இருந்த ரத்தினத்தை உடையில் மறைத்துக்கொண்டு, "அண்ணலே! கள்வன் உளவு தெரிந்து வந்திருக்கிறான்; அவன் அரண்மனையில் இருந்த அரதனம் மூன்றையும் அபகரித்துப் போய்விட்டான்; மற்றவை யாவும் அப்படியே யிருக்கின்றன" என்று கூறினான். அரசன் மந்திரியின் யோக்கியதையை மனத்தில் வெறுத்துக் கொண்டு கள்வனைக் கண்டு பிடிக்கக் கூறினான்.

மற்றை நாள் கவுசிகன் தன் இரத்தினத்தை ஒரு சாவகாரியிடத்தில் கொண்டுபோனான். உண்மை உரைப்பவனாதலால், அங்கு வார்த்தைமீது வார்த்தையாகக், கொற்றவன் குடியில் களவாடி வந்த செய்தியைக் கூறும்படியாக நேர்ந்தது. அந்தச் சாவகாரி அதனை அங்கு உள்ளவர்களுக்குக் கூறினான். பின்னர்ச் சற்று நேரத்துக்கெல்லாம் கவுசிகனைக் காவற்காரர்கள் வந்து கொற்றவன் சபைக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

சபையில் விசாரணை செய்தார்கள். அந்தணன் சிறிதும் அஞ்சுதல் அடையவில்லை. முனிவரை மனத்தில் நினைத்துக் கொண்டு, முன்பின் முரண் கொள்ளாமல் முன்னை நாள் செய்தியை முற்றிலும் கூறிவிட்டான். அப்பொழுது அமைச்சன்

எழுந்து நின்று, "அண்ணலே! இவன் வார்த்தையில் உண்மை கிடையாது; பெட்டியில் இரத்தினம் இருக்கவில்லை; திருட வந்தவன் ஒன்றை வைத்துவிட்டு இரண்டை மாத்திரம் எடுத்துக் கொண்டு போவானா? கூட்டாளிக்கு ஒன்றைக் கொடுத்து விட்டேன் என்பதுவும் பொய்வார்த்தையே யாகும்; மூன்றும் இவனிடத்தில் தான் இருக்கின்றது; துஷ்டர்கள் தண்டனையினாலன்றித் திருத்தமடைய மாட்டார்கள்" என்று கூறினான்.

அரசன் சிரித்துக்கொண்டு, 'இதனைப் பார்' என்று, தன்னிடம் இருந்த ரத்தினத்தைக் கவுசிகனுக்குக் காட்டினான். வேதியன் வாங்கிப் பார்த்து, 'அண்ணலே! நடந்த இரவு நான் இந்த ரத்தினத்தை என் கூட்டாளிக்குக் கொடுத்தேன்' என்று, கபடம் இல்லாமல் கூறினான். அப்புறம், மன்னவன் சபையை நோக்கி, அந்தணனுக்கும் தனக்கும் நடந்த கடந்த இரவின் செய்திகளைச் சொல்லிப், பெருந்தன்மையான பதவியில் இருக்கின்ற மந்திரியின் மோசத்தையும், களவு செய்தலாகிய இழிவு தொழிலில் இருந்தாலும், உண்மையை ஒளியாமல் உரைத்த வேதியன் உயர்வையும் விளக்கி, அன்று முதல் அந்தணனைத் தனக்கு அமைச்சனாய்க்கொண்டு, அமைச்சனை அனைவரும் அறியத் திருடன் என்று வெறுத்துத், தண்டனை விதித்து விட்டான். கவுசிகன் ஏற்கெனவே எல்லாக் கலைகளையும் எழுத்தெண்ணிப் படித்திருந்த படியினால், அமைச்சுத் தொழிலை அமைதியுடன் நடத்தி, அரசனுக்கு ஆநந்தம் அளித்து வந்தான். ஆதலால், அனைவரும் உண்மையை உள்ளபடி உரைத்து உலகத்தில் வாழ வேண்டும். —பிரேமைக்கதை.

மனத்தோடு வாய்மை மொழியின், தவத்தோடு
தானம் செய்வாரிற் றலை.

—(o)—

31—வெகுளாமை, நிமியும் வசிஷ்டரும்

வெகுளாமை யாவது, ஒருவன்மீது கோபிப்பதற்குக் காரணம் உண்டான விடத்திலும் அதனைச் செய்யாமையாம். வலியவர்மேல் உண்டாகின்ற கோபம் துன்பத்தை உண்டுபண்ணும். எளியவர்மேல் உண்டாகின்ற கோபம் இம்மை மறுமை என்ற இரண்டையும் அழிக்கும். உயர்வை அடைய விரும்புகின்றவன் முதலில் கோபத்தை மறந்து விடவேண்டும். மறவா திருந்தால், அது மனத்தில் இருந்து கொண்டு வருத்தத்தை விளைக்கும். இன்னமும் கோபம் ஒருவன் சிரிப்பையும் சந்தோஷத்தையும் கெடுக்கும். பகையை வளர்த்துப் பாபத்தை அளிக்கும். இரத்தக் கொதிப்பை உண்டுபண்ணும். கோபம் கொண்டவனுக்குக் கண்கள் தெரிவதில்லை. அவன் குருடனிலும் கடைப்பட்டவன் ஆகிறான். எப்படியென்றால், குருடனுக்கு நிதானம் தவறுவதில்லை. கோபிக்குக் கொஞ்சமும் நிதானம் இருப்ப தில்லை. புகழுக்குக் கோபம் பெரிய சத்துரு. அதனை அடைய விரும்புகின்றவன் கோபத்தை மறக்க வேண்டும்.

தன்னைக் கோபத்துக்கு அடிமை யாக்காதவன் சந்தோஷக் கடலில் திளைத்து விளையாடுவான். அவனிடம் அறியாமை இருப்ப தில்லை. எல்லாத் தீயிலும் சினத்தீ மிகவும் கெட்டது. அந்தத்தீ தன்னை வளர்த்தவனுக்கு அதிகமான தீங்கை விளைக்கும். சினத் தீயைச் சாந்தத்தினால் அல்லாமல் பிற கருவிகளால் அணைக்க முடியாது. கோபம் அடங்கினா லன்றிச், சாந்தம் தலை தூக்காது.

தன்னைக் காக்க விரும்புகின்றவன் கோபத்தைக் காக்க வேண்டும். கோபம் தங்களுக்குக் கவுரவம் என்று கொள்வது

கசடர் இலக்கணம். ஒருவன் கோபத்தை மறக்க மறக்க, அவன் மதிப்பு மேலும் மேலும் பெருகும். சாந்தம் உள்ளவனுக்குச் சந்தோஷமும் சமாதானமும் சொந்த மாகின்றன. அவன் விருப்பம் பெறுவதற்கு அரியதானாலும், எளிதில் சித்தி பெறுகின்றது. கோபத்தினால் கெட்டவர் கோடிக்கும் அதிக மாவார்கள். இந்தக் கோபம் சில சமயங்களில் குணக் குன்றனவர்களையும் கூடக் குற்றத்துக்கு உள்ளாக்கி விடுகின்றது.

முன்னர் இக்ஷ்வாகு மகாராஜாவின் புத்திரனாகிய நிமி யரசன் ஏனைய அரசர்களால் செய்வதற்கு அசாத்திய மாகிய ஒரு உயர்ந்த வேள்வியைச் செய்ய விரும்பினான். வேள்விக்கு வேண்டிய பொருள்களைச் சித்தம் செய்த பிற்பாடு, குல குருவாகிய வசிஷ்ட முனிவரைப் பணிந்து, "கீர்த்தி யுள்ளவரே! நான் ஒரு பெரிய வேள்வி செய்ய விரும்பி யிருக்கிறேன்; குலப் பெருமையை வளர்ப்பிப்ப தாகிய அவ்வேள்வியைத் தாங்கள் முன்னின்று முடித்து வைக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். முனிவர் "அரசனே! நான் இந்திரனால் வேள்விக்குக் குருவாக முன்னரே வரிக்கப்பட்டு விட்டேன்; முதலிற் சென்று அதனை நிறைவேற்றி வரவேண்டும்; நீயும் சித்தம் செய்து விட்ட படியினால் வேறொரு குருவைக் கொண்டு வேள்வியை நடத்திவா! விண்ணவர் வேள்வி முடிந்த பிற்பாடு, நான் வந்து கலந்து கொள்கிறேன்" என்று சொல்லித், தெய்வ லோகம் சேர்ந்தார்.

குருவின் கட்டளைப்படி அரசன் கவுதம முனிவரைக் கொண்டு வேள்வியை நடத்தி வந்தான். அவ்வேள்வி முடிவடையும் தருணத்தில் தெய்வ வேள்விக்குச் சென்ற வசிஷ்ட முனிவர் வந்தார். அரசன் தீக்ஷையில் இருப்பதையும், கவுதம முனிவர் யாகம் செய்விப்பதையும் காண, அவருக்குக் கோபம்

உண்டாயிற்று. தாம் முன்னர்க் கட்டளை யிட்டுச் சென்றது அவர் கவனத்துக்கு வரவில்லை. தம்மை நிமி யரசன் அலக்ஷியம் செய்து விட்டான் என்று நினைத்துக்கொண்டு, "துஷ்ட வரசனே! நான் தலைமுறை தலைமுறையாகச் சூரிய வமிசத்துக்குக் குரு ; நெடுங் காலமாக உங்கள் குலத்தையும் உங்கள் பெரியவர்களையும் அநுக்கிரகித்துக்கொண்டு வருகிறேன் ; இன்னமும் நான் பிரமகன் புத்திரன் ; எனக்கு அவமானம் அளிக்கும் பொருட்டாகவே நீ இப்பொழுது வேறொரு குருவை வைத்துக் கொண்டு வேள்வியை நடத்தி வருகிறாய்; நான் இந்த அலக்ஷியத்தை அரைக் கணமும் பொறேன் ; நீ இன்று முதல் உடல் இழந்து அலைகையாகக் கடவாய்" என்று சாபம் கொடுத்தார்.

தீக்ஷையில் இருந்த மன்னவன் "பெருந்தன்மையுள்ளவரே ! தாங்கள் அநியாயமாகச் சபித்திருக்கிறீர்கள் ; நான் தங்களைக் கேட்டுக் கொண்டதற்கு, 'என்னை இந்திரன் விரும்பி யிருக்கிறான் ; நீ வேறொரு குருவை வரித்து, வேள்வியை நடத்திவா! நான் விண்ணவர் வேள்வி முடிந்ததும் வந்து சேருகிறேன்' என்று, கட்டளை யிட்டுச் சென்றீர்கள் ; நான் அதன்படி வேள்வியை நடத்தி வருகிறேன் ; தாங்கள் அநுக்கிரகம் செய்ய வேண்டியது நியாயமா யிருக்கச், சாபம் கொடுத்திருக்கிறீர்கள் ; குற்ற மற்றவனாகிய நான் தங்கள் சாபத்தை அநுபவிப்பது தருமமா யிருக்கும்போது, அக்கிரமமாய்ச் சபித்த தாங்கள் மாத்திரம் அதனை ஏன் அநுபவிக்கலாகாது ? ஆதலால், தாங்களும் என்னைப்போலவே சரீரம் இழந்து வருந்திவாருங்கள்" என்று பிரதி சாபம் கொடுத்தான். அவ்விருவரும் அப்படியே நெடுங்காலம் வரையில் உடல் இழந்து வருந்திவந்தார்கள்.

பிற்பாடு, வனத்தில் தவம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் ஒன்று சேர்ந்து நிமி யாசன் க்ஷேமத்தை நினைத்து, ஒரு யாகம் நடத்தினார்கள். அதில் தேவர்கள் நிமி யாசனுடைய அலைக வடிவத்தை மாற்றி, 'அவன் உயிர்த் தொகுதிகளின் கண்களில் இருந்துகொண்டு, அவை செய்யும் தொழில்களுக்குச் சாக்ஷியா யிருக்கட்டும்' என்று வரம் கொடுத்துப் போனார்கள். அந்தப்படியே மற்றொரு சமயத்தில் நான்முகக் கடவுள் ஊர்வசியின் வயிற்றில் பிறந்து உருவத்தைப் பெறும்படி, வசிஷ்டருக்கு அநுக்கிரகம் பண்ணினார். இருவரும் கோபம் கொண்டு சபித்துக்கொள்ளா திருந்தால், அவ்வளவு காலம் வரையில் கஷ்டங்களை அநுபவித்திருக்க வேண்டா மல்லவா? ஆதலால், எவ்வளவு உயர்ந்தவர்களா யிருந்தாலும் கோபத்துக்கு இடம் கொடுக்க லாகாது. —ஞான வாசிஷ்டம்.

செல்லா விடத்துச் சினம்தீது; செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற.

—(o)—

32— இன்னா செய்யாமை, பரிக்ஷித்து

இது பிற வுயிருக்குக் கெடுதி செய்யா திருத்தல். பிற வுயிருக்கு உபத்திரவம் உண்டுபண்ணுவது கெடுதி யாகும். இன்னா செய்வதற்குக் கோபமும் அறியாமையும் காரணமாகின்றன. ஒருவன் தனக்குக் கெடுதி யென்று தெரிந்த வொன்றைப் பிற வுயிருக்குச் செய்யா திருக்கவேண்டும். அது தான் உண்மை யறிவுக்குப் பயன். பெரியவர் பிற வுயிர்களின் நோயைத்தமக்கு வந்த நோய்போலக் கருதித் துன்ப மடைந்து வருந்துவர். இன்பமும் துன்பமும் எல்லா வுயிருக்கும் பொது. இன்பத்தை விரும்புகின்றவன் துன்பம் செய்ய லாகாது. துன்

பம் தனக்கு எப்படியோ அப்படியே பிறவுயிர்களுக்கும் துன்பத்தைச் செய்யும். இன்னா செய்வதனாலேயே இந்திர பதவி சொந்தமாவதா யிருந்தாலும், பெரியவர் அதனைப் போற்ற மாட்டார்கள். ஒருவன் கோபத்தினால் இன்னா செய்தாலும், அவர்கள் பதில் செய்து மகிழ மாட்டார்கள். இன்னா செய்தவர்களுக்கு அவர்கள் இயற்றும் தண்டனையாவது செய்தவர்கள் வெட்க மடையும் வண்ணம் மிக்க வுதவியை அவர்களுக்குச் செய்து, அவர்கள் செய்த கெடுதியை அப்பொழுதே மறந்து விடுவதாகும்.

புலி முதலிய விலங்கு போலவும், கழுகு முதலிய பறவை போலவும், தீயவர் பிறர்க்குக் கெடுதி செய்வதிலேயே எப்பொழுதும் களிப்புற் றிருப்பார்கள். அறிஞர் அவர்களை மனிதப் பதர் என்று அலக்ஷ்யம் பண்ணிச் செல்வார்கள். பிறர்க்குச் செய்யும் கெடுதி அடுத்த தினத்தில் செய்தவனுக்குத் தவறாமல் வந்து சேரும். பேராசையினால் அறிவுள்ளவர்களும் சில சமயங்களில் இந்தக் குற்றத்துக்கு இலக்காகின்றார்கள். இன்னாப் பயிர் விளைந்து பலன் தரும்பொழுது அவர்கள் அரசு ஆண்மை ஆற்றல் முதலிய அனைத்தும் அலங்கோலமாக அழிந்து போகின்றன. இன்னா செய்தவருக்கு இம்மை மறுமை என்ற இரண்டிடத்திலும் தண்டனை தப்புவ தில்லை. அவர்கள் தங்கள் அறியாமையினால் பிறருக்கென்று பெயரிட்டுக்கொண்டு தங்களுக்குத் தாங்களே இன்னாதவற்றை இழைத்துக் கொள்கிறார்கள்.

ஒரு சமயத்தில் அபிமன்யுவின் புத்திரனான பரீக்ஷித்து மன்னவன் காட்டில் வேட்டைக்குச் சென்றிருந்தான். அப்பொழுது அவன் கண்ணெதிரில் புள்ளி மான் ஒன்று துள்ளி விளையாடிற்று. அரசன் அதனைப் பிடிக்கவேண்டும் என்று, பின்

தொடர்ந்து போனுன். அந்த மான் மன்னவனை நெடுந்தூரம் வரையில் அலக்கழித்துக், கடைசியில் ஒரு புதரில் மறைந்து புகுந்து போய் விட்டது. அரசன் அதன் அழகில் ஈடுபட்டு, எவ்விதத்தி லாவது அதனைப் பிடித்தே தீரவேண்டும் என்று தேடிச் செல்கையில், வழியில் ஒரு முனிவர் தவம்செய்திருந் ததைக் கண்டான். அவர் பெயர் சமீகர். அவர் கண்களை விழித்தபடி நிஷ்டை செய்துகொண் டிருந்தார். அரசன் சமீ பம் சென்று வணங்கி, "முனிவர் பெரும! நான் அத்தின புரத்துக்கு அரசன்; என்னைப் பரிக்ஷித்து என்று சொல்வார் கள்; நான் இங்கு ஒரு மானைத் தொடர்ந்து வந்திருக்கிறேன்; அது இந்தப் பக்கத்தில் வந்திருக்கவேண்டும் என்று, அதன் அடிச் சுவடுகள் அறிவிக்கின்றன; புற்கள் அடர்ந்து மூளைத்தி ருப்பதனுல் அப்பால் அறிந்து செல்லக் கூடவில்லை; தங்களுக் குத் தெரிந்திருந்தால், அதனைத் தெரியப்படுத்துங்கள்" என்று கேட்டான்.

முனிவர் நிஷ்டையில் இருந்தபடியினுல் அரசன் வசனம் செவியிற் படவில்லை. அரசன் அவ்வுண்மையை அறி யாமல் அவர் தன்னை அலக்ஷியம் செய்கிருர் என்று நினைத்து, மன வெறுப்போடு வனத்தில் சென்று விட்டான். நடுவழியில் செத்துப்போன பாம்பொன்று தரையில் விழுந்து கிடந்தது. மன்னவன் அரசச் செருக்கினுலும், விடை பெருத அவமானத்தினுலும், முனிவருக்குத் தீங்கு செய்ய நினைத்து, அந்த இறந்த பாம்பை எடுத்துவந்து, முனிவர் கழுத்தில் மாலை போலப் போட்டுத், திரும்பிச் சென்று விட்டான்.

நிஷ்டையில் இருந்தபடினுல், இரண்டு மூன்று நாட்கள் வரையில் அந்தப் பாம்பு முனிவர் கழுத்தில் அப்படியே கிடந் தது. அடுத்த வனத்தில் தவம் செய்துவந்த அவர் புத்திர

ரான சிருங்கி முனிவருக்கு அந்தச் செய்தியைச் சிலர் சென்று சொன்னார்கள். அம்முனி குமாரர் பரபரப்போடு வந்து, தந்தையின் கழுத்தில் கிடந்த பாம்பைக் கீழே யெடுத் தெறிந்து, தந்தையை அரசன் அவமதித்தான் என்ற கோபத்தினால் 'நிஷ்டையில் இருக்கின்ற என் தந்தையின் கழுத்தில் செத்த பாம்பைச் சுற்றிச் சென்றவன், இன்றைக்கு ஏழாவது தினத்தில் தக்ஷகனால் கடியுண்டு தொலைந்து போவானாக' என்று சாபமிட்டுச் சென்றார்.

அதனை வேறொரு முனிவரால் பரிக்ஷித்து மன்னவன் அறிந்தான். அவன் தருமிஷ்டனும் பாண்டவர்களின் பெயரனுமா யிருந்தும் கூட, அந்தச் சாபத்தை அகற்றிக்கொள்ள முடிய வில்லை. முனிவருக்குச் செய்த தீங்கு தனக்கே வந்து விட்ட தென்பதை அவன் தெரிந்து கொண்டு, அப்பொழுதே ராஜ்ய போகங்களைத் துறந்து, சுக முனிவரால் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டு,நல்லறிவை அடைந்து, அப்படியே தக்ஷகனால் கடியுண்டு உயிரிழந்து போனான். ஆகையால், பிறருக்குக் கெடுதி விளைப்பவர் அதே விதமான துன்பத்தைத் தாங்களும் அநுபவிப்பார்கள். —பாகவதம்.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

—(o)—

33—கொல்லாமை, தசரதர்

பிற வுயிர்களைக் கொல்லுதலைச் செய்யாமைக்குக் கொல்லாமை என்று பெயர். புல் முதல் தேவர்வரையிலும் உள்ள உயிர்கள் அறிவில் ஐந்து வகைப்படும். அவற்றில் ஒன்றையும் கொல்ல லாகாது. கொல்லல் என்பது உயிர் தங்கியிருக்க முடி

யாதபடி உடம்பைக் கெடுத்த லாகும். கொல்லுதலைக் காட்டிலும் இழிவும், கொல்லாமையைக் காட்டிலும் உயர்வும், கிடையாது.உயிர்களைக் கொல்லாதவன் எல்லா அறங்களையும் இயற்றினவன் ஆகிறான். ஒருவன் எல்லாத் தருமங்களையும் எழில்பெறச் செய்திருந்தாலும், கொல்லுதலாகிய கொடுந்தொழில் மாத்திரம் அவனிடத்தில் குடிகொண்டிருக்குமானால், அவ்வறங்கள் யாவும் அடியோடு அழிந்து போய்விடும்.

பிற வுயிருக்குத் தன்னால் இயன்றமட்டும் உதவி செய்ய வேண்டும். அவ்வுதவி இரண்டிடத்துக்கும் இன்பத்தை அளிக்கும். கொல்வது எளிய தாகுமே யன்றிக், கொன்ற வொன்றை முன்னர்ப்போல இயற்றுதல் எவருக்கும் எளிய தாக மாட்டாது.கொல்லப்பட்ட வுயிர் அவ்வுடம்போ டிருந்து அநுபவிக்கும் இன்பங்களுக்கு நாம் இடையூறு விளைப்பதனால் கொலை கொடுங் குற்றம் ஆகின்றது. ஆகவே அதற்குத் தண்டனையும் அதிகமா யிருக்கின்றது.

விரதங்களுக்குள் கொல்லா விரதம் உயர்ந்தது. அதனைக் கொண்டவர் கடவுள் கருணையையும் கைம்மேல் கொள்கின்றனர். கொல்லா விரதிகளைக் கண்டதும், இயமனும் இருக்கை பெயர்ந்துவந்து, அவர்களை இன்சொல் சொல்லி மகிழ்விக்கிறான். தமக்கு ஒரு உயிரால் துன்பம் உண்டாகும் என்று தீர்ப்பாய்த் தெரிந்த விடத்திலும், தூய்மை யுள்ளவர் கொலை செய்யக் கூசுவார்கள். உண்மை நூலை உணர்ந்தவர்கள் வேள்வியை முன்னிட்டுங்கூடக் கொலை செய்ய மாட்டார்கள். கொலை செய்வோனுக்கு இம்மையில் இராஜ தண்டனையும், மறுமையில் தெய்வ தண்டனையும், தவறவே மாட்டா. அவன் மற்றொரு பிறப்பிலும் துக்க நோய்களால் துவக்குண்டு வருந்துவான். கொலை செய்ய ஏவினவன், கொலை செய்தவன்,

கொலைக்குத் துணை நின்றவன், என்ற மூவரும் குற்றவாளி யாகிறார்கள். குவலயத்தை ஆளும் கொற்றவனா யிருந்தாலும், குற்றங்களைக் களைந்த தபசியா யிருந்தாலும், கொலைக் குற்றத்தை அநுபவித்துத்தான் தீரவேண்டும்.

ஒரு சமயத்தில் தசரத மகாராஜர் காட்டுக்கு வேட்டை யாடச் சென்றார். வேட்டைக்காரர்கள் காட்டின் நான்கு பக்கங்களிலும் வலைகளை விரித்தும், புதர்களைத் தட்டியும், நாய்களை ஏவியும், விலங்குகளைக் கிளப்பி, வேட்டைத் தொழிலை விருத்தி பண்ணினார்கள். தசரதர் அன்று பிற்பகல் வரையில் விலங்குகளைக் கொன்றுங்கூட அவருக்கு வெறுப்பு உண்டாக வில்லை. அவர் இன்னமும் விலங்குகளைக் கொல்ல விரும்பிப், பொழுது மறைந்த பிற்பாடு, ஒரு பொய்கையை அடைந்து, அங்கு இரவில் தண்ணீர் பருக வருகின்ற துஷ்ட விலங்குகளைத் தொலைக்கத் தங்கி யிருந்தார்.

அப்பொழுது ஒரு முனி குமாரன் பொய்கையில் இறங்கிக் கமண்டலத்தில் தண்ணீர் மொண்டான். அதனால் உண்டான வொலியை அந்த மன்னவர் யானை தண்ணீர் பருகும் ஒலி யென்று தவறாய் நினைத்துக்கொண்டு, வில்லில் தொடுத்திருந்த சப்தபேதி யென்னும் பாணத்தைப் போக்கினார். அவ்வம்பு முனி குமாரன் உடம்பில் உருவிச் சென்றுவிட்டது. அவன் 'ஐயோ! ஐயோ!' வென்று கூக்குர லிட்டுக் கொண்டு, கரையில் வந்து விழுந்தான். அரசர் அதிகமாய்ப் பயந்து, முனி குமாரனைத் தூக்கியெடுத்துத், தம்மால் முடியுந்தனையும் முயன்று உபசரணை செய்தார். எவ்வளவு செய்தும் அந்தச் சிறுவன் பிழைக்க வில்லை. அவன் தனது மரணத் தறுவாயில் "ஐயா! எனக்குக் காலம் குறுகிவிட்டது; சமீபத்தில் உள்ள குடிசையில் என் தாய் தந்தைகள் இருந்துவருகிறார்கள்;

அவர்களுக்குக் கண் தெரியாது ; இன்னும், என்னைத் தவிர வேறு போஷகரும் இல்லை; அவர்கள் தண்ணீர் வேண்டும் என்று சொன்னபடியினால், இரவென்றும் பாராமல் இங்கு வந்து சேர்ந்தேன்; என் பொருட்டுத் தாங்கள் இந்தத் தண்ணீரை அவர்களுக்கு எடுத்துச் சென்று கொடுங்கள்" என்று சொல்லி இறந்தான்.

தசரதர் அந்தச் சிறுவன் மரணத்துக்கு வருந்தி, அவன் கேட்டுக்கொண்டபடி தண்ணீரை எடுத்துக்கொண்டு அவன் தாய் தந்தைகள் இருந்த தழைக் குடிசையை அடைந்தார். அந்தகர்களான அவ்விருவரும் தண்ணீருக்குச் சென்ற தங்கள் மகன் வரவில்லையே யென்று, தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். தசரதர் தண்ணீரைக் கொடுத்து நடந்ததை நவின்று, 'தன்னை மன்னிக்கவேண்டும்' என்று வணங்கினார்.

அந்தத் தம்பதிகள் புத்திரன் பொருட்டுப் புலம்பியழுது, "அரசனே! உன் தேற்றரவும் உபசாரணையும் எங்கள் இறந்த மகனை எழுப்பித் தரமாட்டா ; பிறவிக் குருடர்களான எங்களைப் போஷித்து வந்தவன் பொன்றிப்போனபடியினால், நாங்களும் அவனைப் பின்பற்ற வேண்டியதுதான்; எங்கள் மரணத்தைப் போலவே உனக்கும் புத்திர சோகம் பிராணமாயிருக்கட்டும்" என்று சொல்லி, இருவரும் மரண மடைந்தார்கள்.

தசரதர் மனம் வருந்தி அயோத்திக்குத் திரும்பினார். நெடுங்காலம் கழித்து அவருக்கு இராமன் பரதன் இலக்ஷ்மணன் சத்ருக்னன் என்று நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் கல்வி கற்று மணம் செய்துகொண்ட பிற்பாடு, தசரதர் இராமனுக்கு இராஜ்யம் தர விரும்பினார். அவ்விருப்பம் நிறைவேற வில்லை. முடிவில், இராமன் வனத்துக்குப் போய்

விட்டான். தசரதர் இராமன் பிரிவினால் உண்டான புத்திர சோகத்தினால் அப்பொழுதே மரண மடைந்துபோனார். வனத்துக்குச் சென்று மிருகங்களை வலியக் கொன்றதனாலல்லவா அவர் மரணத்துக்குப் புத்திர சோகம் பிரதான மாயிற்று? ஆகையால், பிற வுயிர்களைக் கொல்கின்றவர்களுக்குப் பெரிய தீங்குதான் உண்டாகும். —இராமாயணம்.

அறவினை யாதெனின் கொல்லாமை ; கோறல்
பிறவினை யெல்லாம் தரும்.

—(o)—

34—நிலையாமை, இரணியன்

நிலையாமை என்பதற்கு நிலத்தில் பிறந்த வெல்லாம் அழியும் என்பது பொருள். உலகமும் உலகப் பொருள்களும் அழியும் தன்மையை உடையன. உலகப் பொருள் என்றால், உயிர் வர்க்கமும் அடங்கும். பொருள் முதலியவற்றை நிலை யென்று கருதுவது அறியாமையே யாகும். நாடக சாலையின் கூட்டம்போலச் செல்வத்தின் வரவும், நாடகம் முடிந்ததும் கூட்டம் கலைவதுபோல அதன் அழிவும் இருக்கின்றன. நம் வாழ் நாட்களைச் சூரியன் என்னும் கூரிய வாளைக் கொண்டு காலன் என்பவன் கொஞ்சம் கொஞ்சமாக அன்றாடம் அறுத்துக், கொண்டு சென்று விடுகிறான். எவருக்கும் சென்ற நாட்களைக்கணக்கிட்டுச் சொல்லமுடியுமே யன்றி, நின்ற நாட்களை அங்ஙனம் சொல்ல முடியாது. சென்ற நாட்களில் பெரும் பாகமும் இன்ப துன்ப வடிவங்களாகிய உலகப் போராட்டத்திலேயே ஒழிந்து போகின்றன.

உலகம் 'நேற்று நன்றா யிருந்தான்; இன்று இறந்து போய்விட்டான்' என்பதனைத் தனக்கு ஒரு பெரிய பெருமை

யாய்ப் பூண்டிருக்கின்றது. உடம்பும் உயிரும் வெளித் தோற்றத்துக்கு ஒற்றுமை யுள்ளதா யிருந்தாலும், உண்மையில் அப்படி யிருக்க வில்லை. முட்டைகளில் உருவம் அடையப் பெற்று, வெளியில் வந்த பிற்பாடு, அவ்வோட்டைப் பாராமலும் போகின்ற பறவைப் பார்ப்புக்களைத் தினமும் பார்த்து வருகிறோம். உயிருக்கும் உடலுக்கும் உள்ள வொற்றுமை அவற்றிலும் அதிகமா யில்லை. அவைகளே அப்படி யாகுமானல், நம்மில் முற்றிலும் வேறான உலகப் பொருள்களின் மீது எங்ஙனம் உறவு பாராட்ட முடியும்?

பொருளைப் பெற்றவன் அதனைக் கொண்டு செய்யும் அறத்தை அப்பொழுதே செய்துவிட வேண்டும். அறிவற்றவர்கள் தம் நிலைமைக்குப் பொருந்தாதவற்றில் பேராசை பூண்டு, பதைத்து வருந்து வார்கள். தம் முயற்சிக்குக் கிடைத்த மட்டில் களிப் படைந்து, கடவுளை விரும்பித் தருமம் செய்ய வேண்டும். உலகத்தில் இருப்பது பொய்யும், இறப்பது மெய்யும் ஆகின்றபடியினால், ஒருவன் அறத்தை அருமையாய் மதிக்கவேண்டுமே யன்றி, உடம்பையும், உலகப் பொருள்களையும், உயர்ந்த தென்று உணரக் கூடாது.

முன்னாளில் இரணியன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் திதியின் வயிற்றில் காஸ்யப முனிவருக்குப் பிறந்தவன். அவன் சகோதரனை ஸ்ரீ மகா விஷ்ணு வாரகாவதாரம் செய்து கொன்றுவிட்ட படியினால், தான் என்றும் இறவாமல் இருக்கவேண்டும் என்று, நான்முகக் கடவுளை நினைந்து தவம் செய்து வந்தான். பின்னர் அவன் விருப்பத்தின்படி அந்தக் கடவுள் வந்து, அவனுக்குப் பகலிலும் இரவிலும், தேவர் மனிதர் முதலான எழுவகைப் பிறப்புக்களினாலும்,

ஆயுதங்களினாலும், மரணம் உண்டாகா திருக்கும்படி வரம் கொடுத்து மறைந்தார்.

அவ்வசுரன் வரம் பெற்ற பிற்பாடு, கருவம் கொண்டு அமரர்களையும் அந்தணர்களையும் வருத்தி, அவர்கள் செய்யும் காரியங்களைக் கெடுத்தும், கெடுப்பித்தும் வந்தான். அவன் ஆளுகையில் எவரும் பாஞ்சஜன்யன் பெயரைப் பகிரங்கமாய்ப் புகலக் கூடாது. அவன் திருமாலின்மீது என்றும் தீராத துவேஷம் வைத்திருந்தான். மூன்று உலகங்களிலும் அவன் கட்டளை மதிப்படைந் திருந்தது. இந்திரன் அக்னி முதலான திக்குப் பாலகர்கள் அவனுக்குக் குற்றேவல் புரிந்து காலம் கழித்து வந்தார்கள். வரத்தின் மகிமையினால் அசுரன் பலவிதமான வடிவங்களை எடுத்துக்கொண்டு, எல்லா வுலகங்களிலும் இஷ்டப்படி சஞ்சரித்து வந்தான். உதயகிரி அஸ்தமன கிரி யென்ற இரண்டு மலைகளும் அவன் செவிக்குக் குண்டலங்களா யிருந்தன. கற்பில் மிகுந்த லீலாவதி யென்பவள் அவனுக்கு மனைவி. அவள் வயிற்றில் பரம பாகவதனான பிரஹ்லாதன் என்பவன் புத்திரனாய்ப் பிறந்தான்.

இரணியன் தனக்கு மரணம் கிடையாதென்று மதித்திருந்த படியினால், தேவர்களையும் மனிதர்களையும் தன்னையே கடவுள் என்று கொண்டாடி வரும்படி கட்டளையிட்டிருந்தான். எல்லா யாகங்களும் அசுரனைக் குறித்தே ஆரம்பிக்கப்பட்டன. பள்ளிப் பிள்ளைகள்கூட முதலில் 'ஹிரண்யோந நமஹா' என்றுதான் ஆரம்பம் செய்யவேண்டும். சரித்திரங்களும் பாடப் புத்தகங்களும் அசுரர்களின் வீரச் செயல்களையே அதிகமாய்ச் சொல்லத் தொடங்கின.

சில வருஷங்களில் பிரஹ்லாதன் கல்விப் பருவத்தை அடைந்தான். சுக்கிரபகவான் புத்திரர்களான சண்

டன் அமர்க்கன் என்ற இருவரும் அவனுக்கு ஆசிரியரானார் கள். பிரஹ்லாதன் அவர்கள் உபதேசத்தை அங்கீகரியாமல், முதலிலேயே 'ஓம் நமோ நாராயணாய' வென்று சொல்லத் தொடங்கினான். உபாத்தியாயர்கள் நயத்திலும் பயத்திலு மாக அவனைத் திருப்ப முயற்சித்தார்கள். அவன் வசப்பட வில்லை. அப்புறம் ஆசிரியர் அவன் அநீதத்தை அசுர சக்ரவர்த் திக்கு அறிவித்தார்கள். அவன் பிரஹ்லாதனை விசாரித்த பொழுது உண்மை வெளியாயிற்று. இரணியன் கோபித்துக் கொண்டு பிரஹ்லாதனுக்குப் பலவிதமான தண்டனைகளை விதித்தான். கடவுள் கருணையினால் அவை எல்லாவற்றையும் பிரஹ்லாதன் எளிதில் நீக்கிக்கொண்டு விட்டான்.

பின்னர் இரணியன் ஒரு நாள் மனம் புழுங்கிப் புத் திரனை நோக்கித், "துஷ்டச் சிறுவனே! உன் அக்கிரமங்களைப் பொறுக்க முடியவில்லை; எனக்கு மரணம் கிடையாது; நான் எல்லா உலகத்திலும் கடவுளாய்ப் பிரகாசித்து வருகிறேன்; என் எதிரில் வரப் பயந்து, மறைந்த வண்ணமே நின்று, உன் னைத் தூண்டிவருகின்ற அந்தத் திருமால் எங்கேயிருக்கிறான்? அவனை எனக்குக் காட்டு; இல்லையேல், இந்த வாளினால் உன்னை இப்பொழுதே குத்திக்கொன்றுவிடுவேன்" என்றுசொன்னான்.

பிரஹ்லாதன் " தந்தையே! கடவுள் ஒருவர்தாம் இற வாமல் இருப்பவர்; அவர் அற்புத சக்தியை நம்மால் அறிய முடியாது; அவர் எள்ளுக்குள் எண்ணெய்போல, எல்லா வீடங் களிலும் நிறைந் திருக்கிறார்; தாங்கள் விரும்புகின்ற ஒவ்வோரி டத்திலும் கடவுளைக் காணலாம்; அவர் அப்படி வெளிப்படா மற்போனால், என்னை நானாகவே மாய்த்துக்கொள்ளுகிறேன்; இஃது உண்மையான மொழி" என்று சொன்னான். இரணியன் கோபங்கொண்டு, தன்னெதிரில்இருந்த ஒரு கற்றூணைக் காட்டி,

'இதில் கமலைக் கேள்வனைக் காண்பிக்க முடியுமா?' என்றதற்குப், பிரஹ்லாதன் 'பரிக்ஷித்துப் பாருங்கள்! கட்டாயம் காணப்படுவார்' என்று சொன்னான். உடனே இரணியன் தன் வெற்றி வாளினால் கற்றூணைத் தாக்கினான். திருமால் அந்தத் தூணிலிருந்து நரசிங்க வடிவமாகி வந்து, தம் கைந் நகங்களினாலேயே இரணியன் மார்பைப் பிளந்து கொன்று விட்டார். இரணியன் தன் உடல் பொருள் முதலியவற்றை நிலைத்திருப்பவை யென்று எண்ணி யிராவிட்டால், அப்படி இறந்திருக்க வேண்டாம் அல்லவா? ஆதலால், நிலையற்றனவாகிய உடலையும் உலகப் பொருள்களையும் நினைந்து, எவரும் கருவப்பட லாகாது. பாகவதம்.—

நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

—(o)—

35—துறவு, பட்டினத் தடிகள்

உடல் பொருள் முதலியவற்றின்மேல் உள்ள ஆசையை விடுதலுக்குத் துறவு என்று பெயர். ஒருவனை ஆசை நெருங்க நெருங்கத், துன்பமும் நெருங்கிப் பிடிக்கும். ஆசை கொடிய பிசாசைப் போன்றது. அதற்கு அடிமை யானவன் துன்பத்தையும் துயரையும் அல்லாமல் வேறு ஒன்றையும் அடைவதில்லை. ஆசையைத் தனக்கு அடிமையாய்க் கொண்டவன் உலகத்தையும் தனக்கு அடிமையாய்ப் பெற்றுக்கொள்கிறான். இம்மை மறுமை என்ற இரண்டிடத்திலும் இன்பத்தை விரும்புகின்றவன் முதலில் ஆசையை ஒழிக்கவேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற ஐம்புலன்களின் வழியாகவும் ஒருவன் மனத்தில் ஆசை குடி புகுகின்றது. ஆசை எரியும்

நெருப்பை ஒத்தது. உலகமும் உலகப் பொருள்களும் அதற்கு விறகுகள். விறகு தொலைந்தா லன்றி, நெருப்புக்கு விருப்பம் அடங்குவ தில்லை. ஆசை யின்மையை அப்பியசிப்பதற்கு வன வாழ்க்கை இன்றியமையாதது. ஏனென்றால், ஆசையைத் தூண்டுவதற்கு ஆதாரமான நாகரிகமும் நாகரிகப் பொருள்களும், வனத்தை விரும்புவ தில்லை. பெரியவர்கள் வன வாழ்க்கையை விரும்பி யடைவதற்கு அதுதான் மூதற் காரணம்.

ஒருவனுக்கு அகப் புறப் பற்றுக்கள் அடியோடு தொலைந்தா லன்றிக், கடவுள் உலகம் கைகூட மாட்டாது. முற்றத் துறந்த முனிவர்களுக்குத் தங்கள் உடம்பும் பொறுத்தற்கரிய பாரமா யிருக்கும். பிறப்புஅறுவதற்குத் துறவைக்காட்டிலும் துணை செய்வது வேறு கிடையாது. கடவுள் பக்திகூட ஒருவிதமான ஆசையில் அடங்கு மானாலும், அஃது உலக வாசையைப்போல உபத்திரவத்தை உண்டுபண்ணாத படியினால், உயர்ந்ததாக மதிக்கப்படுகின்றது. இன்னும் அவ்வாசை, ஒருவன் கடவுளை அடையும் வரையிலும் இருந்து, அடைந்த பிற்பாடு, அடியோடு அழிந்து போய் விடும். துறவுக்கு அறிவும் விரக்தியும் அவசியமானதே யன்றி, வயதும் பருவமும் அவசியமான தன்று.

முன்னாக் காவிரிப்பூம் பட்டினத்தில் சிவநேச குப்தர் என்றவருக்குத் திருவெண்காடர் என்று ஒரு புத்திரர் பிறந்தார். அவர் தமது சிறு பருவத்திலேயே தந்தையின் அளவிட முடியாத செல்வங்களை யெல்லாம் சிவனடியார்களின் பொருட்டுச் செலவு செய்யத்தொடங்கினர். அவர் ஒரு சமயத்தில் சிவசன்மா சுசீலை என்ற அந்தண தம்பதிகளால் கொணர்ந்து கொடுக்கப்பட்ட ஒரு இளங் குழந்தைக்கு அதன் எடையுள்ள பொன்னை விலை கொடுத்து வாங்கி, அதற்கு மருதப் பிரான்

என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். அந்தக் குழந்தை ஐந்து பருவம் வரையில் வளர்ந்து, திருவெண்காடருக்கு ஒரு பெட்டியைக் கொடுத்து மறைந்து போய்விட்டது. பெட்டியில் ஒரு காதற்ற ஊசியும் ஒரு ஓலைச் சுருளும் இருந்தன. திருவெண்காடர் அவ்விரண்டையும் கண்டு, உலகப் பற்றில் வெறுப்புக் கொண்டு தம் பொருள் எல்லாவற்றையும் சிவ னடியாருக்குத் தானம் செய்துவிட்டுத், துறவறம் பூண்டு பிச்சை யெடுத்து உண்டு ஊரூராகத் திரிந்துகொண் டிருந்தார்.

சில நாளைக்குப் பிற்பாடு, திருவெண்காடர் தாயார் சிவ பதத்தை அடைந்தாள். உறவின் முறையார் வந்து பிணத்தை மயானம் கொண்டு சென்று, நெருப்பிட்டுத் திரும்பினார்கள். திருவெண்காடர் அதனை அறிந்து சென்று, அவர்கள் அடுக்கிய விறகை அப்புறம் தள்ளிவிட்டு, வாழைத் தண்டுகளையும் வாழை மட்டைகளையும் அடுக்கித், தாயாரை அதன்மேல் கிடத்தி,

"முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே."

என்று ஒரு பாட்டைச் சொல்லித், தகனம் செய்து திரும்பினார். அதற்குப் பிற்பாடு, அவர் காவிரிப்பூம் பட்டினத்துக்குத் திரும்பவே யில்லை. அவர் சோழநாட்டில் உள்ள சிவ தலங்களை யெல்லாம் தரிசனம் செய்துகொண்டு, உஜ்ஜயினிக் காட்டில் நிஷ்டை கூடியிருந்தார்.

அப்பொழுது அந்நாட்டுக்குத் தலைவனாகிய பத்திரகிரி யரசன் காவலர் சொல்லைக் கொண்டு, திருவெண்காடர் களவு செய்தார் என்று, அவரைக் கழுவில் ஏற்றக் கட்டளை

யிட்டுவிட்டான். திருவெண்காடர் 'என்செயலா லாவதி யாதொன்று மில்லை' என்னும் செய்யுளைச் சொன்னதும், அந்தக் கழுமரம் நெருப்புப் பற்றி யெரிந்துபோயிற்று. அவ்வற்புதத்தைக் கேட்ட பத்திரகிரி மன்னவன் திருவெண்காடரைச் சரணம் அடைந்து, தன்னை அநுக்கிரகிக்கும்படி வேண்டினன். அடிகள் அவனை அங்கீகரித்து, 'நீ திருவிடை மருதூரில் சென்றிரு; நான் அங்கு வந்து சேருகிறேன்' என்று, கட்டளை யிட்டு, அப்பாற் சென்றுவிட்டார். அரசன் அப்பொழுதே சந்நியாசி யாகி அவ்விடத்துக்குச் சென்று பிச்சை யெடுத்து உண்டு, காலம் கழித்துவந்தான். திருவெண்காட்டடிகள் சில நாட்களில் திருவிடை மருதூருக்கு வந்தார். அப்பொழுது ஒரு எளியவன் வந்து, அடிகளைப் பிச்சை கேட்டான். அடிகள் 'எனக்கு இந்தக் கோவணமே பெரும் பாரமா யிருக்கின்றது; மேலைக் கோபுர வாயிலில் குடும்பி யொருவன் இருந்து வருகிறான்; நீ அவனைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு போ!' என்று, சொல்லி யனுப்பினார். அவ்வெளியவன் பத்திரகிரி யரசனைக் கண்டு அடிகள் சொன்னவற்றைச் சொல்லலும், அரசன் வெட்க மடைந்து, 'இந்தக் குக்கலும் சட்டியும் இருந்து என்னைக் குடும்பி யாக்கினபோலும்' என்று சொல்லிச், சட்டியை உடைத்துப் போட்டு, நாயைத் துறத்திவிட்டுத், தானும் அப்பாற் சென்றுவிட்டான்.

பிற்பாடு, பட்டினத் தடிகள் அவ்வரசனுக்கு உபதேசம் செய்து திருவண்ணாமலையை அடைந்து, அங்கிருந்து திருவொற்றியூருக்கு வந்து, சோதியிற் கலந்துபோனார். அவர் உலகத்தில் இருக்கும் வரையில் தாமரை யிலையின் தண்ணீரைப்போல ஒன்றிலும் ஒட்டாமல் இருந்து, சென்ற சென்ற இடங்கள் தோறும் அற்புதத் திருவிளையாடல்களைச் செய்து

கொண்டு, அனைவருக்கும் சரியான மார்க்கத்தில் துறவறத்தை அநுஷ்டித்துக் காட்டினார். அவரைப்போல உலகப் பற்றை உண்மையில் துறந்தவர்கள் பேரின்ப வீட்டை அடைவார்கள்.

திருவெண்காடர் சரித்திரம்.—

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனி னதனின் இலன்.

—(ப)—

36—மெய்யுணர்தல், சரபங்கர்

உண்மை யுணர்தலாவது உண்மைப் பொருளை உள்ளபடி உணர்ந்து கொள்ளுதலாம். பொய்ப் பொருள் மெய்ப் பொருள் என்று பொருள்கள் இருவகை யாகும். பொய்ப் பொருள் அழியும் தன்மை யுடையது. மெய்ப்பொருள் அழியாத் தன்மை யுடையது. கயிற்றில் தோன்றும் அரவையும் பேய்த் தேரையும் போலப், பொய்ப் பொருள் முடிவு வரையில் மெய்யே போலத் தோன்றி, மூடர்களின் அறிவை மயங்க வைத்து மகிழும். உண்மை நூல்களாலும், குருவின் உபதேச மொழிகளாலும், பொய்ப் பொருளினுடைய பொய்ம்மைத் தன்மையைத் தெரிந்து தெளியவேண்டும். பொய்ப் பொருளின் மயக்கம் பொன்றித் தொலைந்தா லன்றி, அஞ்ஞான விருள் நீங்கி ஞானச்சுடர் விளங்காது. மெய்ப் பொருளின் தன்மையையும், அதனை அறியும் வழிகளையும், ஒருவன் உள்ளத்தில் உணர்ந்து அறிந்திருந்தால், பிறப்பு நீங்கிப் பேரின்பம் நுகர்வான். எப்படியென்றால், விளக்கைக் கொளுத்திய மாத்திரத்திலேயே இருள் மறைந்து போவதுபோலப், பிறப்பு நீங்கின மாத்திரத்திலேயே வீட்டின்பம் விரும்பித் தொடருகின்றது.

ஐம்பொறிகளையும் வருத்தி அடக்கினதற்குப் பயன் உண்மைப் பொருளை உணருதலே யாகும். ஒருவன் உலகத்திலும் உலகப் பற்றிலு மிருந்து விடுபடுதலையே பெரியவர் மோக்ஷம் என்று மொழிவார்கள். இந்திரன் முதலிய இறையவர்ப் பதங்களும் அழிந்துபோவன வாதலால், உண்மை ஞானத்தை உணர்ந்தவர்கள் பொன்னுட்டுப் போகங்களையும் பொருள் என்று கருத மாட்டார்கள். அவர்கள் விரும்புவது அழிவில்லாத தத்துவப் பொருள் ஒன்றே யொன்றுதான். சூரியன் முன்னர் எல்லாக் கிரகங்களும் சுடர் மழுங்கி மறைவது போல, உண்மைப் பொருளால் உண்டாகின்ற இன்பத்தின் முன்னர்ப் பிற வின்பங்கள் தலைதூக்குவதில்லை.

முன்னர்த் தண்டகாரணியத்தில் சரபங்கர் என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தமது குலவொழுக்கத்தைக் கடைப்பிடித்துச், செந்தீ வளர்த்துச் செழுந் தவம் செய்து வந்தார். உலகப் போராட்டத்தில் அவர் தலையிடுவதே யில்லை. காட்டில் முயற்சி யின்றிக் கிடைக்கின்ற காய் கனி கிழங்குகளைக்கூட அவர் அதிகமாய்க்கொள்ளமாட்டார். பசி தணிவதற்கு மாத்திரம் பகலில் சிறிது கொண்டு, எப்பொழுதும் ஈசுவரத் தியானத்தில் இருந்து மகிழ்ந்து வருவார். அவர் கண்கள் இயற்கைப் பொருள்களின் இனிய காட்சியில் களிக்கும். செவிகள் ஞான நூற் பொருள்களைக் கேட்கும். வாய்கள் ஆதியந்த மில்லாமல் சுயம்புவா யிருக்கின்ற பராபர வஸ்துவின் புகழ்களைப் பேசும். கை கால்முதலான மற்றையவுறுப்புக்கள் உயிர்களுக்கு நேரிடுகின்ற துன்பம் துயர்களைக் கண்டு துடைக்கும். மனம் பரம் பொருளினுடைய ஞான வடிவத்தை நாடி யின்புறும்.

இங்ஙனம் அந்த முனிவர் தமது உடல் பொருள் ஆவி யென்ற மூன்றினையும் உண்மை வழியில் உபயோகித்துக் கொண்டு வந்தார். அவர் தமக்கு வேண்டும் என்று ஒன்றை யும் விரும்புவ தில்லை. மலைப் பாம்புகள் இடம் விட்டுப் பெயரா மலேயே கிடைத்தவற்றை அருந்திக் களிப்படைவதுபோல, அம்முனிவரும் ஆச்சிரமத்தில் இருந்துகொண்டு கிடைப்பவற் றை உண்டு சமாதியில் கலந்து சந்தோஷித்திருப்பார். எல்லாத் தெய்வ லோகங்களிலும் அவர் பெரும்புகழ் பரந்து விளங்கிற்று.

ஒரு சமயத்தில் இந்திரன் தேவர்கள் புடைசூழச் சரபங் க முனிவர் ஆச்சிரமத்துக்கு வந்தான். முனிவர் அவனுக்கு மரியாதை செய்து, வந்த காரியத்தை வினவினர். இந்திரன் "பூஜ்யரே! என்னை நான்முகக் கடவுள் அனுப்பினர்; சத்திய லோகம் முதலாகிய தெய்வ பதங்கள் யாவும் தங்கள் வரவைப் பார்த்து நிற்கின்றன; தெய்வப் பெண்கள் பாரிஜாதம் கற்பகம் முதலான மலர் மாலிகைகளைக் கையிற்கொண்டு, 'நான் முன் னே நான் முன்னே' யென்று, தங்கள் வரவுக்குப் போட்டி செய்கிறார்கள்' தெய்வ லோகங்களில் தாங்கள் இஷ்டம் வந்த படி இருந்து சஞ்சரிக்கலாம்; விரும்பின சுகங்களை வேண்டின படி அநுபவிக்கலாம்; எல்லாத் தேவர்களும் தங்களுக்குப் பணிவிடை செய்யச் சந்தோஷமடைகிறார்கள்; உயர்ந்த யாகத் தினாலும், ஒப்புயர்வற்ற தானத்தினாலும், சாதிக்க முடியாத பதங்களை யெல்லாம் தாங்கள் ஞானத்தினால் எளிதில் சாதித் துக்கொண்டு விட்டீர்கள்; பிதாமகரால் அனுப்பப்பட்ட விமா னம் வெளியில் வந்து நிற்கின்றது; தாங்கள் எழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

சரபங்க முனிவர் சிரித்துக்கொண்டு, "இந்திரனே! நான் பிதாமகருக்கு வந்தனம் செய்கிறேன்; நான் அநேக வருஷங்

களாக ஞான யோகத்தை அப்பியசித்து வருகிறேன்; அழிந்துபோகும் தன்மை யுள்ள அமரர் பதங்களில் நான் ஒன்றையாவது அபேக்ஷிக்க வில்லை; ஜனன மரணங்களைக் கடந்ததும், உயர்வற வுயர் நல முடையதும், மயர்வறு மதிநலம் அருளுவதுமான வீட்டுலகம் ஒன்றையே விரும்பி நிற்கிறேன்; அந்தப் பெரும் பதவி உங்களால் தரத்தக்க தன்று; நீ உன் இருப்பிடத்துக்குச் செல்; அதனை அடையும்படியான காலத்தில் நான் அடைந்து சுகித் திருப்பேன்" என்று, சொல்லி யனுப்பினார். இந்திரன் மிகவும் நாணி, முகம் கவிழ்ந்த வண்ணம் விடை பெற்றுக்கொண்டு போனான்.

அடுத்த நிமிஷத்தில் தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரராகிய ஸ்ரீ ராமசந்திரர் இலக்ஷ்மணனோடு அவ்வாச்சிரமத்துக்கு வந்தார். சரபங்க முனிவர் அவ்வரிய சகோதரர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரணைகளைச் செய்து, இந்திரன் செய்தியைச் சொல்லி, "ஒழுக்கம் உள்ளவர்களே! என் தவம் பயன் பெற்றது; உங்கள் வருகையை நினைத்துத் தான் இந்த ஆச்சிரமத்தில் நான் இத்தனை காலமாக இருந்து வருகிறேன்; நான் வீட் டுலகத்தை விரும்பி நிற்கிறேன்; கிடைத்தற் கரிய உங்களுடைய உயர்ந்த தரிசனத்தினாலேயே அஃது எனக்கு எளிதில் கிடைத்து விட்டது; கொழுந்து விட்டு எரிகின்ற இந்த வைதிகாக்னியில் என் தேகத்தைத் தகிக்கப்போகிறேன்; இருவரும் அதுவரையில் இங்கேயிருந்து செல்லுங்கள்" என்று கூறி, அப்பொழுதே நெருப்பில் இறங்கி, ஞான வீட்டைச் சேர்ந்தார். அவரைப் போன்ற உண்மை ஞானிகள் தெய்வ பதங்களை விரும்பாமல், எப்பொழுதும் வீட்டுலகத்தையே விரும்பி நிற்பார்கள்.

—இராமாயணம்

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி.

——(०)——

37—அவாவறுத்தல், பரதயோகி

அவா அறுத்தலாவது மனத்தின்கண் தோன்றும் ஆசை முளையை அடியோடு கெடுத்த லாகும். அவா - ஆசை. ஆசை எல்லா உயிர்களுக்கும் பிறப்பைத் தருவதாகிய ஒரு கொழுத்த விதை. அவ்விதை ஆரம்பத்தில் மிகவும் அற்ப முள்ளதா யிருக்கும். அது மனத் தோட்டத்தில் மிருதுவாகப் பதிந்து, ஐம்புலன் என்னும் தோட்டக்காரர்கள் களை கொத்தல், எருவிடல், தண்ணீர்ப் பாய்ச்சல், வேலி யமைத்தல், காவல் காத்தல் முதலான பணிவிடைகளைச் செய்து போஷிக்க, வேரூன்றி வளரும். ஆசையின் வளர்ச்சி முதலில் நிதான மானது. அப்புறம், இனி உலகத்தில் இல்லை யென்னும்படியான உயரமாகச் சீக்கிரத்தில் வளர்ந்து, தோட்டம் முழுவதும் நிழல் செய்து, வேறு எவ்விதமான விதைகளும் மனத் தோட்டத்தில் முளைத்துப் பலன் தராவண்ணம், அந்தத் தோட்டத்தை அடியோடு அழித்து நாசம் செய்துவிடும். உயர்ந்த ஞானிகளின் விருப்பம் எப்பொழுதும் பிறவாத் தன்மையே யாகும். அவ்வரம் அவா வின்மையாற்றான் கிடைக்கவேண்டும்.

துறவியின் தூய மனத்தைக் கலைத்து, அவனை உலக வாழ்க்கையில் உழல வைப்பதற்கு அவா ஆசிரியன் போன்றது. இன்னும் அவ்வாசை, பிளேக்கு அம்மை முதலான தொத்து நோய்களைப் போலத், தொடர்ந்து துன்பம் செய்யும். அவாமுளை அடியோடு அழிந்து போனாலன்றி, வீட்டின்பம்

விளைய மாட்டாது. ஆதலால், துறவி குடும்பி என்ற இரு வகையாருக்கும் ஆசை மூளை அநர்த்தத்தைத் தரும். ஆசையினை ஒருவன் அப்பியாசத்தினுல்தான் நீக்கிக்கொள்ள வேண்டும். அப்பியாச மாவது உண்மை நூல்களை உணர்தல், உணர்ந்தவற்றில் ஒழுகல், மனத்தைப் பலவழியிலும் புகவொட்டாமல் மடக்கிக், கடவுளின் கழலில் களிப்புறச் செய்தல் முதலியனவாம்.

ஆதி காலத்தில் விருஷப தேவருக்கு ஜயந்தியின் வயிற்றில் பிறந்த பரத சக்ரவர்த்தி இந்தப் பரந்த வுலகத்தைப் பரிபாலித்துக்கொண்டு வந்தார். அவர் ஆளுகையில் நெருப்பினுலாவது காற்றினுலாவது நோயினுலாவது உயிர்கள் அகாலத்தில் மரண மடைந்த தில்லை. அவர் பரிபாலித்து வந்த பாகத்துக்குத்தான் பரத கண்டம் என்று பெயர். அவர் மிக நீண்டகாலம் வரையில் உலகத்தில் நீதி செலுத்தி வந்தார். பிற்பாடு, விரக்தி மேலிட்டுத் துறப்பதற்கு அரிய எல்லாச் செல்வங்களையும் துறந்து, புலக முனிவரிடத்தில் உபதேசம் பெற்றுப் பெருந்தவம் செய்யத் தொடங்கினுர். அவர் ஆச்சிரமம் கண்டகி நதிக் கரையில் இருந்தது.

ஒருநாள் அவர் நீராடுவதற்கு நதிக்குச் செல்லும் பொழுது ஒரு பெரும் புதரில் மறைந்து கொண்டிருந்த புலியொன்று பயங்கரமாய்க் கர்ஜ்ஜித்தது. பூர்ண கர்ப்பமாயிருந்த பெண் மான் ஒன்று புனல் பருக வரும்பொழுது அந்தத் தொனியைக் கேட்டுப் பயந்து, கரு வுயிர்த்து இறந்துபோய் விட்டது. ஸ்நானத்துக்குச் சென்ற பரதர் பரிதாப நிலையில் இருந்த அம்மான் குட்டியை எடுத்து வந்து, அதற்கு ஆகாரங்களைக்கொடுத்து ஆதரித்துவந்தார். அம்மான்குட்டி வளர்ந்து, அவரை விட்டுப்பிரியாமல் ஒரு நன்றி யறிவுள்ள நாயைப்போல

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

அவர் எங்குச் சென்றாலும் விடாமல் தொடர்ந்துகொண்டிருந்தது. இன்னும், அம்மான் குட்டி பரதர் நிஷ்டை செய்யும் பொழுது எதிரில் கால்களை நீட்டிப் படுத்து, அவரையே விடாமல் பார்த்துக்கொண்டிருக்கும்; அவர் விழித்திருக்கும் பொழுது, மடியில் உட்கார்ந்தும், உடம்பை நக்கியும், துள்ளிக் குதித்தும் சந்தோஷப்படுத்தி மகிழும். பரத முனிவர் மான்குட்டி தம்மேல் வைத்திருக்கின்ற பக்ஷத்துக்கு மகிழ்ந்து, தாமும் அதனை நேசிக்கத் தொடங்கினார்.

அப்புறம், அவருக்கு நிஷ்டையில் இருக்கும் பொழுது கூட அம்மான் குட்டியை மறக்க முடியவில்லை. மிகவும் பெரிய ராஜ்யத்தைத் திரும்பியும் பாராமல் துறந்து விட்டவருக்கு மான் குட்டியின் விருப்பம் மாத்திரம் மறக்க முடியாமற் போயிற்று. மேயச் சென்ற மான்குட்டி சற்று நேரம் வரையில் வராமல் இருந்துவிட்டால், அதற்கு என்ன வருத்தம் விளைந்ததோ, வென்று, அது வரும் வழியைப் பலகாலும் பார்த்து வருந்துவார். தமக்குப் பிற்பாடு, மானைக் காப்பாற்றுகின்றவர் யாவரென்று சில சமயங்களில் சிந்திப்பார். தாம் நிஷ்டையில் இருக்கும் பொழுதிலேயே புலி முதலான பிராணிகள் அதனைக்கொன்று போய்விட்டால், என்ன செய்வோம் என்று, சிலசமயங்களில் ஏங்குவார். இங்ஙனம் அவ்வுண்மைத் துறவியின் மனத்தில் மானைப் பற்றின நினைவு மிகவும் அழுத்தமாக வளர்ந்து போயிற்று.

சில நாட்களுக்குப் பிற்பாடு, பரத யோகிக்கு மரண காலம் நேர்ந்தது. அப்பொழுதும்கூட அந்த யோகி மானை நினைந்த வண்ணமே மரண மடைந்து போனார். மரண காலத்தில் மாற்ற முடியாமல் இருந்த மான் ஆசையானது அவருக்கு மறு ஜநனத்தில் மான் பிறப்பையே உரிமையாக்கிற்று. அந்த

உயர்ந்த முனிவர் தமது முன்னைய நினைவு மாறப் பெருமலையே மான் வடிவத்தைப் பெற்றுப், பலநாள் வரையிலும் வருந்தினர். ஆதலால், எப்படிப்பட்ட துறவிகளா யிருந்தாலும் ஆசை முளையை அறுத் தெரியாவிட்டால், பிறவித் துன்பம் தொலையமாட்டாது. —பாகவதம்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

—(o)—

38—ஊழ், இராமன்

புண்ணியம் பாவம் என்ற இரண்டு வினைப் பயன்களையும் மறு பிறப்பில் அவற்றைச் செய்தவனைச் சென்று சேரப் பண்ணுகின்ற ஒழுங்குக்கு ஊழ் என்று பெயர் உரைப்பார்கள். ஊழ், பால், முறை முதலியன ஒரு பொருளை உணர்த்த வந்த பெயர்கள். இவ்வூழ் பொருளுக்கும் இன்பத்துக்கும் பொதுவாகாமல் அறத்துக்கு மாத்திரம் தொடர்ச்சி கொண் டிருக்கும். புண்ணிய வூழ், பாவவூழ் என்று ஊழ் இரண்டு வகைப்படும். புண்ணிய வூழாவது நல்வினைப் பயன் தன்னைச் செய்தவனைச் சென்று சேருவது. பாவ வூழாவது தீவினைப் பயன் தன்னைச் செய்தவனைச் சென்று சேருவது.

ஒருவனுக்குப் புண்ணிய வூழ் பயன்தர வரும் பொழுது முயற்சியும் சுறுசுறுப்பும் மிகுந்து பெருகும். தொட்டவை யாவும் தங்கமாக மாறும். செல்லும் இடங்களில் செல்வாக்கு வளரும். பெரிய பகைவர்களும் பணிந்து வணங்குவார்கள். கொடிய விஷமும் அமிருதமாய்க் குணம் தரும். உலகத்தில் ஒருவனுக்கு ஊழின் வண்ணம் உணர்ச்சி உண்டாகுமே யல்லாமல், கற்ற நூல்களின் வண்ணம் கருத்து விளங்காது. கல்வி

புடைமை பொருளுடைமை என்ற இருவகைச் செல்வத்தையும் ஒன்றுபடக் கூட்டுவிக்கின்ற புண்ணிய வூழ் உலகத்தில் ஒருவனுக்குப் பெரும்பாலும் உண்டாவ தில்லை. உலகத்தில் இவ்விரண்டு செல்வங்களும் ஒன்றுக் கொன்று மாறுபட்டுக் கொண்டு வேறு பிரிந் திருக்கும்.

பாவ வூழ் வந்து ஒருவனைப் பற்றிக்கொள்ளும் பொழுது, சோம்பல் மிகுந்து, அவன் அறிவு அறியாமையில் அமிழ்ந்தி, அல்லற்பட்டு வருந்தும். அவன் அரசு, ஆண்மை முதலியவை யானை உண்ட விளங்கனியைப்போல இருந்த விடம் தெரியாமல் மறைந்து தொலைந்து போகும். பூட்டப்பட்ட விலங்கு பொன்னால் செய்திருந்தாலும், அல்லது இரும்பினால் செய்திருந்தாலும், பூண்பவனை ஓடித் தப்ப வொட்டாமல் உயர் சிறை செய்வது போலப், புண்ணியம் பாவம் என்ற இருவகைப்பட்ட வூழ்களும் தம்மைச் செய்தவனை இன்ப துன்பங்களில் அமிழ்த்தி, எழ வொட்டாமல் தளைக்கும்.

ஊழ் வினையை அநுபவியாமல் அகற்றிக்கொள்ள முடியாது. ஊழின் முறையில் வரவேண்டியவற்றை வெறுத்துத் தள்ளினாலும், அவை வாராமற் போகமாட்டா. அங்ஙனமே வரத் தகாதவற்றை விரும்பி வேண்டினாலும், அவை வந்து அடைய மாட்டா. கடவுள் நமக்கு ஊழின் விளைச்சலாக வகுத்திருக்கின்ற வகையினால் அல்லாமல், பொருளைக் கோடிக் கணக்காகக் குவித்துச் சேர்த்தவர்களுக்கும் அவற்றை அநுபவிக்க முடியாது.

தசரத சக்ரவர்த்தியின் புத்திரனாகிய ராமன் உத்தம குணங்களுக்கு உறைவிட மானவன். பார்த்தவர் விரும்பும் பேரழகைப் பொருந்தினவன். அவனுக்குச் சமானமான பராக்கிரமம் உள்ளவர் அந்தக் காலம் முதல் இந்தக் காலம்

வரையிலும் இல்லை. இராமன் வசிஷ்ட முனிவரிடத்தில் வேதங்களையும், அவற்றின் அங்கங்களையும், சாஸ்திரங்களையும் கற்றான். அவன் தனது பதினைந்தாம் பிராயத்திலேயே தாடகை என்ற அரக்கியைக்கொன்றும், சுபாகுவை வதைத்தும், மாரீசனைத் துரத்தியும், விசுவாமித்திரருடைய வேள்வியைக் காப்பாற்றினான். மிதிலைப் பட்டணத்தில் சிவ பெருமானுடைய பெரிய வில்லை முரித்து, ஜானகியைக் கைப்பற்றினான். பராக்கிரமம் பொருந்திய பரசுராமரைப் பங்கப்படுத்தி அவர் தவங்களைப் பெற்றான்.

அப்படிப்பட்ட இராமனுக்கு மகுடாபிஷேகம் செய்ய முகூர்த்தம் நிச்சயித் திருந்தார்கள். அயோத்திப் பட்டணம் மிகவும் அழகாய் அலங்கரித் திருந்தது. ஜனங்கள் மாடங்களிலும் மேடைகளிலும் நின்றுகொண்டு, பட்டத்து யானையின்மீது பவனி வரவிருக்கின்ற புதிய வரசன் கோலத்தைக் காணக் காத்திருந்தார்கள். விதேச மன்னவர்களும், வியாபாரத் தலைவர்களும், படை வீரர்களும், தங்களை அலங்கரித்துக்கொண்டு, யானை குதிரை முதலான வாகனங்களின்மீது வரிசை வரிசையாக வந்துகொண் டிருந்தார்கள். வேதமந்திர வொலியும், வாத்திய கீத வொலியும், வானத்தில் மிக்கெழுந்து பரவின. மெள்ள மெள்ள முகூர்த்த காலமும் நெருங்கி வந்தது.

அப்பொழுது இராமன் எவரும் எதிர்பாராத விதமாக மரவுரி யாடையும், சடைமுடி வேடமும் பூண்டு, வில்லேந்திய கரத்தோடு அரண்மனையை விட்டு வெளியில் புறப்பட்டு வந்தான். அவன் மனைவி சீதை தவப் பெண்களைப்போலத் தாழ்ந்த வேஷம் தரித்துத் தலைவன் பின்னால் இருந்தாள். இராமனைப் போலவே இலக்ஷ்மணன் என்ற அவன் இளைய

சகோதரனும் தவக் கோலத்தோடு தமையனைத் தொடர்ந்து வந்தான். பட்டத்து யானையின்மீது பவனி வரவேண்டிய ராஜ வீதியில் இராமன் காலால் நடந்து கானகம் செல்லத் தொடங்கினான். வசிஷ்ட முனிவரால் நிச்சயிக்கப் பட்டிருந்த அவன் மகுடாபிஷேக முகூர்த்தம் வனவாச முகூர்த்தமாக மாறிப் போய்விட்டது. அந்தோ! அந்தப் பட்டணத்தில் அவன் செலவுக்கு வருந்தித் துன்பமுறாதவர் இல்லை. அவன் பதினான்கு வருஷம் வரையில் வனத்தில் வாசம் செய்வதன் பொருட்டுக் கானகம் சென்றுவிட்டான்.

அவன் விதி அதனுடனும் அடங்கிப்போகவில்லை. அவன் வனத்தில் இருக்கும்போது இலங்கைத் தீவுக்கு அரசனாகிய இராவணன் என்பவன் சீதையைத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டான். அந்தக் கொடிய வனத்தில் இராமன் தன்னை ஆற்றுவார் இல்லாமல் வருந்தியும், குரங்குகளை நட்புச் செய்துகொள்ள நெருங்கியும், மனைவியைக் கண்டுபிடிப்பதற்கு அந்தக் குரங்குகளையே ஏவியும், கஷ்டப்பட்டுக் கலங்கினான். முடிவில், அந்தப் புன்குரங்குகளையே படைகளாக்கிக் கொண்டு, கடலை அணைகட்டிக் கடந்து, இலங்கையை முற்றுகையிட்டு, இராவணனைக் கொன்ற பிற்பாடுதான் அவன் மனைவியை அடையலாயிற்று. இலங்கைப் பட்டினத்தில் அவன் அடைந்த கஷ்டங்களைக் கூறி முடியாது. ஆதலால், உலகத்தில் யாவராயிருந்தாலும், ஊழ்வினையை அநுபவித்தே தீரவேண்டும்.

—இராமாயணம்.

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

அறத்துப்பால்

முற்றுப்பெற்றது.

—(o)—

வித்தியார்த்திகளுக்கு அவசியமான புத்தகங்

சென்னை வித்தியாவிலாகா அதிகாரிகளால்
அங்கீகரிக்கப்பட்டவை.

அ

உலகநீதி உரையும் கதைக்குறிப்பும்	....	
ஆத்திசூடி உரையும் கதைக்குறிப்பும்	....	
கொன்றைவேந்தன் உரையும் கதைக்குறிப்பும்	....	
வெற்றிவேற்கை உரையும் கதைக்குறிப்பும்	....	
நல்வழியும் கதைக்குறிப்பும்	....	
மூதுரையும் கதைக்குறிப்பும்	....	
ஜயஸிங்கு (தேசிங்குராஜன் கதை)	....	1
ஜயதேவர் Part I	....	
ஜயதேவர் Part II	....	
ஜயதேவர் (இரண்டு பகுதியும் சேர்ந்தது)	....	1
பிருஹத் கதை (கதாபீடலம்பகம்)	....	1
சந்தரு (புதிய பதிப்பு)	....அச்சி	
திருக்குறள் வியாச மஞ்சரி (அறத்துப்பால்)	....	1
திருக்குறள் வியாச மஞ்சரி (பொருட்பால்)	....அச்சி	

கணபதி கம்பனியார்,

பிரய்பூர், சென்னை.

Kesari Printing Works, Madras.